# பெண்ணியம்

(21 சிறுகதைத்தொகுப்பு)



**பொன் குலேந்திரன் (கனடா)**

# பெண்ணியம்

*(சிறு கதைத் தொகுப்பு)*

***பொன் குலேந்திரன் (கனடா)***

**பெண்ணியம்**

*(சிறு கதைத் தொகுப்பு)*

***பொன் குலேந்திரன் (கனடா)***

© ஆசிரியர் | முதல் பதிப்பு: மே 2019

*Designed by*

மின்கவி
படித்திடு ! படைத்திடு !!

# ஆசிரியரின் பார்வை

மனிதப் பிறவியில் ஆணும் பெண்ணும் கலந்தால் ஒரு உயிர் உருவாகிறதுஇவர்கள் இருவருக்கும் உயிரை . உருவாக்குவதில் முக்கிய பங்கு உண்டு, ஆனால் பெண் மேலும் ஒரு படி மேலே போய் சிசு என்ற சுமையை சுமார் பத்து மாதம் சுமந்து பெற்றுக் கொண்டு அதன் பின் பாலூட்டி வளர்க்கிறாள் அதனால் இரு பால்களில் பெண்ணின் மதிப்பு . ) இந்து மதத்தில் அர்த்தநாதீஸ்வரர் இருமையின் .கூடDuality) எடுத்துக்காட்டு சிவனும் சக்தியும் சக்தியும் ஒன்று கலந்த தோற்றம்அறிவியலின் எடுத்துக்காட்டு இதனை இந்து மதம் சொல்கிறது.

பல நாடுகளில் பெண்ணுக்குக் கொடுக்கும் மதிப்பு மாறு பட்டதுசௌதி அரேபியா போன்ற மத்திய கிழக்கு . நாடுகளில் பெண்களைப் பிள்ளை பெறும் இயந்திரமாகவும், ஆண்களின் காம இச்சையைப் பூர்த்தி செய்யும் கருவியாகவே கருதுகிறார்கள் இந்து மதத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் . முக்கியத்துவம் கொடுத்து சக்தி, சிவன் என்ற தோற்றத்தில் வழிபடுகிறார்கள் அரசியலில் பெண் உரிமை பல . நாடுகளில் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆயுதமாகப் ஜெயலலிதா .பாவிக்கப்படுகிறது, மார்கரெட் தாட்சேர் போன்ற அரசியல்வாதிகளும் அன்னை திரேசாகாரைக்கால்அம்மையார்., புலோரென்ஸ் நைட்டிங்கேள் போன்ற சமூக, ஆன்மீக பெண் வாதிகளும்,

வேலு நாச்சியார், ஜான்ஸ்கி போன்ற வீராங்கனைகளும் இன்றும் பெருமையாக பெசப்படுகிறார்கள்.

இந்த கதை தொகுப்பு சற்று வித்தியாசமாக எழுதப்பட்டது . ஒவ்வோரு கதையில் வரும் முக்கிய பெண் பாத்திரத்தின் . பெயர் கதையின் தலைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது இந்தக் கதைகள் பெரும்பாலும் உண்மை சம்பவத்தை அடிப்படையாக வைத்துப் புனைவும் கலந்து உருவாக்கப் பட்டவைகண்ணம்மா என்ற முதல் கதை ஈழத் தமிழர் . சீதனம் கொடுக்கும் கலாச்சாரத்தில் ஈழத் தமிழர்களின் தேசீய தலைவர் கொண்டு வந்த பெரும் மாற்றத்தால் பெண்களுக்கு சம உரிமை கொடுக்கப்பட்டு தமிழ் ஈழ விடுதலை போராட்டத்தில் பெண் முக்கிய பங்கு வகிக்க வைத்தது பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் ஆகிய . தேசங்களில் பெண்களுக்கு எதிரான அடக்கு முறையில் தலீபன் என்ற இஸ்லாமிய தீவீரவாதிகள் பெண்களின் அவர் . கல்விக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினர்களின் பிற்போக்கு கொள்கையினால் பாதிக்கப் பட்ட பாகிஸ்தானியச் சிறுமி மெகலாவின் வீரச் செயலை கருவாகக் கொண்டு எழுதப் பட்ட வீரலட்சுமி என்ற கதை, இத் தொகுப்புக்குள் அடங்கும் இலங்கையில் வாழும் ரொடியோ என்ற தலித் இனப் பெண் ஒருத்தியின் கதையும் இத் தொகுப்புக்கள் அடங்கும் அண்ணல் அவர்களை உயர் அரச அதிகாரிகள் தங்களின் சின்னவீடாகவே வைத்திருந்தனர்

*Feminism* என்னும் ஆங்கிலச் சொல் *Femina* எனும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானதுஇதன் பொருள் . .பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும் இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண் நிலை ஏற்பு, மகளிரில், பெண் நலக்கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

பெண்ணியம் என்ற சொல் நடப்பில் நிலைபெற்று விட்டது என்பதாலும், கருத்துக் குழப்பத்திற்கு இடம் தராமல் தெளிவாக உள்ளதாலும் பெமினிசம் என்கிற ஆங்கிலச் சொல்லின் தமிழ் இணைச் சொல்லாக இது வழங்கப்பட்டு வருகிறதுபெமினிசம் என்பதற்குப் பெண்ணியம் என்பதே . .பொருத்தமான கலைச் சொல்லாகும்

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றைக் களைய முற்படும் இயக்கமாகும்அதன்மூலம் உலகளவில் அரசியல்., பண்பாடு,பொருளாதாரம், ஆன்மீகம் ஆகியவற்றில் நல்ல மாற்றத்தை உருவாக்கிட முடியும்சார்லஸ் பன்ச் என்பவர் ., "பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும். என்று எடுத்துரைத்தார் "

தெற்காசிய நாடுகள், பெண்கள் சமூகம், அலுவலகம், குடும்பம் போன்றவற்றில் ஒடுக்கப்படுவது பற்றிய விழிப்புணர்ச்சியையும், அத்தகைய இழிவுபடுத்தும் போக்கினை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும்

*ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயல்படும் தன்மையைப் பெண்ணியம் கொண்டுள்ளது.*

*இத்தொகுப்பில் உள்ள 21 கதைகள், பெண்களுக்கு மட்டும் அல்ல குடும்பத்தில் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து வாழ உதவும் என்பது என் நோக்கம்பொறுமையாக . .இருந்து வாசித்து உள்வாங்கி விமர்சியுங்கள்*

***பொன் குலேந்திரன் (கனடா)***

# அணிந்துரை

**'பெண்ணியம்''** என்ற பெயரிட்ட சிறுகதை நூலுக்கு முன்னுரை ஒன்று எழுதித்தரும்படி குவியல்களாகவே கதைகளை எழுதும் பொன் குலேந்திரன் கேட்ட பொழுது சற்றுத் தயக்கமாகவே இருந்தது. பெண்ணியம் என்ற தலைப்பில் கட்டுரைகளும் நூல்களும் வந்துள்ளன. ஆனால் 'பெண்ணியம்'' என்ற தலைப்பு சிறுகதைகளுக்கு எப்படி அமைந்து விடும், அது வாசகருக்கு மயக்கந் தராதா என்ற எண்ணம் என்னுள் குடி கொண்டிருந்தது. அவருடைய முகவுரையில் அந்த மயக்கம் தெளிவாக்கப்பட்டது.

சமயங்கள் பெண்களைச் சாமானியமான பிறவிகளாக வகுக்கவில்லை. எப்பொழுதும் 'பெண்'' ஜீவாத்மாவாகவம் ஆண் 'பரமாத்மா''வாகவும் படைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அர்த்தநாரீஸ்வரர் வடிவத்திலும் இறைவன் அர்த்த நாரீஸ்வரராகப் படைக்கப்பட்டிருப்பதாக இந்து சமயத்தில் ஆண்-பெண் வேறுபாடின்றிச் சமமாக இயங்குவதாகக் கருதுவதும் இல்லை. காவிய மரபிலே 'நாயகனுக்கு'' வழங்கப்பட்ட உச்சமான கௌரவம் பெண்களுக்கு இல்லை. இவ்வழி வந்த மரபில் வாழும் சமூகத்தில் பெண் 'நல்ல பெண்மணி''யாக வாழத்தான் சமூகம் எதிர்பார்க்கிறது என்பதற்கு நான் வளர்ந்த காலத்தில் வானொலியில் ஒலித்துக் கொண்டே இருந்த பாடல் 'நல்ல

பெண்மணி, மிக நல்ல பெண்மணி" இப்பாடலில் பெண் நாட்டின் பண்பாட்டைப் பேணினால் போதும், அரசியலில் அவள் புக மாட்டாள். புகுந்த வீட்டில் எப்படி இருப்பாள்" என்ற அறிவுரைகள் கொண்டிருந்தது. அவள் போன்ற பிரகிருதிகளை ஆக்க தொலைக்காட்சி தொடர்கள் இன்று பெரும் முயற்சியில் ஈடுபடுகின்றன.

நூலில் வரும் ஒவ்வொரு சிறுகதையின் மையப் பாத்திரம் பெண்ணாக இருக்கும் கதைகளாக இருப்பதால் அக்கதைகள் ஒவ்வொன்றிற்கும் அப்பாத்திரங்களின் பெயர்களை வைத்திருப்பதாக எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார். உரைகல்லால் உரசித் தங்கத்தை மதிப்பிடுவது போல் கதை சொல்லும் பாங்கில் தனக்கென ஒரு தனியான பிடியை வைத்து தினமும் கதை எழுதும் பொன் குலேந்திரன் கதைகள் ஒரு தனி ரகம்.

உண்மைக் கதைகள் எழுதுபவர்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளனர். கதைப் பொருளை எடுத்து அதைச் சுற்றி அவ்வட்டங்கள் பிடிப்பது போல விவரங்களை அளவுக்கு விஞ்சிச் சேர்த்துக் கொள்ளும் போது அக்கதையின் ஆழமும் கதையில் வாசிப்போர்க்குச் சொல்ல வந்த சேதியும் மறைந்து விடும் பண்பு பலரிடம் உண்டு. ஆசிரியர் நிதானமாக அவரது குரல் தொனிக்க நிதர்சனமாகக் கதைகளில் கதை மாந்தரை உலாவ விடுகிறார். மக்கள் வாழ்ந்த சூழலில் அவரும் வாழ்ந்து கதை ஆசிரியர் சுதந்திரமாகப் பெண்களை இயங்க வைப்பதில் மிகுந்த

கரிசனை உடையவர். அவரது தனிப்பட்ட வாழ்வில் சுதந்திரமாக இயங்கும், அரசியல் ஞானமுள்ள ஒரு பெண்ணை வளர்த்துள்ளமை நான் அறிவேன், 'இது என்ன திருமணம் பண்டமாற்று வியாபாரமா?'' என கண்ணம்மா என்ற பாத்திரத்தைப் பேச வைக்கிறார் ஆசிரியர். சீதனத்தின் கொடுமை பெண்களை எவ்வளவு தூரம் பாதிக்கின்றது என்பதை 'எனக்குத் தெரிந்த சீதனக் கொள்கையால் பாதிக்கப்பட்ட இரு சினேகிதிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து செயல்படுகிறோம்'' என்று கூறுவதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

அவருடைய கதைகளில் அவர் கால கட்டத்தில் எங்கள் நாடு கண்ட போர், போரின் வடுக்கள், இயற்கை அன்னையின் அழகு சிதைக்கப்பட்டமை, வாழ்வியற் கோலங்களில் காணப்பட்ட மாற்றங்கள் ஊடுருவி நிற்கின்றன.

யாழ்ப்பாணத்தில் பிறந்து நல்லூர் வாசியாக இருந்த குலேந்திரன் யாழ்ப்பாணக் குடா நாட்டில் வழங்கிய பேச்சு வழக்கை வாழ்க்கையுடன் ஒன்றித்தவர் என்பது அவரது கதைகளில் வரும் 'பல்லி சொன்ன மாதிரி, தத்து மலடி, முடிப்பார், காப்பிரி, கொள்ளிவை'' போன்றன உதாரணங்களாகக் கொள்ளலாம். கட்டுரையில் விளக்கம் கொடுப்பது போல ஆதாரங்களுடன், உதாரணமாக, சின்னமேளம் என்ற பெயர் வந்த வரலாறு பற்றி விரிவாகக் கூறுகிறார்.

சமூகச் சாபக்கேடுகள் பற்றிய அலசல் கதைகளில் கட்டுரைகளாகவும் மன விரக்தி வெளிப்பாடாகவும் வருகின்றது. கள்ளிப்பால் தொண்டையில் விட்டு பெண் சிசுவைக் கொல்லுதல், சின்னவீடு பற்றிய விளக்கம், சாதி சமய பேதங்களால் மனங்கள் மோதுண்ட செய்திகள். ஏமாற்றப்பட்டு கலியாணம் ஆகாது பிள்ளைகளைப் பெற்ற அவலப்பட்ட பெண்கள் பற்றி சமூகப் பிரச்சனையுடன் கதையை நகர்த்தி நியாயம் கேட்கும் போக்கு குலேந்திரனின் சமூக நீதிக்கான குரல் கொடுக்கும் அதற்கான ஆதரவு தேடும் போக்கு சமூகத்தால் ஆகர்சிக்கப் படவேண்டும். துணிவாக நின்று எழுதுவதும் தர்க்கரீதியாகச் சிந்திப்பதும் குலேந்திரனின் குணாதிசயம் எனலாம். அவருடைய பெண்ணியம் கதைத் தொகுதி பற்றி 'தெற்காசிய நாடுகள் பெண்கள், சமூகம், அலுவலகம், குடும்பம் போன்றவற்றில் ஒடுக்கப்படுவது போன்ற விழிப்புணர்ச்சியையும் அத்தகைய இழிவுபடுத்தும் போக்கினை மாற்றி அமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படும் தன்மையைப் பெண்ணியம் கொண்டுள்ளது'' என அவர் கூறும் முன்னுரை மக்களிடையே விழிப்புணர்வை எழுப்பும் என்பது திண்ணம் 'இக்கதையில் உள்ள 21 கதைகள் பெண்களுக்கு மட்டும் அல்ல. குடும்பத்தில் கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து வாழ உதவும் என்பது என் நோக்கம்'' என குலேந்திரன் கதைகளின் மூலக் கருவாகப் பெண் பாத்திரத்தை வைத்து சமூக நீதிக்கான சிந்தனையைத்

தூண்டும் நோக்கத்தை கதைகளின் ஓட்டமாகக் கொண்டு செல்கிறார். ஒவ்வொரு கதையிலும் 'நியாயம்'' எது என வாசகர்கள் அறிய வைக்கின்றார். 50 வயதுக்கு மேலான ஜெயரத்தினமும் 21 வயதான சாந்தியும் காதல் வயப்படுவதை நியாயப் படுத்துகிறார்.'காதல் பற்றிய உணர்வுகள் தனியாகச் சிற்றின்பத்துக்கு உரியதாக இல்லாமல் பல்வேறுபட்ட உணர்வுகளின் மனப் பொருத்தப் பாடாகவும் அதன் சங்கமமாகவும் கொள்கின்றார். டிறம்-மெலனி காதலையும் கதையூடாக விமர்சிக்கின்றார்.

ஒரு ஆணும் பெண்ணும் பேசத் தொடங்கினால் அது பற்றித் தமிழ்ச் சமுதாயம் கொள்ளும் அர்த்தத்திற்குச் சவால் விடுகிறார். எங்கள் சமூகத்தில் மட்டுமல்ல மெனனைட் சமூகத்திலும் பெண்ணின் விருப்புகள் புதைக்கப்படுவதைக் காட்டுகிறார்.

விதவைப் பெண்ணின் அவலத்தைப் பிராமணப் பெண்ணான மங்கையம்மாள் மூலம் வெளிக்கொணர்கின்றார். தனிமை போக்குவதற்கான கருத்தில் சமூக முரண்பாட்டை மங்கையம்மாளின் உள ஊசலாட்டத்துக்கு ஊடாக காட்டி வயது வந்தாலும் காதல் மலரலாம் என்ற மனித உணர்வுகளின் சங்கமமாகக் கொண்டும் சாதிக்கும் காதலுக்கும் தொடர்பு படுத்தக் கூடாது என்பதையும் நாசூக்காக எடுத்துச் சொல்கின்றார். சாதி மணம், வயது வந்த திருமணம். ஆண்-பெண் காதலற்ற நட்பு உறவை முற்போக்கான எண்ண உறுதிப்பாட்டுடன் கருவை

கதைகளில் புனைந்திருப்பது ஆசிரியரின் சமூகப் பார்வையின் போக்கைப் புடமிட்டும் செல்வதாக அமைகின்றது.

இந்நூலில் பெண்கள் சமுதாயத்தில் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் பல கதைகளில் இழையோட விடப்பட்டிருப்பதற்கும் பெண்ணியம் என்ற பெயர் சூட்டலுக்குமான நியாயப்படுத்தலுக்கும் உறவு உண்டு. 'மலடி'' என்ற சொல் தமிழ்ச் சமூகத்தில் ஒரு பெண்ணை எவ்வளவு தூரம் பாதிக்க வைக்கும் என்பதும் அது அம்பு போலப் பெண்கள் இதயத்தைத் துளைத்து ஊறு செய்வதும் ஆணுக்கு 'மலடன்'' என்ற பட்டம் கிடைக்காது. அவனது மலட்டுத்தன்மையும் அவள்தான் பொறுத்துக் கொள்ள வேண்டிய சமூகத்தின் எண்ணத்துக்கு நவீன அறிவியல் பரிசோதனை மூலம் வெளிச்சம் பாய்ச்சப்படுகிறது.

சமூகங்களில் நலிந்த சமூகங்கள் உலக சமுதாயம் எங்கும் உள்ளதை தமிழ் வாசகர்கள் அறிய வைக்கிறார். இலங்கையில் றொடியா, கனடாவில் மெலனைட் சமூகம் மற்றும் நலிந்து போன இனங்களான யூதர், கனடாப் பூர்வீகக் குடிமக்கள் பற்றிய விளக்கங்கள் மூலம் ஆசிரியர் மனிதாபிமானம் நிறைந்தவராக காணப்படுவதுடன் சமூக அறிவுப் பிரக்ஞையை மக்களுக்கு ஊட்டுகிறார். குலேந்திரனின் சமூக அறிவூட்டல் என்ற தூரத் தரிசனம் பிற சமூக எழுத்தாளரும் கைக் கொள்ள வேண்டும். அவருடைய சிறுகதைப் பாதை மரபுரீதியிலான சிறுகதை எழுத்தாளரிலிருந்து வேறுபட்ட

ஒரு போக்கை எடுத்துள்ளது. மனிதம் என்பது எது? மனிதாபிமானம் என்பது எது என்ற இரண்டையும் இணைந்து கதை புனைவது எளிதான விடயமல்ல. ஆசிரியர் இந்த யுக்தியில் சங்கமத்தை லாவகமாகக் கையாண்டுள்ளார். இரக்கும் சுபாவமும் நலிந்தோரை ஈடேற்ற வேண்டும் என்ற முனைப்புடன் செயற்படும் பாணியும் டயலிஸிஸ் (இரத்த சுத்தி) மூலம் வீட்டுக்குள் முடங்கப்பட்டாலும் அதனை வெல்கிறார். அவரது முயற்சியின் மூலம் எழுத்துகளால் நவீன மக்கள் மயமாகும். ஊடக மூலம் பிரபல்யம் அடைகின்றார்.

குலேந்திரன் அறிவுப் பசியைப் போக்கும் சிறுகதைகளில் சில கட்டுரைப் போல நீண்டு செல்வது போன்ற உணர்வைத் தருகின்றது. சமூகம் விடயங்களை அறிந்து ஆழச் சிந்திக்க வைக்கும் நோக்கம் அவரின் எழுத்துகளில் ஊடுருவி நிற்கின்றது. தனது எழுத்துக்களைத் தொடர்ந்து அக்கிரமம் , அநீதி ஆகியவற்றுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்துவது தொடர வேண்டும். உண்மைப் பொருளை விட்டு நிழலைத் தொடரும் எழுத்தாளர் போலன்றி குலேந்திரன் உண்மைப் பொருளுடன் உள்ளுடன் பொதிந்த படைப்புக்களைத் தந்து கொண்டு இருக்கிறார். அவரது வரலாற்றுப் படைப்புகள் கால தரிசனத்துடன் வரலாற்று தடயங்களை மனதில் கொண்டு எழுதப்பட்டவை. அவர் கொண்ட துணிவு பாராட்டத்தக்கது. அவரது சமூகநீதிக்கான போராட்ட உணர்வுகள் பொதிந்த ஆக்கங்களுக்கு வரலாற்றில் முற்றுப்புள்ளி இல்லை. சமமாக சமூகம் இயங்குவதற்கான

*வேட்கை கொண்ட குலேந்திரனின் தொடர்ச்சியான மின் நூல் வெளியீடு பரவலான சமுதாயத்தைத் தொடும். மாற்றங்கள் தொடர அவை வழிவகுக்கும். எழுதிக் குவிக்கும் எழுத்தாளர் நண்பர் குலேந்திரன் நலமுடன் நீடு வாழ்ந்து சமூகத்திற்கான குரலாக ஒலிக்கும் படைப்புகள் ஆக்க வாழ்த்துகள்.*

*மென்மையும் பெண்மையும் வாழ்க என*

*கூத்திடுவோம்!*

*சமத்துவம் நோக்கிய*

*நடை பயில்வோம்!*

***கலாநிதி பார்வதி கந்தசாமி***

***றொறன்ரோ (கனடா)***

***5.6.2019***

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| *1* | கண்ணம்மா | *1* |
| *2* | சூரியமாலா | *9* |
| *3* | வீரலட்சுமி | *17* |
| *4* | சந்திரவதனி | *29* |
| *5* | செல்லாச்சி | *39* |
| *6* | வைதேகி | *45* |
| *7* | அனித்தா | *54* |
| *8* | மைதிலி | *63* |
| *9* | பிலோமனா | *73* |
| *10* | தையல்நாயகி | *82* |
| *11* | களுவம்மா | *92* |
| *12* | அபிராமி | *100* |
| *13* | ஜேன் | *115* |
| *14* | மரியா | *135* |
| *15* | ஆனந்தி | *147* |

| | | |
|---|---|---|
| *16* | மங்கையம்மாள் | *158* |
| *17* | சாந்தி | *177* |
| *18* | செல்வராணி | *188* |
| *19* | சின்னத்தங்கம் | *197* |
| *20* | கிறிஸ்ரினா | *205* |
| *21* | திலகவதி | *220* |

# கதை 1
# கண்ணம்மா

யாழ்ப்பாணக் குடாநாட்டில், வலிகாமம் வடக்கில், பாக்கு நீரணையைத் தழுவி உள்ள கடலோரக் கிராமம் மயிலிட்டி. ஒரு நெய்தல் நிலக் கிராமம் அக் கிராமம் தமிழ் நாட்டில் உள்ள கோடியக்கரையில் இருந்து தெற்கே22 மைல் தூரத்தில், பாக்கு நீரணையின் இலங்கைக் கரை ஓரத்தில் அமைந்த கிராமம் என்பதால் அடிக்கடி அவ்வூர் மக்கள் தமிழ் நாட்டுக்குச் சென்று வருவதுண்டுஒருகாலத்தில் . இலங்கையின் பிரசித்தமான மீன்பிடி துறைமுகங்களில், இரண்டாம் துறைமுகமாய் திகழ்ந்த இடம் மயிலிட்டித் துறைமுகம்.

மாவீரர்கள் பலர் பிறந்த ஊர் என்பது அதன் தனிச் சிறப்பு. மயிலிட்டிக்கும் தமிழ் நாட்டுத் தலை நகர் சென்னையில் உள்ள மயலாபூருக்கும் ஒருகாலத்தில் தொடர்பிருந்ததாக வரலாறு சொல்கிறதுஅங்கிருத்து மயிலிட்டி கிராமம் . பகுதிக்கு; வந்த; நரசிங்கத்தேவன் என்ற சோழ அரச அதிகாரிக்குப் பாதுகாப்பாக இருந்த ஈட்டிப் படையின் இலட்சணை மயில்ஆகவே அதில் இருந்து மயிலும் . ஈட்டியும் இணைந்து மய ிலிட்டி என்ற பெயர் கிராமத்துக்கு மருவி இருக்கலாம்.வீரமாணிக்கதேவன் . ஆரியநாட்டுத் தேவன் பெயர் கொண்ட சோழ அரசின் தளபதிகள் இதன் அருகே சில பகுதிகளை ஆட்சி செய்ததாக இதில் இருந்து இவ்வூர் மக்களின் .வரலாறு சொல்கிறது

இரத்தத்தில் வீரம் செறிந்துள்ளது என்பது தெரிகிறத ு அந்த வீரம் கலந்த மண்ணில் பிறந்தவள் கண்ணம்மா அவளின் . தன் . சற்று நிறம் குறைந்தவள் . உயரம் ஐந்தடி பத்து அங்குலம் தற் பாதுகாப்புக்குக் கரத்தை, குத்துச் சண்டை சிலம்படி ஆகிய வீர விளையாட்டுகளை கற்றவள்அழகில் குறை . சற்று முற் . இருந்தாலும் குணத்தில் சிறந்தவள்போக்கு குணம் உள்ளவள்தன ஊரில் . சீதனம் கேட்பதை எதிர்ப்பவள் . பெணகளை மதியாது அவர்களின் உரிமைகளை, சமூகத்தில் இருந்து வரும் காலத்தோடுமாறாத மூடநம்பிக்கைகள் மூலம் பல உயர் வர்கத்து ஊர்வாசிகள் பறிப்பதை எதிர்த்து சில பெண்களோடு சேர்ந்து போர் கோடி உயர்த்தியவள் கண்ணமா . அவளோடு ஒரு பெண் இயக்கமும் . பொதுவுடைமை கட்சியாளர்களும் சேர்ந்து கொண்டனர் தன்னை பல முறை, பெண் பார்க்க வந்து சீதனம் கேட்டுபெற்றோருக்கு நன்கொடை கிடைக்காததால் பதில் . சொல்லாது சென்ற குடும்பங்களை நினைத்து அவள் மனதில் சமூகத்தின் செயலில் மேல் வெறுப்பு ஏற ்பட்டது .

நேற்று அவளை பெண்ணைப் பார்க்க மாவிட்டபுரத்தில் இருந்து வந்த குடும்பம் ஆறாவது குடும்பம்அக் குடும்பம் . அவளிடம் குறுக்கு விசாரணை செய்து முடிவு சொல்வதாக சென்றவர்கள் மூன்று நாட்கள் ஆகியும் பதில் அவர்கள் . சொல்லவில்லை

“அம்மா இரு நாட்களக்குப முன் என்னைப் பெண்பார்க்க வந்து சென்ற குடும்பம் இரு நாட்களில் முடிவு சொல்வதாக

சொல்லி சென்றவரக்களிடம் இருந்து ஏதும் பதில் வந்ததா . ஓய்வு பெற்ற போஸ்மாஸ்டர் நடராஜர் குடும்பத்தின் மூத்த நடராஜருக்கு மூன்று .மகள் கண்ணம்மா கேட்டாள் இரண்டாவது .மூத்தவன் செல்வன் . பிள்ளைகள் கண்ணம்மாகடைக் குட்டி கயல்விழி .

‘‘மகள் அவர்கள் பதில் சொல்லாதது சீதனப் பிரச்சனை தான் . வந்த மாப்பிள்ளையாயின் தாய் எங்களிடம் இருந்து பிடுங்க .முடிந்ததைச் சீதனமாகப் பிடுங்கப் பார்க்கிறாள் அவர் .மாப்பிள்ளையின் தகப்பன் ஒன்றும் பேசவில்லை மனுசிக்குபயம் போலத் தெரயுது நடராஜரின் மனைவி ‘‘ சிவகாமி சொன்னாள்

‘‘அவர்களுக்கு என்ன சீதனம் வேண்டுமாம்‘‘ அம்மா .?

‘‘அவர்களுக்கு இந்த வீடு, நான் போட்டிருக்கிற வைரத் தோடு, இருபது பவுனுக்கு நகை அதோடு நன்கொடை ஐம்பதாயிரம் சீதனமாக வேண்டுமாம்மாப்பிள்ளை அரசில் . நல்ல பென்சன் கிடைக்கும்பதவியில் இருக்கிறாராம் . இன்னும் இரண்டு வருஷத்தில் அவருக்குப் பதவி உயர்வு .கண்ணம்மாவின் தாய் சிவகாமி சொன்னாள்‘‘ கிடைக்குமாம்

‘‘அப்பா அவர்களுக்கு என்ன பதில் சொன்னார் அம்மா’’?

‘‘உன் அப்பாவைப் பற்றி உனக்குத் தெரியும் தானேஅவர் . ஒன்றுமே பேசாமல் என்னைப் பார்த்தார்எல்லா முடிவும் . ’’ நான் எடுக்க வேண்டும்

*“எதுக்கு அம்மா அவர்களுக்கு நன்கொடை வேண்டுமாம்? இன்ன வியாபாரமா”?*

*“தங்கள் மகளுக்குச் சீதனமாக கொடுக்கவாம்இருந்த காசு . முழுவதையும் மகனக்குப் படிக்கச் செலவு செய்து .” போட்டினமாம்*

*“இதேன்ன திருமணம் பண்ட மாற்று வியாபாரமா? நீ ஏன் அம்மா அவர்கள் என்னைப் பார்க்க வரும் போது நீ ஏன் உன் வைரத் தோட்டைப் போட்டுக் கொண்டு இருந்தனி? மாப்பிள்ளையின் தாய் அதைக் கண்டதும் கேட்டிருக்கிறா.”*

*“மகள், யாருக்குத் தெரியுமடி அந்த மனுசியின் பேராசைக் குணம்எதோ நல்ல சாதி சனம் ., ஜாதகமும் பொருத்தம்மாப்பிள்ளையும் அரசில் நல்ல உத்தியோகம். என்பதால் உன்னைப் பார்க்க அவர்களை வரச் சொல்லி தரகர்*

*“அம்மா என்னை பெண் பார்க்கா பல தடவை ஆக்கள் வந்து போயிருக்கினம் எல்லோரும் மகனுக்குச் சீதனமாக, வீடு, நகை நட்டு நன்கொடைவேண்டும் என்று பேரம் பேசி . இந்த சீதனம் கேட்கும் முறை முற்றிலும் .போயிருக்கினம் ”இல்லாமல் போகச் சட்டம் வரவேண்டும் அம்மா .கண்ணம்மா தன் கருத்தைத் தாயுக்கு சொன்னாள்*

“மகள் நீ இப்படிப் பேசுவதால் நீ ஆண் மூச்சுக்காரி எண்டு வந்த போன குடும்பம் தரகருக்கு சொல்லி இருக்குஅதோடு . நீ உன் தற்பாதுகாப்புக்குகாக பழகிய கரத்தை, குத்துச் சண்டை உனக்குத் தெரியும் என்று தரகர் உன்னைப் பற்றி அவர்களுக்குப் புகழ்ந்து பேசினது உனக்கு எதிராகப் போயிருக்கு. ”

“அம்மா விசித்திரமான சமூக போக்குபெண் அடக்க . ஒடுக்கமாக வீட்டில் சமையல் செய்து கொண்டு இருக்க வேண்டும்வடிவாக மூக்கு முழியுமாக இருக்க வேண்டும்., மாப்பிள்ளையை விட அதிகம் படித்து இருக்கக் கூடாது. மாமியாருக்கு .பெண்ணின் உடலில் குறை இருக்கக் கூடாது திருமணம் முடிந்தவுடன் .அடங்கி நடக்க வேண்டும் தனிக்குடித்தனம் போக வேண்டும் இப்படி ஏராளம் . .இப்ப காலம் மாறி போச்சு அம்மா .நிபந்தனைகள் உத்துக்குத்தான் சொத்து .உதெல்லாம் முந்தி ஒரு இருந்து வெளியிலை போகாமல் இருக்க சொந்தத்துக்குள்ளை மச்சானையும் மச்சாளையும் திருமணம் செய்து வைக்கும் .முறை இருந்தது

“மகள் எனக்கும் உன் அப்பாவுக்கும் தெரியும் உன் முற்போக்கு குணம்உண்டை வீர விளையாட்டுகள் பற்றி . எங்களிடம் இருக்கும் சொத்தை . ஊருக்குத் தெரியும் உனக்கும் உன் தங்கச்சிக்கும் சீதனமாக கொடுத்து திருமணம் உன் .செய்து வைக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்

அண்ணன் செல்வன் விடுதலை இயக்கத்தில ் சேர்ந்து மாவீரனாகி விட்டான்அவன் இருந்திருந்தால் உனக்கும் . அவனுக்கும் மாற்றுத் திருணத்துக்குப் பேரம் பேசி .”இருக்கலாம்

அம்மா விசர் என்ன கதை பேசுகிறாய்? அண்ணரின் தமிழ் இனப் பற்று பற்றி புரியாமல் பேசாதேஅவரின் வீரச் செயல் . இந்த நாட்டில் ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்துக்குப் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறதுஎனக்குத் தெரிந்த சீதனக் . கொள்கையால் பாதிக்கப் பட்ட இரு சினேகிதிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து செயல் ”.படுகிறோம்

“என்ன எதோ புது சாய் பேசுகிறாய்? நீயும் உன் தங்கச்சியும் திருமணம் செய்த எங்கள் குடும்பத்துக்கு வாரிசுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்இப்படி . .”பிற்போக்குத்தனமாகப் பேசாதே

“அம்மா எனக்குத் திருமணம் அவசியம் இல்லைஅறைக்கு . அவளுக்கு உங்கள் .என் தங்கச்சி இருக்கிறாள் சொத்தெல்லாம் கொடுத்து நல்ல மாப்பிள்ளையாய் பார்த்து .திருமணம் செய்து வையுங்கள் அவள் உங்களுக்குப் பேரனோ பேத்தியோ பெற்றுத் தரட்டும்என்னை விட்டு . ”விடுங்கள்

“எடியே இதென்ன புது சாய் பேசுகிறாய்? உதை உன் அப்பா கேட்டால் பிறகு எனக்குப் பிரச்சனை:”

கண்ணம்மா தாயுக்குப் பதில் சொல்லாமல் ன் அறைக்குள் போய் விட்டாள்.

****

நாட்கள் உருண்டோடின .நடராஜர் குடும்பம் தங்கள் மகள் கண்ணம்மா விடுதலை புலிகள் இயக்கத்தில் சேர்வாள் என எதிர்பார்க்கவில்லை கண்ணம்மா எழுதி வைத்துச் சென்ற . . கடிதத்தை நடராஜர் எடுத்து வாசித்தார்

என் அம்மா, அப்பா, தங்கச்சிக்கு கண்ணம்மா எழுதுவது இனி நீங்கள் என்னைத் தேட வேண்டாம் . எனக்கு கலியாணம் பேசி கஷ்டப் படவேண்டாம் நான் விடுதலைப் புலிகள் . இயக்கத்தில் தமிழ் இன விடுதலைக்குக்காக சேர்ந்து என் அண்ணார் சென்ற வழியில் சென்று .விட்டேன் விட்டேன் உங்கள் இருவரினதும் ஆசையை என் தங்கச்சி பூர்த்தி செய்வாள்

**இப்படிக்கு**

**உங்கள் மகள்**

**கண்ணம்மா**

நடராஜர் கடிதத்தை வாசித்து முடிந்ததும் வீட்டின் முன் கதவு தட்டும சத்தம் கேட்டது. வந்தவர் தரகர் தம்பித்துரையர் .

''என்ன ஐயா நான் கேள்விப்பட்டது உண்மையே உங்கள் மகள் கண்ணம்மா இயக்கத்தில் சேர்ந்து விட்டாளாம்'' ஊர் பேசுகிறது .

*"துரை நீர் கேள்விப் பட்டது உண்மைஅது அவள் எடுத்த . .என்றார் நடராஜர் "முடிவு*

*"கண்ணம்மாவின் நல்ல முடிவு ஐயாஇன்னொரு . "செய்தியை உங்களுக்கு சொல்ல வந்தனான்*

*"என்ன செய்தி எண்டு சொல்லுமேன் துரை"*

*"வைரத்தோட்டை சீதனமாக் கேட்ட மாவிட்டபுரம் குடும்பத்திலிருந்த அரசில் வேலை செய்த மாப்பிள்ளை லஞ்சம் வாங்கியதுக்கு ஊழல் கட்டுப்பாட்டு இலாக்காவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்குறைந்தது . அவருக்கு மூன்று வருஷம் சிறை கிடைக்கும் என்று ஊரிலை துரை சொன்னார் "பேசிக் கொள்ளினம்*

*நடராஜர் மனைவியைப் பார்த்துச் சிரித்தார்*

***(யாவும் புனைவு)***

# கதை 2
# சூரியமாலா

இலங்கையின், மலை நாட்டின் தலை நகரமாம் வரலாறு உள்ள கண்டி நகரை அறியாதவர் இல்லைகண்டியில் . இருந்து கொழும்பு செல்லும்A1 பெரும்பாதையில் மூன்று மைல் தூரத்தில் உள்ள நகரம் பேராதனை பேராதனை . பூந்தோட்டம், மகாவலி கங்கை , பேராதனைப் பல்கலைக் கழகம், பேராதனை தாவரவியற் பூங்கா போன்ற பிரசித்தமான இடங்களைக் கொண்ட நகரம் .19 நூறாண்டில் கண்டியின் கடைசி மன்னன் ஶ்ரீ விக்கிரமராஜசிங்கா, கோடைக் காலத்தில் என்ற தலித் இனத்தைச் சேர்ந்த ”ரோடி“ அழகுள்ள வைப்பாட்டிகளுடன் உல்லாசமாக அந்த மாளிகையின் அந்தப்புரத்தில் களித்ததாக வரலாறு சொல்கிறதுமன்னர் மட்டுமல்ல மன்னரின் பல . அதிகாரிகளும் ரோடி பெண்களை வைப்பாட்டிகளாக பிரித்தானியர் ஆட்சி காலத்தில் இருந்த .வைத்திருந்தனர் ) மெய்லாந்துMaitland) என்ற ஒரு கவர்னர் லவனியா )Laviiya) என்ற தலித் இன நாட்டிய அழகியை காதலியாக வைத்திருந்தார் என்று வரலாற்றில் பதிவாகி உள்ளது .

டியோ தலித் இனம் தோன்றிய வரலாற்றுக்கு கதை உண்டு. இந்தியாவில் தலித் சாதி மக்களைப் போன்று சிறிலங்காவின் சிங்கள மக்களிடையேயும் ஒரு இனமுண்டுதீண்டாச் சாதி . என உயர் சாதி சிங்களவரால் ஒதுக்கிவைக்கப்பட்ட ரோடி

என்ற சிங்கள சாதி மக்கள், தாம் இராஜ பாரம்பரை வழி வந்தவர்கள் என்ற ஒரு மர்மத்தைப் புதைத்து வைத்துள்ளார்கள்இராஜபரம்பரை வந்தவர்கள் எவ்விதம் . ஒதுக்கப் பட்டார்கள் என்பது ஒரு புனைக் கதையா அல்லது உண்மைக் கதையா என்பது ஆராச்சிக ்குரியதுபல . நூற்றாண்டுகளாக அடக்கி ஒடுக்கப்பட்டு வாழ்ந்த இவர்கள் நடவடிக்கைகளால் அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டு ரோடியோ என்ற சிங்களச் சொல் சிங்களவர்களிடை ையே ஒரு இழிவுச் சொல்லாகவே கருதப்படுகிறது.

12ம் நூற்றாண்டில் வாழ்ந்த முதலாம் பராக்கிரமபாகுவின் மகளான இரத்தினவள்ளி அல்லது நவரத்தினவள்ளி என்பவளின் வழிவந்தவர்களே இந்த ரோடியோ சாதி மக்கள் என்கிறார்கள் சில சரித்திர வல்லுனர்கள்இராஜகுமாரியின் . வம்சத்தினர் தீண்டப ்படாதவர்களாக மாறியதுக்கு ஒரு மரபு வழி வந்த கதையுமுண்டுநூறு வருடங்களுக்கு முன்னர் . ஹியுகோ நெவில் என்ற பிரித்தானிய அரச அதிகாரி ரோடியோ இனத்தைப்பற்றிய மரபு வழி வந்த .கதையொனறை எழுதினார்

முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் போது அவரின் அரண்மனைக்குத் தினமும் ஒரு வேடன் வேட்டையாடி மான்

இறைச்சி எடுத்துச் செல்வது வழக்கம்சில காலத்துக்குப் பின் . அரண்மனைக்கு .மான்களுக்குத் தட்டுப்பாடு எற்பட்டது இறைச்சி கொடுக்காவிட்டால் தனக்குத் தண்டனை ஒரு நாள் .கிடைக்கும் என்ற பயம் வேறு வேடனுக்கு இறைச்சிக்குப் பதிலாக அரணமனை சமையல் அறைக்கு எடுத்துச்சென்றான்அதைச் சுவைத்த மன்னன் மகள் . .இரத்தினவள்ளி அதன் சுவையால் கவரப்பட்டாள் “இதுபோன்ற மாமிசத்தை நான் சுவைத்ததில்லைதினமும் . வென "இந்த மாமிசத்தை தவறாது கொண்டுவா வேடனு .வேடனுக்குக் கட்டளையிட்டாள்ம் இளவரசியின் கட்டளைக்கு அடிபணிந்து காட்டுக்கு விறகு பொறுக்கச் சென்ற சிறுவர்களை மானுக்கு பதிலாக வேட்டையாடி அவர்களின் மாமிசத்தை அரண்மனைக்கு தினமும் எடுத்துச் சென்றான்.

தன் மகனை சில நாட்கள் காணாத நாவிதன் ஒருவன் முறையீடு செய்யச் அரண்மனைக்குச் சென்ற போது அவனுக்குச் சோற்றுடன் மாமிசம் பரிமாறப்பட்டதுஅவன் . உணவை அருந்தத் தயாராகும் போது உணவில் தனது மகனின் உருக்குலைந்த விரல் மூட்டின் துண்டொன்று .மகன் இறந்தவிட்டான .இருப்பதைக் கண்டு திடுக்கிட்டான் என்றது அவன் ”அவனை யாரோ கொன்றுவிட்டார்கள் அதிர்ச்சியடைந்த நாவிதன .மனம் ் உணவை அருந்தாமலே

பயத்தில் உருக்குள் ஓடிப்போய் மக்களிடம் மன்னன் “ சிறுவர்களைக் கொன்று அவர்களின் மாமிசத்தைச் சமைத்து என ”என் மகனுக்கு நடந்ததைப் பாருங்கள் .உண்கிறான் அந்தச் செய்தி .விரல் துண்டைக் காட்டி முறையிட்டான் தீயென நாட்டில் பரவ, அரண்மனைப் பக்கம் சிறுவர்களை வேலைக்கு அனுப்ப மக்கள் பயந்தனர்மாமிசக் கதை . உடனே அவன் விசாரணை .மன்னன் காதுகளுக்கு எட்டியது செய்த போது தன் மகள் இரத்தினவள்ளியும், இறைச்சி கொண்டு வந்த வேடனுமே காரணம் எனக் கண்டுபிடித்தான். இறச்சி கொண்டு வந்த வேடனுக்கு மரணதண்டனை மகள் .கொடுக்கப்பட்டதுமேல் கோபமுற்ற மன்னன், அவளுக்குத் தண்டனையாக அவள் அணிந்திருந்த விலையுயர்ந்த ஆபரணங்களைக் கலைந்து, அரண்மனையில் வாழ அவள் தகுதியற்றவள் என முடிவு செய்து, அரண்மணைத் தோட்டத்தைத் துப்பரவாக்கும் தோட்டி சாதி ஒருவனுக்கு மணமுடித்து வைத்து, அவனோடு போய் அவன் சாதி மக்களோடு ஒதுங்கி வாழ் எனத் துரத்திவிட்டான். இந்தக் கதை எவ்வளுவுக்கு உண்மை என்பதற்கு போதிய .ஆதாரங்கள் இல்லை

ரோடி இன தனிநபர் வீட்டை ஒரு காலத்தில் ”குப்பையாமா“ சமுதாயத்தின் உயர் ஜாதி . என்று சிங்களத்தில் அழைத்தனர் உறுப்பினர்களிடமிருந்து கிராமங்களில் இருந்து அடிக்கடி அணுக முடியாத இடங்களில் இவை இருந்தன அவ்விடத்தில் வசதிகள் இல்லைகண்டியின் இராச்சியத்தின் .

காலப்பகுதியில், ரோடி குடும்பங்கள் தங்கள் கூரையில் ஒரு கைமரம் ஒன்றை மட்டுமே வைத்திருக்க முடிந்தது, இலைகள் மற்றும் கிளைகள் கொண்டு குடிசையின் கூரையை உருவாக்க வேண்டும்முன .ஂ கதவு தென்னந்தோப்புடன் இருக்க வேண்டும்இருப்பினும் ., இன்றைய தினம், குப்பையாம அடையாளம் காணும் அடையாளங்களிடமிருந்து விலகி, சமுதாயத்தில் இணைந்திருப்பதோடு தங்கள் விருப்பங்களையும் திறமையையும் கருதி தங்கள் வீடுகளை கட்டியெழுப்பினர். இந்த புரட்சிக்கு ரோடியோ இனத்தில் பிறந்த ஒரு பெண்ணே காரணம்

****

பல நூற்றாண்டுகளுக்குப் பின் இருபதாம் நூற்றாண்டில் சூரியமாலா என்ற ரோடியோ இன பேரழகி பேராதனைக்கு அருகே உள்ள சூரியகொட என்ற குக் கிராமத்தில் வாழும் ரோடியோ இனத்தில் பிறந்தாள்“ .சூரியமாலாஎன்பது ” சூரியகாந்தி மலர் போன்ற பெண் என்பது அர்த்தம்அவளின் . தாய் ரன்மெனிக்கே அந்தக் கிராமத்தின் அதிகாரியான விஜயநாயக்கா என்ற தொட்ட முதலாளி என்பவரின் மூத்த தாயைப் போல் சூரியமாலாவையும் .வைப்பாட்டி தங்களின் வைப்பாட்டியாக வைத்திருக்கப் பல உயர் சாதி செல்வந்தர்கள் முயன்றாலும் அவளின் உறுதியான மனக் கட்டுப்பாட்டினால் அவர்களின் முயற்ச்சி வெற்றிபெறவில்லை .

அக்கிராமத்தில் ரோடி இனத்து சிறுவர்களுக்கு கல்வி பயிலும் வசதிகள் இருக்கவில்லைஅவர்கள் படிப்பறிவு . .இல்லாதவர்களாகக் கூலி வேலை செய்து வாழ்ந்தார்கள சூரியமாலாஅவளின் இனத்தில் பிறந்த மாறுபட்ட பெண ் . புத்திக் கூர்மை உள்ள அவள் கல்வி பயிலும் ஆர்வம் உள்ளவள் ஒரு காலத்தில் அரச கட்டளைப் படி ரோடி அது உயர் . பெண்கள் மேலாடை அணிவதில்லை வர்க்கத்தினரின் பால் உணர்வைத் தூண்டும் மரபுவழி வந்த .அவள் அதக்கு எதிராகப் போராடி வென்றாள் .கலாச்சாரம் அவள் தான் கல்விபயில வேண்டும் என்று தன் விருப்பத்தை தாயுக்கு எடுத்துச் சொன்னாள் அவளின் தாயும் தன் மகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய விஜயநாயக்காவுக்கு எடுத்துச் சொல்லி அவரின் சம்மதத்தைப் பெற்றாள்தனது . வைப்பாட்டிக்குப் பிறந்த மகள் சூரியமாலா மேல் அவள் அழகி என்பதால்அவருக்கு ஒரு பெருமையும், பாசமும். அவளின் அறிவுக் கூர்மையையும், பேச்சு வல்லமையையும் கண்டு அவர் வியந்தார்.

ரோடியோ தலித் இன மக்களுக்கு அக்கிரமத்தில் பல கட்டுப்பாடுகள் இருந்தது குப்பை அள்ளுவது ., மல சல கூடம் சுத்தம் செய்வதுதோட்டத்திலும் வயல்களிலும் . வேலை செய்வதுகுறிப்பிட்ட . கயிறு திரிப்பது போன்ற . தொழிலைச் செய்ய மட்டுமே கிராமம் அவர்களை அனுமதித்தது அவர்களைத் துப்பரவு இல்லாத குப்பத்து

அக்கிராமத்துப் .மக்கள் என் ஊர்வாசிகள் கணித்தனர் பாடசாலையில் சூரியமாலா படித்தது எல்லோருக்கும் மற்றைய .வியப்பைக் கொடுத்ததுஉயர் சாதி மாணவ, மாணவிகள் அவளைப் புறக்கணித்து நடத்தினர். பாடசாலையில் அவளின் அறிவு திறமையைக் கண்டு அவள் முதல் பரிசைப் பெற்றது எல்லோருக்கும் புரியாத புதிராக இருந்ததுஓரளவுக்குத் தமிழ் . சிங்களத்தோடு . ஆங்கிலம் மொழிகளையும் பேசக் கூடிய அதிசயப் பெண்ணாக அவள் இருந்தாள்அதுவுமல்லாம்ல் சில சமூக . பொதுவுடைமை தொண்டர்களினதும், விஜயசிங்காவினதும் உதவியோடு சுமார் 300 ரோடியோ இன மக்கள் வாழ்ந்த குப்பாயம்

பகுதிக்கு மின்சாரம், வீடு, தொழில்வைத்தியாசாலை . வசதிகளைச் செய்துகொடுத்தாள்தன் இனத்துப் . பிள்ளைகள் தவறாது பாடசாலைக்குப் போக வேண்டும் இன ஊர்வாசிகள் சூரிய மாலாவை தங்களின் தலைவியாக மதித்தனர்

****

சூரியமாலாவுக்குப் பேராதனை பல்கலைகழகதில் படிக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததுஅவளின் படிப்பு செலவை . அவற்றின் நோக்கம் . விஜயசிங்க கவனித்துக் கொண்டார் . சூரிய மாலாவைக் கிராம சபைக்குத் தலைவியாக்குவது

*தீண்டத் தகாத ஒரு .அதை அவ்வூர் மக்கள் அதை எதிர்த்தனர் பெண் எவ்வாறு கிராம சபையின் தலைவியாவது என்று .குரல் எழுப்பினர்*

*சூரியமாலா பல்கலைக் கழகத்தில் படித்து முதல் நிலையில் முதலாவது ரோடி பெண்ணாகப் பட்டம் பெற்று உதவி விரிவுரையாலரானாள்அவளின் நோக்கம் இலங்கையில் . வாழும் ஒதுக்கப்பட்ட சிறு பான்மை இனத்தவர்களின் அவளின் கனவின் படி புலமை பரிசு பெற்று பிரித்தானியாவில் உள்ள ஒக்ஸ்பேர்ட் பல்கலைக் கழகத்துச் சென்று, ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெறுவது என்பதே .*

****

*சில வருடங்கள்ஆராய்ச்சியின் முடிவில் . உருண்டோடின . நூலுக்குப் பொது "மறையும் இனங்கள்" சூரியமாலா நாடுகளின் பெருமை வாய்ந்த மான் புூக்கர் பரிசு (Common wealth Man Booker Prize) கிடைத்ததையிட்டு இலங்கை பெருமைப் பட்டு சூரிய மாலாவைக் கௌரவித்தது ஒரு . .தலித் இனப் பெண்ணின் கனவு மலர்ந்தது*

***(உண்மையும் புனைவும் கலந்தது)***

## *கதை 3*
## *வீரலட்சுமி*

*இலங்கையில் உள்ள வன்னிப் பகுதியில், வவுனியா மாவட்டத்தில் கண்ணகிபுரம், ஒரு பின் தங்கிய குக் கிராமம். சுமார் அறுநூறு குடும்பங்கள் வாழும் அக் கிராமத்தின் மக்கள் தொகை அறுபதில் சுமார் 4500. ஒரு குடும்பத்தில் சராசரி ஆறு பேர் இருந்தனர். கணவன் மனைவியைத் தவிர நான்கு குழந்தைகள் , அதில் அனேகர் ஆண்கள் . ஒரு குடும்பத்தில் சராசரி ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளே இருந்தனர் . அதனால் அந்தக்கிராமத்தில் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இந்த நிலையில் அக் கிராமம் கண்ணகியின் பெயரைக் கொண்டிருந்ததுக்கு மரபு வந்த கதைய்யொன்று உண்டு.*

****

*கிபி 113 முதல் 135 வரை ராஜரட்டவை ஆண்ட முதலாம் கஜபாகு மன்னன். சேரன் செங்குட்டுவனின் நண்பன் . சேரனின் அழைப்பினை ஏற்று கேரளாவில் நடந்த கண்ணகி விழாவில் கலந்து, அங்கு நடந்த அதிசயத்தை கண்டு கண்ணகி அம்மன் மேல் நம்பிக்கை கொண்டு கண்ணகி அம்மன் சிலையோடு யாழ் குடாநாட்டில், வடக்கே உள்ள மாதகல்லில் உள்ள ஜம்புகோளம் துறைமுகத்தில் வந்து இறங்கி, பூநகரி ஊடாக அனுராதபுரம் சென்று அடைந்தான் . போகும் வழியில் பல கண்ணகி கோவில்களை உருவாக்கிச்*

சென்றான். அவன் அப்படி உருவாக்கிய பத்தாவது கண்ணகி கோவில் முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில். கஜபாகு. வன்னி கிராமம் ஒன்றின் வயல் வெளியில், ஒரு மரத்தின் கீழ் உருவாக்கிய கோவில் கண்ணகிபுரம் கிராமத்தில் உள்ள பழமை வாய்ந்த சிறு கண்ணகி அம்மன் கோவிலும் ஒன்று. கண்டியில் நடக்கும் எசல பெரஹரவில் பத்தினி அம்மன் சிலையும் ஊர்வலமாய் இன்றும் எடுத்துச் செல்லப்படுகிறது அந்தக் கிராமத்தில் கண்ணகி அம்மன் கோவில் இருந்ததால் அந்தக் கிராமத்துக்கு கண்ணகிபுரம் என்ற பெயர்வந்தது .அதோடு தோற்று நோய்களால் ஊர் வாசிகள் பாதிக்கப் படவில்லலை. அற்புதம் நிறைந்த பெண் தெய்வம் அது காலப் போக்கில் அக் கோவிலுக்கு போட்டியாக அவ்வூரில் பெண்களை வெறுக்கும் திலீபன் இயக்கத்தால் சுடலைமாடன் கோவில் தோற்றுவிக்கப் பட்டு, அக்கோவிலுக்கு கிராமத்தில் முக்கியத்துவம் கொடுக்க கட்டாயப் படுத்தப் பட்டது. அப்படியிருந்தும் , குழந்தை

வரம் வேண்டி கிராமத்துப் பெண்கள், பல ஆண்களின் எதிர்ப்புக்கு எதிராக, கண்ணகி அம்மன் கோவிலுக்கு பொங்கிப் படைத்தனர்.

ஆணாதிக்கம் உள்ள அந்த கிராமத்தில் . பெண்களின் உரிமைகள் பல பறிக்கப் பட்டன . அக்கிராமத்தில் உள்ள பெண்கள் அனேகர் படிப்பறிவு இல்லாதவர்கள். அக்கிராமத்தில் உள்ள பாடசாலை, மாணவர்களுக்கு

மட்டுமே என்றால் எவரும் நம்ப மாட்டார்கள் . பிற்போக்கு எண்ணம் உள்ள திலீபன் இயக்கம் அக்கிராமத்தில் இயங்கி வந்தது . அந்தக் குழுவின் தலைவன் திலீபன் . அந்த இயக்கம் வைத்தது தான் அக் கிராமத்தில் சட்டம். பிற்போக்கு கொள்கை கொண்ட அக் குழு, அக்கிராமத்தில் நடை முறைப் படுத்திய சட்டங்கள் பெரும்பாலும் பெண்களின் உரிமைகளைப் பாதித்தவையாகவே இருந்தன. முக்கியமாகப் பெண்கள் படிக்கக் கூடாது. ஒரு குடும்பத்தில் இரு குழந்தைகளுக்கு மேல் பெண்கள் பிறக்கக் கூடாது. அப்படி பிறந்தால் பிறந்த பெண் குழந்தைக்குக் கள்ளிப் பால் கொடுத்துக் கொன்று விட வேண்டும் பகலில் பெற்றோரின் அனுமதி இன்றி வெளியில் வயது வந்த பெண்கள் போகக் கூடாது. அவர்கள் ஆடம்பரமான ஆடை அணியக் கூடாது. திருமணத்துகுப் பின் வேறு ஆடவரோடு பேசக் கூடாது. சொல்லப் போனால் காதலுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அப்படி மீறி ஆணும் பெண்ணும் காதலித்தால் பஞ்சாயத்தில் பெண்ணுக்கு தண்டனை அதிகம். பெற்றோர் பொருத்தம் பார்த்துச் செய்து வைத்த திருமணத்தையே அக்குழு அனுமதித்தது . விதவை திருமணம் தடை செய்யப்பட்டது, ஆனால் ஆண்கள் சின்னவீடு வைத்திருக்க அனுமதிக்கப் பட்டது. பெண்கள் வேறு கிராமங்களுக்கு பயணம் செய்யக் கூடாது. தற்காலத்தில் மற்றைய கிராமங்களோடு தொடர்பு குறைந்த கிராமம் கண்ணகிபுரம் விவசாயத்தையும்,

கைத்தொழிலையைம் நம்பி வாழும் கிராமம் கண்ணகிபுரம். அதில் விவசாயத்தில் நாற்று நடுவது. களை பிடுங்குவது, சாகுபடி செய்வது போன்ற தொழிலுக்கு பெண்கள் பாவிக்கப்பட்டார்கள் . கைத்தொழில், தையல். கைப்போருள்கள் செய்வது , கிடுகு பின்னல் போன்ற தொழிலுக்குப் பெண்கள் பாவிக்கப் பட்டனர் . அத் தொழில் செய்யும் போது அவரகள் இடையே பேசுவது குறைவு. அவர்களை மேற்பார்ப்பது ஆண்கள் . பெண்கள் வேலை செய்யும்இடத்தில் ஆண் ஆதிக்கம் தலை தூக்கி நின்றது

****

வீரலட்சுமி பிறக்கும் முன்பே வீட்டில் அவளுக்கு அவ்வளவு வரவேற்பு இருக்கவில்லை. காரணம் தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போதே ஸ்கான் செய்து பார்த்த போது பெண்குழந்தை என டாக்டர் சொன்னது அவளின் பெற்றோருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. “பெண்ணாகப் பிறந்தால் கிராமக் திலீபன் இயகத்தின் எதிர்ப்புக்கு எதிராக வேண்டி வரும் . நல்ல காலம் முதல் இரண்டு ஆண் குழந்ததைகளுக்குப் பின் பிறந்த முதல் பெண் என்பதால் அவளின் உயர் தப்பியது .

“என் மகன் இந்த கிராமத்தில் முருகேசு இவளை வளர்க்க என்ன பாடு படப் போறானோ” என்று முருகேசுவின் தாய் தெய்வானை ஆச்சியின் முணு முணுப்பு வேறு. டாக்டரிடம் கருவைச் சிதைக்க யோசனை முருகேசு கேட்டார். மாதங்கள்

கூடிவிட்டபடியால் கருவைச் சிதைத்தால் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என்றார் டாக்டர்.

முருகேசுவின் மனைவி தனலக்ஷ்மிக்குப் பெண் குழந்தையென்றால் கொள்ள ஆசை. தான் பிறந்த பிறகு தான், தன் தகப்பனுக்கு வழக்கில் நீண்ட காலம் இழுபறி பட்டுக்கிடந்த கிளிநொச்சியில் முப்பது ஏக்கர் வயலும் யாழ்ப்பாணத்தில் வீடுவளவும் கிடைத்தது என்று அடிக்கடி சொல்லி பெருமைப்பட்டுக் கொள்வாள். தன் மூத்த இரண்டு பெடியன்களும் வீட்டை தலைகரணமாக்குவதையும் அவர்களை தன்னால் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதையும் அவள் நினைத்துப் பல தடவை மனம் வருந்தியிருக்கிறாள். “நீங்கள் கொடுத்த செல்லத்தில் இரண்டு பெடியன்களும் என்றைச் சொல்லுக்கு மதிப்பு கொடுக்குதுகள் இல்லை” என்று முருகேசிடம் அடிக்கடி குறைபட்டுக் கொள்வாள் தனம். ஆசிரியாரான முருகேசு கல்வியை மதிப்பவர. அவருக்கு திலீபன் இயகத்தின் கொள்கை பிடியாது ..

சித்திரை மாதத்தில், மூலநட்சத்திரத்தில் ,வீரலட்சுமி பிறந்தபோது தெய்வானை பெத்தாச்சிக்கு அதிர்ச்சி. ஊர் சாஸ்திரி சதாசிவம், குழந்தையின் குறிப்பைப் போட்டுவிட்டு மூக்கில் விரலை வைத்தபடி யோசித்தார்.

*“என்ன சாத்திரியார். என் மகளின் குறிப்பு எப்படியிருக்கு?” ஆர்வத்துடன் கேட்டார் முருகேசு.*

*“பெண் மூலம் நிர்மூலம். வேறு என்ன சாஸ்திரியார் சொல்லப் போறார் “ என்று பக்கத்தில் இருந்து பல்லி சொன்ன மாதிரி சொன்னாள் தெய்வானைப் பெத்தாச்சி.*

*“எனேய். நீ வாயை வைத்துக் கொண்டு சும்மாயிரு. உனக்குத்தான் ஜென்மத்துக்கு பொம்பிள்ளைப் பிள்ளைகள் எண்டால் பிடியாதே. “ என்றாள் தனம் .*

*“பிள்ளைக்கு என்ன பெயர் வைக்க யோசித்திருக்கிறியள் “? சாஸ்திரியார் குறிப்பைப் பார்த்து விரல்களால் எண்ணியபடி கேட்டார்.*

*“இவருடைய அம்மாவிடை பெயர் வீரம்மா. என்றை அம்மாவின்றை பெயர் லஷ்மி. இரண்டையும் சேர்த்து வீரலக்ஷ்மி எண்டு பெயர் வைக்க யோசிச்சிருக்கிறோம்” என்றாள் தனம்.*

*“அது நல்ல பெயர். பெண்ணின் சாதகம் நல்ல கலையம்சம் உள்ள சாதனை படைக்கக் கூடிய சாதகம். புதன் நல்ல இடத்திலை ஆட்சி பெற்றுப் போயிருக்குது. வருங் காலத்தில் படித்துப் புகழும் தனமும் பிள்ளைக்குக் கிட்ட வாய்ப்புண்டு. ஆனால்…” தான் சொல்ல வந்ததை முடிக்கமுடியாமல் இழுத்தார் சாஸ்திரியார்.*

*“ஆனால் என்ன? உண்மையை மறைக்காமல் சொல்லும்.” முருகேசு சாஸ்திரியாரைக் கிண்டினார்*

*“சொல்லுறன் எண்டு தப்பா நினைக்காதையள். பிள்ளைக்கு ஏழிலைச் செவ்வாய். சனி பார்வை வேறு. பத்து வயசு மட்டும் கொஞ்சம் கவனமாயிருக்க வேண்டும். ஒரு தத்துக்கும் இடமுண்டு. ஒவ்வொரு சனிக்கிழமையும் செவ்வாய்கிழமையும் தாய் சரி, தகப்பன் சரி விரதம் இருந்து கண்ணகி அம்மனை வேண்டிபூஜை செய்தால் நல்லது.”*

*சாஸ்திரியார் சொன்னது முருகேசுவின் தலையில் கல்லைத் தூக்கிப் போட்ட மாதிரியிருந்தது. முருகேசுவின் மனதுக்குள் குழந்தை அற்ப ஆயுசுடன் போனால் என்ன?. கருவிலை தான் நினைத்த மாதிரி போயிருந்தால் என்ன எல்லாம் ஒண்டு தான் என நினைத்தார். பிள்ளை பிறந்த காலமோ என்னவோ அந்த வருடம் அவர் வயலில் விளைச்சல் அதிகம்.*

*வீரலட்சுமி வளரும் போதே வர்ண ஓவியங்களை கண்வெட்டாமல் பார்ப்பாள். பசியால் அழுகிற சமயம், வர்ணப்படம் ஒன்றை கையில் கொடுத்தால் போதும். பேசாமல் அதையே கண்வெட்டாமல் பார்த்து இரசித்தபடி இருப்பாள். ரேடியோவில் பக்தி பாடல்கள் போகும் போது காது கொடுத்து அசையாது கேட்டுக் கொண்டிருப்பாள். தன் சின்ன சிறு கைகளால் கை தட்டி இரசித்துச் சிரித்து மகிழ்வாள். மூன்று வயதைத் தாண்டியவுடன் அவளுடைய நடவடிக்கை எல்லோரும் ஆச்சரியப்படும் படியாக இருந்தது,*

வானொலியில் கேட்ட பக்திப்பாடல்களை ஒருவருடைய உதவியுமின்றி தானாகவே இனிமையான குரலில் பாடத் தொடங்கினாள். தனத்துக்குத் தன் மகளைப் பற்றி பெருமை . அடிக்கடி கணவனுக்குச் சொல்லி மனதுக்குள் பூப்படைவாள். இசையுடன் ஓவியம் வரைவதிலும் வீரலட்சுமி ஆர்வம் காட்டினாள். இரு அண்ணன்மாரின் புத்தகங்களை எடுத்து வாசிக்க முயற்சிப்பாள். அவள் கிராமத்து பாடசாலைக்குப் போய் கிராமத்தின் விதிகள் படி படிக்க முடியவில்லை . ஆசிரியராக இருக்கும் முருகேசு, வீட்டில் வைத்து வீரலட்சுமிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார்.அவளின் புத்திக் கூர்மையைக் கண்டு வியந்தார். தன் மகளுக்குக் கல்வி மேல் உள்ள பற்றுதலைக் கண்டு பல மைல்களுக்கு அப்பால் உள்ள நகரத்தில் இருக்கும் மகளிர் கல்லூரியில் பஸ்சில் தன் மனைவியோடு சென்று படிக்கக் கிராமத்தின் சட்டத்துக்கு எதிராகச் செயல் படத் தொடங்கினார். வீரலட்சுமி புத்திக் கூர்மையையும் ஓவியத்திறமையையும் இசைத்திறமையையும் கண்டு அவள் படித்த மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் வியப்படைந்தனர். ஒரு குழந்தைக்குப் படிப்போடு, இரண்டு கலைகளில் திறமை இருப்பது அபூர்வம். அதுவும் பத்து வயதில் குழந்தைக்கு இசையிலும் ஓவியத்திலும் இவ்வளவு திறமையிருப்பது கடவுளின் வரப்பிரசாதம் எனப் பலர் பேசியது தனத்துக்கு தலை கால் தெரியாத சந்தோஷம்.. அந்த மாவட்டப் பள்ளிக் கூடங்களுக்கு இடையே நடந்த ஓவியப் போட்டியில்

“தாயன்பு” என்ற தலைப்பில் ஒரு கால் முடமான கன்றுக் குட்டி தாயிடம் பால் குடிப்பதைத் தத்ரூபமாக வரைந்து முதல் பரிசை வீரலட்சுமி எட்டு வயதில் தட்டிக் கொண்டு போனது எல்லோருக்கும் வியப்பை அளித்தது. அதவுமில்லாமல் மாவட்டத்தில் நடந்த பாட்டுப் போட்டியிலும் அவளுக்கே முதல் பரிசு. கண்ணகி மான் கோயில் திருவிழாவில் குழந்தை வீரலட்சுமியின் தேவாரங்களையும், பாரதியார் பாடல்களையும் கேட்பதற்கே ஒரு தனிக் கூட்டம். பத்திரிகைகளில் பாராட்டி வீரலட்சுமியின் படத்துடன் அவள் வரைந்து பரிசு பெற்ற ஓவியம் பிரசுரமானது பலர் கவனத்தை ஈர்த்தது. இந்த சிறு வயதில் எங்கள் ஒரு பெண்ணுக்கும் இவ்வளவு திறமையா? என்று ஊர் கதைத்தது.

சில வருடங்களுக்கு முன் சதாசிவத்தார் தன் மகளின் குறிப்பைப் பார்த்துச் சொன்னது தனத்துக்கு நினைவில் வந்தது. மறு நிமிடம் அவர் எச்சரித்த “தத்தை” பற்றி நினைத்த போது அவள் மனம் பயத்தால் படபடத்தது.

“கண்ணகி அம்மா இவ்வளவு திறமையுள்ள ஒரு பெண்குழந்தையை எனக்குக் கொடுத்துவிட்டுப் பறித்துக் கொண்டு போகாதே” எனத் தினமும் தன் குல தெய்வமான கண்ணகி அம்மனை வேண்டினாள். விதி யாரைவிட்டது? வீரலக்ஷ்மியின் திறமை மேல் பொறாமை கொண்ட திலீபன் இயக்கம் கிராமத்தின் சட்டத்துக்கு எதிராக அவள் நடந்ததுக்கு அவளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கத்

தீர்மானித்தது. ஒரு நாள் கோயிலில் வீரலக்ஷ்மி பாடிவிட்டுத் திரும்பியபோது அவளைச் முக மூடி அணிந்தவர்கள் அவளைத் தாக்கினார்கள். தாக்குதலிலிருந்து பலத்த காயங்களுடன் அவள் உயர் தப்பியது அவள் செய்த புண்ணியம் .

நடந்ததை அறிந்த திருமணமாகாத நகரத்து மகளிர் கல்லூரி தலமை ஆசிரியை ஆனந்தி, முருகேசுவினதும் தனத்தினதும் சம்மதத்தோடு வீரலட்சுமியை நகரத்தில் தன் வீட்டில் தங்க வைத்து கல்லூரியில் படிப்பிக்கத் தீர்மானித்தாள். முருகேசு தம்பதிகள் தங்களின் திறமைசாலியான மகள் கண்ணகிபுரம் கிராமத்தில் வாழ்ந்தால் அவளின் உயிருக்கு எந்த சமயமும் ஆபத்து வரலாம் எனத் தெரிநது தலைமை ஆசிரியை ஆனந்தியின் வேண்டுகோளுக்குச் சம்மதம் தெரிவித்தனர் . வீரலட்சுமி கிராமத்தில் வாழாமல் நகரத்தில் வாழ்ந்து படிப்பைத் தொடர்ந்தாள். திலீபன் குழுவினால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. திலபன் இயக்கத்துக்கு தெரியாமல் வீரலட்சுமி கண்ணகிபுரத்துக்கு வந்து பெற்றோரை பார்த்து செல்வாள் .

****

காலம் உருண்டோடியது., வீரலட்சுமி கொழும்பு பல்கலைக் கழகத்தில் படித்து அறிவியல் துறையில் முதல் நிலையில் பட்டம் பெற்றாள். பல்கலைக் கழகத்தில் அவளுக்கு விரிவுரையாளர் பதவி கிடைத்தும் அவளின் முழு

நோக்கமும் தன் கிராமத்தில் வாழும் பெண்களைக் கிராமத்து ஆண் ஆதிக்கத்திலிருந்து மீட்க வேண்டும் என்பதே. அதனால் அரச பரிபாலன சேவை பரீட்சைக்குத் தோன்றி, சித்தி அடைடந்தவர்கள் பட்டியலில் முதலாவதாக வந்தாள். அவளின் நோக்கம் அறிந்த அரசும் சில பெண் இயக்கங்களும், அரசியல்வாதிகளும் கண்ணகி கிராமம் உள்ள மாவட்டத்துக்குப் பரிபாலன அதிகாரியாக நியமித்தனர்.

பதவி ஏற்று ஒரு வருடத்துக்குள் பெண் அரசியல் வாதிகள் ஆதரவைப் பாவித்து கண்ணகிபுரத்தில் ஒரு போலீஸ் நிலையமும், பெண்கள் பாடசாலையும் அமைத்தாள் .அதோடு இசை, நடனம் ஆகியவற்றைப் பெண்கள் கற்க ஒழுங்குகள் செய்தாள். அக் கிராமத்தில் வசிக்கும் படிக்காத ஐந்து வயதுக்கு மேல் உள்ள பெண்கள் கட்டாயம் கல்வி பயில வேண்டும் என்று கிராமத்தில் பல காலம் பெண்களுக்கு இருந்து வந்த கட்டுப் பாடுகளை நீக்கினாள். அவள் செயல்களால் திலீபன் இயக்கத்தின் ஆதிக்கம் தகர்த்தப் பட்டது. நாட்டின் சட்டத்துக்கு அமையக் கிராமம் இயங்கத் தொடங்கியது. பெண்களின் குழந்தை பேறுக்கு கிராமத்தில் மருத்துவ வசதி வீரலட்சுமி செய்து கொடுத்தாள் . பெண்களின் கைத் திறமையைப் பாவித்து வருமானம் தேட கைத்தொழிற்சாலை ஒன்றையும் உருவாக்கினாள். பெண்கள் பொங்கி வணங்கிய கிராமத்து கண்ணகிஅம்மன் கோவிலுக்கு அரசின் உதவியோடு புது கட்டிடமும்

*கோபுரமும் கட்டினாள், கோவில் கும்ப அபிசேகத்துக்கு நாட்டின் இந்து மத அமைச்சின் மந்திரி போயிருந்தார் .*

*வீரலட்சுமி சாதனைகளைக் கண்ட முருகேசு தம்பதிகளும், இனத்தவர்களும், ஏன் கிராமமே, பெருமைப் பட்டது . அவளின் சேவையையும் திறமையையும் கண்ட அரசு, வியந்து அவளின் மேல் படிப்புக்ககான புலமை பரிசு கொடுத்து, இங்கிலாந்துக்கு அனுப்பியதுமன்றி அவளுக்கு காமன்வெல்த் நாட்டு பெண்கள் சேவை விருதுக்கு சிபார்சு செய்தது .*

*முடிவுரை. பாகிஸ்தானில் இருந்த தலீபான்களுக்கு (Taliban)எதிராகப் பெண் கல்விக்காக போராடிய வென்ற மஹாலா (Mahala) என்ற பாக்கிஸ்தானிய சிறுமியின் கதையை இலங்கை சூழலில் கருவாக வைத்து புனைவும் கலந்து எழுதப் பட்ட கதை)*

## கதை 4
## சந்திரவதனி

முகவுரை

தேவ தாசிகள் என்ற கோவிலில் நடனமாடும் தொழில் புரியும் குலத்தினர் கோயில்களிலே குறிப்பாக, திருவிழாக் காலங்களிலே நிகழ்த்தி வந்த ஆடற்கலையே 'சின்னமேளம்' அரசவைக் .என்று மக்கள் அழைத்ததாக அறிய முடிகின்றது களங்களிலும், சில ஆண்டவன் சந்நிதிகளிலும் ஆடப்பட்டு கால ஓட்டத்தில் எல்லாக் கோயில்களிலும் இடம்பெறும் நிகழ்ச்சியாக வளர்ந்ததுஅங்கெல்லாம் கோயில் பூசைகளில் . நட்டுவ மேளத்தைக் கண்ட மக்கள், தேவதாசிகள் ஆட்டத்திற்குச் சிறிய அளவிலான மேளம் (மிருதங்கம்) ச) பாவிக்கப்படுவதனைக் கண்டு அதனை ின்னமேளம் ( என அழைக்க முற்பட்டு நாளடைவில் அம்மேளம் பாவிக்கும் நாட்டியக் கலையையே சதிராட்டம் அல்லது என்ற பெயர் கொண்டு அழைக்கும் மரபு 'சின்னமேளம்' தோன்றியது எனக் கலாநிதி பத்மா சுப்பிரமணியம் போன்றவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள

*****

எழு தசாப்தங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வீர மஹா காளி அம்மன் கோவிலில் பல நாட்கள் நடக்கும் திருவிழாக்களை உபயக்காரர்கள், தமது அந்தஸ்தை சமூகத்துக்கு காட்ட போட்டிப்போட்டுக் கொண்டு நடத்துவார்கள்கோவிலுக்கு . முன் சிகரம் கட்டி, மின் விளக்குகளால் அலங்கரித்துக்

கொண்டாடுவார்கள் ஆனைப் .பந்தியடி ஓவர்சியர் பூபாலசிங்கத்தின் பூந்தொட்டி திருவிழா பிரபல்யமானது . அவர் தன் திருவிழாவின் போது தமிழ் நாட்டிலிருந்து ராஜமாணிக்கம் பிள்ளை போன்ற நாதஸ்வர வித்துவான்ககளும் நாட்டியக்காரிகளையும் அழைத்து வந்து .நிகழ்ச்சிகள் நடத்துவார்

யாழ்ப்பாணத்தில் செட்டிமார்கள் கட்டிய கோயில்களில் இறைவனுக்கு ஆடற்கிரியை வழங்குவதற்காக இலங்கைக்குக் கூட்டி வரப்பட்டவர்கள் தமிழகத்து ஆடல் மங்கையர்கள்இவர்களைப் போல் இலங்கையிலும் ஆடல் . இவ் ஆடல் மங்கையரின் .மங்கையர்கள் இருந்துள்ளார்கள் .என்று அழைக்கப்பட்டது 'சின்னமேளம்' ஆடல்களே

ஆரம்பத்தில் சின்னமேளம் என்பது மிருதங்கத்தினைக் குறித்துப் பின்னர் இவ்வாத்தியத்துடன் ஆற்றுகையை நிகழ்த்தும் குழுவினரையே குறிப்பிட்டது இதனால் இந்நடனத்தை ஆடும் பெண்களை சின்னமேளக்காரி அல்லது சதிராட்டக்காரி என்று அழைக்கும் மரபு யாழ்ப்பாணத்தில் பெருவழக்காக நிலவியது .

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியில் வருவது மிகக்குறைவுஇக் காலத்தில் சைக்கிளில் . . அல்லது டூ வீலரில் அவர்களைக் காணும் வாய்ப்புண்டு அக்கால இளைஞர்களுக்கு மிகவும் குறைவாக இருந்தமையால் அழகும் கவர்ச்சியும் மிக்க சதிராட்டத்தில் ஆடல் மகளிரைக் காண்பது இளைஞர்களுக்கு அரிய

சந்தர்ப்பமாக அமைந்ததுஎனவே எல்லாத் தடைகளையும் . தாண்டி ஆடல்களை முண்டியடித்துக்கொண்டு வந்து .இளைஞர்கள் பார்ப்பதில் வியப்பேதுமில்லை

அன்றைய காலத்தில் சுவாமி வீதியுலா வரும்போது ஆடல்மகளிர் சுவாமிக்கு முன்பாக நடனமாடிக்கொண்டு சென்றதாகவும் அறியமுடிகின்றதுஇவ்வாறு சுவாமிக்கு . முன்பாக புனிதமாகத் தெய்வீக மணங்கமழ சின்னமேள ஆடல் நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன இன்றும் தமிழ் நாட்டில் இலங்கையின் சிங்களப் .இந்த வழமையாக நடந்து வருகிறது பகுதியில் பெரஹரா ஊர்வலத்தில் இதே மாதிரி கண்டிய நடனக்காரரர்கள் ஆடுவதைக் காணலாம்.

இந்துக்கோயில் திருவிழாக்களில் விருந்திற்கு பாயாசம் " போல ஒவ்வொரு கோயில் நிகழ்ச்சிகளிலும் சின்னமேள ஆடல் சிறப்பான நிகழ்வாக இறுதியில் இடம்பெறும் இருபதாம் நூற்றாண்டு வரை சதிர்ஆட்டம், தாசியாட்டம், தேவரடியார் ஆட்டம் எனப் பெயர் பெற்று விளங்கிது . .அதைப் பார்க்கக் கூட்டத்துக்கு குறைவில்லை

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பணவசதி படைத்தவர்கள் சிலர் சின்னமேளக் குழுக்கள் இவர்கள் தென் .உருவாக்கினர் (செற்றுக்களை) இந்தியாவிலிருந்து தரகர்கள் மூலம் தொடர்புகொண்டு .ஆடல் மகளிரை வரவழைத்தனர் இச் செற்றுகளில குறிப்பிட வேண்டிய செற் புத்தூர் மார்க்கமுண்டு செற், கொக்குவில் சின்னத்துரை செற், நீர்வேலி வைத்திலிங்கம் செற், இணுவில்

*சரவணமுத்து செற், அளவெட்டி ஐயாத்துரைசெற், வண்ணார்பண்ணை இராமசாமி சுதுமலை மணியம் செற் போன்றவை யாகும்*

*இந்த குழுக்களில் சதிராட்டம் ஆடியவர்களில் சரசு, விசாலினி , விஜயா, மல்லிகா, அம்பிகா, ஈஸ்வரி சகோதரிகள், இராமலட்சுமி போன்றவர்கள்இவர்களை விட . .ரசிகர்கள்*

*அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மூன்று செற் சின்ன மேளங்கள் போட்டிக்கு இருந்தனமயில் - ஒன்று பாம்பு . நடனம் ஆடுவதில் பிரபல்யமான நாட்டியக்காரி விஜயா, ரேக்கொர்ட் டான்சுக்கு பெயர் பெற்றவள்அவளது . .வளைந்து ஆடும் முகாரி ராகத்தில் மயங்காதவர்கள் இல்லை அடுத்தது கவர்ச்சியாக முழங்காலுக்கு மேல் ஆடை அணிந்து, இளைஞர்களின் பலரின் வாயைத் திறந்தபடி ஆட வைத்த பாலசுந்தரி ...சுந்தரி ...கனவிலும் பலரை வாய்விட்டு சுந்தரி . இந்த இருவரையும்விட .என்று புலம்ப வைத்த பாலசுந்தரி தன் கவர்ச்சியான கல்வெட்டால் இளமை ததும்ப நெளித்து - வளைந்து சந்திரவதனிவின் ஆட்டத்தைப் பார்க்கவும் அவளது பார்வை தம்மேல் விழாதா என்று ஏங்கி அதற்காகவே முன்வரிசையில் இடம் பிடிக்க முண்டி அடித்துக் கொண்டு பலத்த போட்டிப்போட்டு மெல்லிய சேர்ட்டோடு கழுத்தில் தங்கச் சங்கிலி மினுங்க முன்*

வரிசையில் இருந்த மைனர்களில் முத்திரை பதித்தவர் சிலர். அதில் முக்கிய புள்ளி மைனர் பாலா என்ற பாலசிங்கம் ஓவர்சியர் பூபாலசிங்கத்தின் ஒரே மகன் பாலாவின் தரிசனம் . அத்தர் .இல்லாத சந்திரவதனிவின் சதிராட்டடம் இல்லை வாசனை வீசினால் மைனர் பாலா தரிசனம் தந்திருக்கிறான் மைனர் பாலாவின் முகத்தில் .என்பதற்கு எடுத்துக்காட்டு உள்ள அடர்த்தியான கிருதா மீசைஅவனின் ஆண்மைக்கும்

தன் தங்கப் பல் செட்டை சந்திரவதனிவுக்கு அடிக்கடி இளித்துக் காட்டியபடி பாலா இருப்பான்தனது விரல்களில் . இருந்த வைர மோதிரம் சந்திரவதனிவுக்கு தெரியும் விதத்தில் .காட்டி கைகளை அசைத்து நாட்டியத்தை இரசிப்பான் மைனர் பாலா திருமணம் செய்தது மாமன் மகள் சாவித்திரியைதன் .அவள் சாவித்திரி போல் கற்புக்கரசி . கணவன் பாலாவின் மன்மத லீலைகள் தெரிந்திருந்தும்

சந்திராவின் நாட்டியம் முடிந்தவுடன் தனது புதிய ஒஸ்டீன் கேம்பிரிட்ஜ் வாகனத்தில் பவுத்திரமாகச் சந்திராவை அவள் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு பாலாவுக்கு . சந்திராவின் மனேஜராக இருந்த பாட்டுக்கார சோமு காரணத் சோமு பாலாவோடு .தோடு அனுமதி கொடுத்தான் ஒன்றாகப் படித்தவன், அதனால் பாலா கேட்ட எதையும் மறுக்காமல் செய்யக் கூடியவன் பாலாவும் . தன கண் வைத்த பெண்ணை அடையாமல்

*புலம் பெயர்ந்ததினால்*
*சுவாசிக்க உனக்கு கிடைக்காமல் போகுமோ?..*

*கவிதையை வாசித்துவிட்டு இதற்காகவா அண்ணர் தனது " .."இறுதிப்பயணமாக ஊருக்கு வந்தவர்தனம் மனதுக்குள் நினைத்தாள்.*

******

## கதை 14
## மரியா

இலங்கையில் இருந்து புலமைப் பரிசு பெற்று நான் வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் மறையும் மக்கள் இனம் பற்றி ஆய்வு செய்வது என் ஆரய்ச்சியில் ஒன்றுஇலங்கையில் வாழும் ரோடியோ ., வேடர், காப்பிரி, யூதர் போன்ற இலங்கையில் மறையும் பல இனங்கள் பற்றி அறிந்து வைத்திருந்தேன் கனடவில் முதல் தேசத்து மக்கள். )First nation) எனது ஆய்வில் முதலிடம் பிடித்தது.

கிட்சினர், வாட்டர்லூவில் இருந்து மேற்கே 35 கிலோமீட்டர் தூரத்தில் அக் . என்ற ஒரு கிராமமுண்டு ”மில்வர்டன்“ -கிராமத்தில் வாழ்பவர்கள் பெரும்பாலோர் அமிஷ் மெனனைட் என்ற பழமையில் வாழும் குலத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் நவீன நாகரீக வாழ்க்கையை இயற்கையை மதிப்பவர்கள்.புறக்கணிப்பவர்கள், என நான் கேள்விபட்டேன்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜெர்மனியில் இராணுவ கட்டாய அல்லது மாற்று சேவையைத் தவிர்ப்பதற்காக கனடாவுக்கு புலம் பெயர்ந்த குலம் அது மெனோ . சிம்மொன்ஸ் என்பவரால்15ஆம் நூற்றாண்டில் நெதர்லாந்தில் ஆரம்பித்து வைக்கப்பட கிறிஸ்தவ குலம் .

****

மில்வர்டன் கிராமத்துக்கு அருகே மிகப்பெரிய செயின்ட் ஜேக்கப்ஸ் என்ற விவசாயிகளின் சந்தை உள்ளது இச் சந்தை ஆண்டு முழுவதும் வியாழன்,. சனி தினங்களில் காலை எழு மணி முதல் மாலை நான்கு மணி வரை திறந்திருக்கும் .

சனிக்கிழமைகளில் நான் எனது மோட்டார் சைக்கிளில் சந்தைக்குப் பெரும் பாதை 84 யில் போகும் போது பல குதிரை வண்டிகள் பாதை ஓரத்தில் உள்ள கிரவல் பாதையில் விவசாயிகள் சந்தை நோக்கிச் செல்வதைக் கண்டேன்

குதிரை வண்டிகளை ஒட்டிய சாரதிகள் கருப்பு நிற மேலாடையும் தலையில் கருப்பு தொப்பியும் அணிந்திருந்தனர் வண்டியில் பயணம் .செய்த பெண்களும் கருப்பு நிற, அடக்கமான, நீண்ட மேலாடை ஆடை அணிந்து, தங்கள் தலையை வெள்ளை நிறத் துணியால் மூடியிருந்தனர் அவர்கள் அணிந்திருந்த அடக்கமான, சாதாரண ஆடை அவர்களை மற்றைய இன மக்களில் இருந்து வேறு படுத்திக் காட்டியது . .

எனக்கும் மெனனைட் குலத்தைச் சேர்ந்த மரியாவுக்கும் இடையிலான முதல் சந்திப்பு விவசாயிகள் சந்தையில் ஏற்பட்டது சந்தையில் ., மெனனைட் விவசாயிகள் மரத்தில் தயாரித்து விற்கும் தளபாடங்கள் நல்ல தரம்

*உள்ளவை அவர்கள் தயாரித்த இயற்கை உணவுப் பண்டம் )Organic food) தனிச் சுவையானவை அன்று காலை.நான் சப்பிடாததால் பசி என் வயிற்றைக் கிண்டியது உண்பதற்கு உணவைத் தேடிச் சென்று ஒரு கடையைத் தெரிந்து எடுத்தேன் அந்த கடையில் இருந்தவள் சுமார் இருபது வயது மதிக்க கூடிய மௌனைட் குலப் பெண்நீண்ட கருப்பு நிற . மேலாடை அணிந்திருந்தாள் நீண்ட கைகள் உள்ள வெள்ளை நிறச் சட்டை அவளின் முழு உடலை மறைத்தது . மினி ஸ்கேர்ட் பெண்கள் அணியும் இக் காலத்தில் .இப்படியும் ஒரு ஆடையோடு ஒரு பெண்ணா? அவள் குலத்தின் கலாச்சாரத்தை அவளின் ஆடை பிரதிபலித்தது அவளின் தலையை மூடி ஒரு வெள்ளைத் துணி அவளின் . எளிமை, புன் முறுவளில் ஒரு கவர்ச்சியான அழகு . பல கடைகளில் வயது கூடிய பெண்கள் .எனக்குத் தெரிந்தது நான் தேடிச் சென்ற .விற்பனையாளர்களாக இருந்தார்கள் கடையில் மட்டும் அந்த அழகிய இளம் பெண் .பொருட்களை விற்றுக் கொண்டு இருந்தாள்*

*” எதாவது உண்பதுக்கு தேடுகிறீர்களா”? அவள் தன் இனிமையான குரலில் ஆங்கிலத்தில் சற்று வித்தியாசமான உச்சரிப்பில் கேட்டாள்அவளின் ஊடுருவும் பார்வை . எனக்கு என் இன ரோடியோ . என்னைக் கவர்ந்தது ..பெண்களின் அழகு நினைவுக்கு வந்தது*

" ஆம் காலையில் இருந்து நான் சாப்பிடவில்லை .பசிக்குது . ) அது தான் நான் நல்ல ரொட்டியாகBread) தேடுகிறேன் " நான் ஆங்கிலத்தில் பதில் சொன்னேன்

"பல விதமான ரொட்டிகள் என் கடையில் இருக்குஇந்த . "ரொட்டியை சுவைத்து பாருங்கள், என்று ஒரு சிறு ரொட்டித் துண்டை எனக்கு நீட்டினாள்அவளின் கியூடேக்ஸ் பூசாத ., கத்தரித்த நகங்களைக் கொண்ட நீண்ட, மெல்லிய விரல்களால் கவரப்பட்டேன்அவள் கையில் வளையல்க்ள . கழுத்தில் நகைகள் இல்லை காதுகளில் தோடுகள் .இல்லை அவளின் நீண்ட மூக்குக்கு ஒரு வைர மூக்குத்தி .இல்லை இருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என எனக்குள் அவளின் எளிமையான முக . கற்பனை செய்து பார்த்தேன் அழகே அவளுக்கு அணிகலனாகஇருந்தது.
அவள் தந்த ரொட்டிக்கு நன்றி சொல்லி வாங்கிச் சுவைத்தேன்..

"ரொட்டி பிரமாதம் "

"இதை சுவைத்துப் பாருங்கள்என்று இன்னொரு வகை " .முந்திரிகை பதித்த ரொட்டித் துண்டு ஒன்றை நீட்டினாள்

அதையும் வாங்கிச் சுவைத்தேன்
"இது அதை விடப் பிரமாதம் "

'' சரி இதையும் சுவைத்துப் பாருங்கள்.என்றாள் ''

அவள் தந்த மூன்றாவது ரொட்டியில் செரி, முந்திரிகைநிலக் . .கடலை இருந்தது

: நான் அதை வாங்கிச் சுவைத்து விட்டு இது மிக மிகப் " அந்த ரொட்டியை வாங்க முடிவுக்கு ''என்றேன் :பிரமாதம் .வந்தேன்

வாங்க முன் அது சரி மேடம்"உங்கள் பெயர் என்ன''? என்றேன் :

"நான் மரியா''நீங்கள் .? என்று தன் கண்களைச் சிமிட்டிய படி கேள்விக் குறியோடு கேட்டாள்.

"நான் பண்டாரபிறந்தது ஸ்ரீ லங்காவில் உள்ள ஒதுக்கப் . ''பட்ட இனமான ரோடியோ இனத்தில்

'' கனடாவுக்கு எப்படி வந்தீர்கள்''?

"என் இனத்தில் படித்தவர்கள் குறைவு என் அம்மாவை வைப்பாட்டியாக வைத்திருந்த நல்ல மனம் படைத்த ஒரு பணக்காரரின் தயவில், நான் படித்து பட்டம் பெற்று,

*மறையும் மக்கள் இனங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய கனடாவுக்கு, புலமை பரிசு பெற்று வந்தேன். ”*

*“உங்கள் இனத்தில் படித்த பெண்கள் இல்லையா”?*

*“படித்தவர் மிகக் குறைவு என் இனத்துப் பெண்கள் ஒரு காலத்தில் இடுப்புக்கு மேல் ஆடை அணிவதில்லை அவர்களில் பலர் அழகிகள் ”...*

*“நீர் கனேடியனா”?*

*“இல்லை ஸ்ரீ லங்கன் ”*

*“ஸ்ரீ லங்கா வா? அது எங்கே இருக்குது? இந்தியாவிலா”?*

*“இல்லை இந்தியாவக்கு கீழே உள்ள ஒரு அழகான தீவு :*

*“அப்ப கனடாவில் என்ன செய்கிறீர்கள்”?*

*“வோட்டர்லூ பலகலைக் கழகத்தில் படிக்கிறேன் “ :*

*“பல்கலைக்கழகமா அப்படி என்றால் என்ன”?*

*அவளின் கேள்வி எனக்கு வியப்பைக் கொடுத்ததுஅவளின் . கிராமத்து அண்மையில் உள்ள பிரபல்யமான .இருகிறாள் என அறிந்தபோது நான் ஆச்சரியப் பட்டேன்*

*"நீங்கள் ஸ்கூலுக்கு போவதில்லையா"? நான் மரியாவைக் கேட்டேன் :*

*"இப்ப போவது இல்லை பத்தாம் வகுப்போடு என் படிப்பை என் பெற்றோரர நிறுத்திவிட்டார்கள்எங்கள் வீட்டுத் . தோட்டத்தையும் குதிரைகளையும், பன்றி பண்ணைகளையும் கவனிக்கச் சொன்னார்கள்"*

*"ஏன் மரியா அவர்கள் அப்படி செய்தார்கள் "?*

*"அதிகம நான் படித்தால் நாகரீக வாழ்வுக்கு போய் விடுவேன் என்ற பயம் அவர்களுக்கு, எங்கள் குலத்தவர்களுக்கு நாகரீக வாழ்க்கை பிடிக்காதுமின்சாரம் . பாவிப்பது குறைவுவெகு . .சிலரே நிலத்தை உழுவதுக்கு டிரக்டர் வைத்திருக்கிறார்கள் பயணத்துக்கு குதிரை வணடியையே அனேகமாக .வீட்டுக்கு இரவில் அரிக்கன் லாம்பும் . பாவிப்பார்கள் மெழுகுவர்த்தியும் சிலர் ஆடு. விறகும் பாவிப்பார்க்கள் ., மாடுகோழி ., பன்றி பண்ணை வைதிருக்கிறார்ககள்இதோ . என் வீட்டுத் தொட்டத்து அப்பில் மரத்தில் காய்த்த .அப்பிலில் இருந்து நான் தயாரித்த அப்பில் ஜாம்*

ரொட்டியில் பூசி சுவைத்துப் பாருங்கள் அப்போதெரியும் அதன் ருசி, என்று சொல்லி ஜாமைத் தந்தாள் நான் சுவைத்து . .பார்த்த போது அதன் சுவையின் அருமை தெரிந்தது ரொட்டிக்கும் ஜாமுக்கும் அவள் சொன்ன விலையைக் கொடுத்து வாங்கிய பின், “ மரியா நான் உன்னோடு அதிக நேரம் கதைத்து விட்டேன்பக்கத்து கடையில் உள்ள . மூதாட்டிகள் நாங்கள் பேசுவதை முறைத்து அவதானிக்கிறாள் நான் அடுத்த சனிகிழமை வந்து . என்று சொல்லி அவளிடம் இருந்து ”உன்னைச் சந்திக்கிறேன அவளின் கண்கள் கலங்கி இருந்ததைக் .விடை பெற்றேன்

****

எங்கள் இருவரினதும் சந்திப்பு ஒவ்வொரு சனிக்கிழமைகளில் நடந்ததுஅ .வளுக்கு ஓர் மொபைல் போன் ஒன்றை பரிசளித்து அதன் மூலம் என்னோடு தொடர்பு கொள்ளும் முறையைச் சொல்லிக் கொடுத்தேன்அது . .பிடித்துக் கொண்டது .அவளுக்கு புதுமையாக இருந்தது அவளின் பெற்றோருக்கு தெரியாமல் மறைத்து வைத்து அவளின் பெற்றோர் வீட்டி .பாவிக்கும் படிச் சொன்னேன்ல் இல்லாத போது எனக்கு கோல் எடுக்கும் படி சொன்னேன் அவளும் அவ்வாறே செய்ய ஒப்புக் கொண்டாள்.

தினமும் எனக்கு மரியாவிடம் இருந்து இரண்டு தொலை பேசி அழைப்புகள் வரும்ஒரு நாள் நான் படிக்கும .

*பல்கலைக்கழகத்துக்கு தன்னை கூட்டிச சென்று காட்டும் படி .என்னைக் கேட்டாள்*

*“உன் பெற்றோருக்கு தெரியாமல் என்னோடு உன்னால் வர முடியுமா மரியா”?*

*“வருகிற புதன் கிழமை அவர்கள் டொரோண்டோவுக்கு காலை போய் திரும்பி வர பல மணிநேரமாகும் அப்போது . :” நீங்கள் வந்து என்னைக் கூட்டிப் போய் காட்டவும்*

*அது ஆபத்து என்று எனக்கு தெரிந்திருந்தும் சம்மதித்தேன் .. நான்கு மணித்தியாலம் பல்கலைக்கழகத்துக்கு கூட்டிச சென்று காட்டிய பின் அவளை மக்டோனல்ட்ச்சுக்கு .கூட்டிசென்று பகல் போசனம் வாங்கிக் கொடுத்தேன் அவள் அதை அருவருப்போடு உண்டதைக் கண்டேன்.*

*“என்ன மரியா சாப்பாடு பிடிகவில்லையா”?*

*“பண்டார இந்த குப்பை சாப்பாட்டையா தினமும் நீங்கள் சாப்பிடுகிறீர்கள்இது உங்க உடலுக்கு இது நல்லது . ”.இல்லை*

*.*

*” இல்லை சில நாட்களில் என் ரூமில் நான் சமைப்பேன்”*

'' சரி ஒரு நாள் உங்கள் ரூமுக்கு வந்து என் கையால் சமைத்து தாறன் சாபிட்டுப் பாருங்கள் அப்போ தெரியும் அதன் சுவை '' .என்றாள்

அதன் பின் என் அறைக்குள் அவளை அழைத்துச் சென்று என் அம்மாஎன் சகோதரி இருக்கும் . :' படத்தைகாட்டினேன்

''உங்கள் அம்மாவும் சகோதரியும் ரொம்ப அழகாக் இருக்கிறார்கள் அவர்கள் பெயர் என்ன:'''

''அம்மா பெயர் மெனிக்கே''சகோதரி பெயர் தாமரா .

''தாமரா என்றால்''.?

''லோட்டஸ் மலர் என்பதாகும் அந்த மலர் எங்கள தீவில் அதிகம் உண்டு

''அந்த மலரின் அழகு உங்கள் சகோதரிக்கு உண்டு :

''மரியா உன்னை விடவா என் சகோதரி அழகி''?

அவள் வெட்கித் தலை குனிந்தாள்.

****

ஒரு நாள் மரியா என்னை வெளிப்டையாக கேட்டு விட்டாள்,'' பண்டார என்னை உங்கள் தீவுக்கு என்னை கூட்டி போகிறீர்களா? , நான் உங்கள் மனைவியாக வாழ விரும்புகிறேன் ''

.

எனக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை . மரியா என்னை மனப் பூர்வமாக காதலிக்கிறாள்எனத் தெரிய

வந்தது ஒரு வாரத்துக்கு முன் எனக்கு மொண்ட்ரியல் மக் . ) கில்McGill) பல்கலைகலழகத்தில் தற்காலிக விரிவுரையாளராக வேலை கிடைத்தது.

அது எனக்கு முடிவு எடுக்க உதவியது என் காதலை பற்றி . என் பேராசிரியர் ஸ்மித்துக்கு சொல்லி அவரிடம் ஆலோசனை கேட்டேன் அவர்ஒரு முற்போக்குவாதி , அவர் சொன்னார்'

'' பண்டார நீர் அவளை ஸ்ரீ லங்காவுக்கு கூட்டி போவது கடினம். நீர் முதலில் அவளை மொண்ட்ரியல் கூட்டி போய் இந்த நாகரீக உலகுக்கு அறிமுகப் படுத்தி, அதன் பின் திருமணம் செய்து வாழும்ஒரு போதும் அந்த அப்பாவி . பெண்ணை கை விடவேண்டோம்அவள் தன் குலத்தின் . என்றார் ''கோட்பாடுகளை மீறி உம்மாடு வர விரும்புகிறாள் .'ஸ்மித்

நான் அவர் சொன்னது போல் செய்ய முடிவு செய்தேன்என் . மரியாவுக்கு சொல்ல ஒரு சனிகிழமை சந்தைக்கு ' முடிவை . போனேன்

அவளைக் கடையில் காணவில்லைஅவளுக்கு பதிலாக ஒரு . மூதாட்டி இருந்தாள் மரியா எங்கே என்று மூதாட்டியிடம் நான் கேட்ட போது

''மரியாவுக்கும் எங்கள் இனத்தில் உள்ள ஒருவனுக்கு சேர்ச்சில் சில நாட்களுக்குமுன் திருமணமாகி அவனோடு

குடும்பம் நடத்த வின்சருக்குப் போய்விட்டாள்என்றாள் ” அந்த மூதாட்டி

நான் மூதாட்டிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் உறைந்து போய் நின்றேன்..

## கதை 15
## ஆனந்தி

அங்கோட என்ற ஊரின் பெயரை உச்சரித்தாலே சற்று ” ஏளனமாகப் பார்ப்பவர்கள் இலங்கையில் பலர் உண்டு சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள மன நோயாளிகளுக்கான வைத்தியசாலை போல் அங்கோட கிராமத்திலும் மனநோயாளிகளுக்கு என நிறுவப்பட்ட . வைத்தியசாலையே அந்த பார்வைக்கு காரணம 1889ஆண்டில் கொழும்பு 7 யில் 14 ஏக்கர் நிலப்பரப்பில் என்ற கறுவா மரக் காடாக இருந்த பகுதியில் ”கும்பிக்கலே“ 250 மன நோயாளிகளுக்கு வைத்தியம் செய்ய ஆரம்பித்த வைத்தியசாலையை, விஸ்தீரிக்க இடம் போதாமையால் கொழும்பு அவிசாவலை பெரும் பதையில், களனிநதிக்கு அருகே உள்ள அங்கோட கிராமத்தில், 125 ஏக்கர் நிலத்தில் 1917 ஆம் ஆண்டில் அங்கோட மன நோயாளிகள் வைத்தியசாலை தொடங்கப்பட்டதுஇது ஒரு பெரிய . பெரிய நிர்வாகத் தொகுதி .மருத்துவமனை வளாகம், மற்றும் ஆறு மூன்று அடுக்கு மாடிக் கட்டிடங்களை உள்ளடக்கியது ஒவ்வொன்றும் நூறு நோயாளிகளைக் கொண்டிருக்கக்கூடியவை

ஒரு மனநோயாளியைச் சுற்றியிருக்கும் களங்கம் மிகவும் வலுவானதுஅது மன நோயாளிகள் .

எதிர்பாராதவையாகவும் பிறருக்கு ஆபத்தானவைகளாகவும் அதை உணர்கின்ற மனநிலை அவர்களுக்கு .இருக்கும் பலரின் எளனத்தால் பாதிக்கப்படும் அவர்கள் .இருக்காது, மௌனமாக பாதிக்கப்படுகிறார்கள், அவர்களுக்கு உதவியையும் ஆதரவும் அவசியம் தேவை தனிமை மேலும் . .அவர்களின் மன நிலயை பாதிக்கிறது

****

அங்கோட வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளில் வடக்கில் உள்ள வன்னியில் இருந்து போரினால் பெற்றோரையும், தன் ஒரே அண்ணன் நந்தனையும் இழந்து, மனநோயாளியாக, அனாதையாக ஆனந்தி என்பவளும், அவளோடு போரில் பாதிக்கப்ட்ட மூவரும் மனநோயாளிகளாக இருந்தனர் .
அங்கோட வைத்தியசாலையில் ஆனந்தி இருந்த ஒரு கட்டிடத்தில் இரண்டாம் தட்டில் ஆரியா என்ற ஆரியரத்தின என்ற மன நோயாளியும் இருந்தான் .

ஆரியா பிறந்தது கதிர்காமம் என்ற தேற்கில் உள்ள பிரசித்தமான வரலாறு உள்ள கிராமத்தில் அக் கிராமத்தில் . .பழமைவாய்ந்த முருகன் கோவிலுண்டு
ஆரியாவின் விதவைத் தாய் சோமாவதியும், தங்கை லீலாவதியும் வாழக் கஷ்டப்பட்டார்கள்தாய் பலகாரம் .

செய்து விற்றும், லீலாவதி தையல் வேலை செய்தும் குடும்பம் நடத்தினார்கள் ஆரியா தினமும் முருகன் கோவிலுக்கும் கிரி விஹாராவுக்கும் போய் வருவான் . கோவிலுக்கு வரும் .மாணிக்க கங்கையில் குளிப்பான் .பக்தர்களுக்கு வழிகாட்டியாக இருந்து சம்பாதித்தான் அதனால் அவனுக்கு ஒரளவுக்குத் தமிழ ் பேச வரும் . கிராமத்தில் உள்ள கிரி விஹாராவின் புத்த குருவின் தூண்டுதலின் பேரில் இராணுவத்தில் சேர ஆரியா தீர்மானித்தான் அவன் இராணுவத்தில் சேர்வதை அவனின் விதவைத் தாய் சோமவதியும் அவனின் தங்கச்சி ஆரியரத்தின . லீலாவதியும் விரும்பவில்லை .அமைதியானவன்

ஆரம்பத்தில் கொழும்பில் உள்ள இராணுவ தலமை அலுவலகத்தில் வேலை செய்தான் இறுதி போருக்கு . இராணுவ வீரர்கள் தேவை பட்டதால் முள்ளிவாய்க்காலுக்கு போர் புரிய போக வேண்டிய போரில் கேப்டன். நிலைமை அவனுக்கு ஏற்பட்டது
சில்வாவின் கட்டளையை ஆரியா நிறைவேற்ற தயங்கினான்.
“ஆரியா உன்னைத் தாக்க வரும் எதிரியைத் தயங்காமல் சுடு ”
. என்றான் சில்வா
ஆரியரத்தின சுட்டான்அவனின் சூட்டுக்கு முன் பின் . தெரியாத இரு விடுதலை புலிப் படையின் தமிழ் வீரர்கள் ஆனந்தியின் .அதில் ஒருவன் தான் நந்தன் . பலியானார்கள்

நந்தன் இறக்க முன் திருப்ப .அண்ணன்ிச் சுட்டத்தில் ஆரியரத்தினாவின் வலது காலில் குண்டு தாக்கி சிதைந்தது . ஆரியா .ஆரியா உயிர் தப்பியது அவன் செய்த புண்ணியம் குவிந்திருந்த பிரேதங்களை பார்த்து . ஒரு கால் முடமானான் உடனே . அவன் அதிர்ந்து போய் பேசாமல் நின்றான் சக்ரவர்த்தியின் கலிங்கத்துப் போரின் கதை தான் நினைவுக்கு வந்ததுஅந்த காட்சி அவனின் மன நிலையை வெகுவாக . போர் களத்தில் ஓடும் இரத்தத்தோடு நிலத்தில் .பாதித்தது .கிடந்த உடல்களை சுட்டிக் காட்டி கை தட்டி சிரித்தான் துவக்கை கீழே போட்டான .அழுதான்்அவன் . கேப்டனின் கட்டளைக்கு இணங்க கொன்றதோ இரு சிங்களத்தில் என்ன பேசுகிறேன் என்று .உயிர்கள் மட்டுமே தெரியாமல் ஆரியா உளரத் தொடங்கினான் அவன் பேசுவது என்ன .கேப்டனுக்கும் மற்றவர்களுக்கும் புரியவில்லை ஆர்யாவுக்கு நடந்து விட்டது என்று கேப்டன் சில்வா கேட்டார்.

“சேர் ஆரியாவுக்கு இந்த காட்சியை பார்த்து மூளையில் தட்டிவிட்டது .என்றான் சார்ஜன் பெரேரா ”

முடமாகிமனநிலை பாதிக்கப்பட்ட ஒருவனை . இராணுவத்தில் வைத்திருப்பது ஆபத்து என்பதால் இராணுவ அதிகாரிகள் அவனுக்கு ஒய்வு கொடுத்தார்கள் அங்கோட மனநிலைமருத்துவ.மனைக்கு சிகிச்சை பெற அனுப்பினார்கள் .

****

விதி ஆனந்தியையும் அவளின் அண்ணன் நந்தனைப் போரில் கொன்ற ஆரியாவையும் அங்கோட மனநோயாளிகள் வைத்திய சாலையில் சந்திக்க வைத்ததுஆனந்திக்கு . . .தெரியாது ஆரியாதான் தன் அண்ணனை சுட்டவன் என்று

****

மனநிலை பாதிக்கப்பட்டு அகதியாய் அங்கோடவுக்கு ஆனந்தி வந்து பல மாதங்களாகியும் அவளை ஒருவரும் வந்து பார்க்கவில்லைஎப்போதும் கவலை தோய்ந்த . அவளின் . முகத்தொடு சிந்தித்தபடியே இருப்பாள் சில சமயம் கட்டிலில் ஏறி .நடத்தையில் பெரும் மாறுதல் .நின்று குதிப்பாள்

தனக்குள்ளே பேசிக் கொள்ளுவாள்.அடிக்கடி சிரிப்பாள். மற்றவர்களுடன் பேசி பழகுவதில்லை தனிமையை . குழப்பமான பேச்சு.தெளிவில்லாத சிந்தனை.நாடினாள், குளிப்பது, உடை மாற்றுவது, சாப்பிடுவது போன்ற தினசரி இயல்பாக செய்யும் அவளின் செயல்கள் கூட பாதிப்புக்கு உள்ளானது .

திடீர் என்று கையில் எப்போதும் வைத்திருக்கும் சிறு முருகன் படத்தைத் தொட்டு கும்பிட்டு தனக்குள் பேசுவாள் தேவாரம் பாடுவாள் தனிமையில் கட்டிலில் தலை கீழாக படுப்பாள் . சில நேரம் தன் தலை முடியை விரித்த படி முருகா முருகா. என்று சத்தம் போட்டு கவடி ஆட்டம் ஆடுவாள் சில சமயம் சாப்பிடவும் மறுத்து விடுவாள்முருகனின் படம் மட்டும் .

அவள் . அவள் கையில் எப்போதும் இருக்கும் வைத்தியசாலைக்கு வரும் பொது அவள் கொண்ட வந்த அதை . ஒரே ஒரு பொருள் அந்த முருகன் படம் மட்டுமே .இப்போது ஒருவருக்கும் தெரியாமல் கும்பிட்டு அழுவாள் சிரிப்பாள்.

ஒரு நாள் ஒரு நேர்ஸ் ஒருத்தி அவளிடம் இருந்து அந்த படத்தை பறிக்க எத்தனித்த போது ஓ வென்று கதறி, அழுது, சத்தம் போட்டு, தலை முடியை விரித்து ஆடி ஆனந்தி பெரும் கலவரம் செய்தாள் அவளை அமைதி படுத்த . . முடியாமல் போய்விட்டது

அவள் செய்த கலவரத்தில் கீழே விழுந்த முருகன் படத்தை அங்கு நின்ற ஆரியா கண்டெடுத்து பார்த்தான் உடனே அவனுக்கு தான் போய் வந்த கதிர்காம கந்தனின் ஞாபகம் வந்ததுஎன்று ''ஸ்கந்த தெய்யோ " உடனே அவன் . நர்சுகள் அதை .படத்தைக் கும்பிட்டு கொஞ்சினான் ஆனந்தி அந்தப் படத்த . கவனித்து விட்டார்கள்ை ஆரியாவிடம் இருந்து பறிக்காமல் " நீ கும்புடு .நீ கும்புடு" .என்றாள்

****

அந்த முருகன் பட சம்ம்பவத்தின் பின் ஆனந்தி ஆரிய ரத்தினாவை சந்திக்கும் போது படத்தை அவனிடம் நீட்டி நீ " .''நீ கும்பிடு .கும்பிடுஎன்று சொல்லி படத்தை நீட்டி சிரிப்பாள்அவனும் படத்தை . வாங்கி கண்ணில் ஒத்தி ஸ்கந்த

தெய்யோ என்று சொல்லி கும்பிட்டு திருப்பி படத்தை அவளிடம் கொடுத்து விடுவான்

இருவரும் சந்திக்கும் போது நடக்கும் இந்த நாடகத்தை கவனித்த நேர்ஸ் டாக்டர் மெண்டிசுக்கு அவர்களின் செயலை பற்றி சொன்னாள்.

“அவர்கள் இருவரும் படத்தை கொஞ்சுவதிலும் கும்பிடுவதிலும் மன திருப்தி காண்கிறார்கள் என்றால் அது அவர்களின் மனதுக்கு நல்லதுஅவர்கள் இருவரின் மனதில் . அந்த முருகன் பட பரிமாற்றத்தினால் அமைதி ஏற்பட்டால் அவர்களை அவர்கள் . அது அவர்களுக்கு நல்லதுதானே பாட்டில் விட்டுவிடுங்கள் சில நாட்களுக்குப்பின் என்ன நடக்குது என்று அவதானிப்போம் என்றார் டாக்டர் “ . மெண்டிஸ்

சில வாரங்களில் அவர்கள் இருவரும் சந்தித்த போது நெருங்கிப் பழக தொடங்கினார்கள் டாக்டரின் . கட்டளைப்படி நேர்ஸ்மார் அவர்கள் விசயத்தில் . தலையிடவில்லை

ஒரு நாள் ஆரியரத்தின தன்னை தன் ஒரு விரலால் சுட்டிக் காட்டிஎன்றான் தமிழில் அதைக் ஆனந்தி ”நான் ஆரியா ” கேட்டு தன்னை அதேபோல் சுட்டிக்காட்டி தன் பெயரைச் .அதை கண்டு நேர்ஸ்மார் ஆச்சரியப் பட்டார்கள்.சொன்னாள்

“தங்கள்பெயரை சொல்லித் தங்களை அறிமுகப் படுத்தும் அளவுக்கு இவர்களிடையே மன நிலை சீரடைய தொடங்கி, நட்பு வளரத் தொடங்கி விட்டுதாக்கும் . என்றாள் ஒரு நேர்ஸ் ” ஆரியரத்தினா இரண்டு முறை தமிழில் சண்டை “ “ பதிலுக்கு ஆனந்தி . என்று கூக்குரலிட்டான் ”வேண்டாம் என்று தன் ”அண்ணா செத்து போச்சு .அம்மா . என் அப்பா .இரு கைகளயும் விரித்துக் காட்டினாள்

“அய்யோ நீ பாவம் என்றான் ஆரியா ”

முருகன் பட பரிமாற்றத்தில் ஆரம்பித் நட்பு அவர்களிடையே படிப் படியாக வளரத் தொடங்கியது . தமக்கு கிடைத்த உணவை இருவரும் சில சமயம் பகிர்ந்து ஒரு சமயம் . கொண்டனர், ஆர்யாவுக்கு தாய் கொண்டு வந்து கொடுத்த அப்பத்தை தன் அம்மா தந்தது என்று சொல்லி ஆனந்திக்கு ஊட்டினான் உடனே ஆனந்தி தன் தாயை . .நினைத்து விம்மி விம்மி அழத் தொடங்கினாள்

“ஆனந்தி ஆழாதேஎன்று சொல்லி ஆரியா அவளின் ” ஆனந்தி .கண்களைத் தன் கரங்களால் துடைத்து தேற்றினான் அவன் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு ஓவென்று அழுதாள்,

இருவரினதும் காதல் அவர்களின் மனதில் அமைதியைக் கொண்டு வந்ததை டாக்டரும் நேர்ஸ்மாரும் அவதானித்தனர் .டாக்டரின் மனதுக்குள் மகிழ்ச்சி .

*“காதல் அவர்களின் மன நிலையை சீர் செய்து விட்டது ” .என்றார் டாக்டர்*

*சிலமாதங்களில் அவர்கள் இருவரினதும் மனநிலையில் பெரும் முன்னேற்றத்தைக் டாக்டர் கண்டார் ஆரம்பத்தில் . சில .நட்பாக இருந்த அவர்களின் உறவு காதலாக மாறியது சமயம் ஒருவர் கையை ஒருவர் இறுக்கப் பிடித்தபடியே .ஒருவர் முகத்தைப் பார்த்தபடி வெகு நேரம் இருப்பார்கள் . வாய்கள் பேசாவிட்டாலும் அவர்களின் கண்கள் பேசும்*

*“ஒரு சிங்கள வாலிபனும் ஒரு தமிழ் பெண்ணும் வைத்தியசாலையில் காதலிப்பது அவர்களுக்கு தாங்கள் யார் என்று தெரியாததாலா “? என்று ஒரு நேர்ஸ் சொன்னாள் . வைத்தியசாலையில் வேலை செய்த பலருக்கு அது ஒரு அதிசயக் காதலாகத் தெரிந்தது*

*ஒரு வருடத்தில் ஆர்யா, ஆனந்தி இருவரும் சுயமாக பேசத் தொடங்கினார்கள் அவர்களுக்கு வைத்தியசாலையில் இருந்து விடுதலை கொடுக்க முன், டாக்டர் மெண்டிஸ் அவர்களின் மன நிலையைப் பரிசோதித்து திருப்தி அடைந்து, அவர்கள் இருவரையும் வைத்தியசாலையில் இருந்து வீடு செல்ல அனுமதி கொடுத்தார் அதே நேரம் ஆறு . மாதத்துக்கு ஒரு தடவை இருவரும் தங்கள் ஊர் வைத்தியசாலைக்கு சென்று தங்களின் மன நிலையினை பரிசோதிக்க வேண்டும் என்றார் .*

*ஆர்யாவின் நிலை பற்றி இராணுவத்துக்கு டாக்டர் அறிவித்தார்இராணுவமும் ஆரியாவை அவனின் .*

வீட்டுக்கு அனுப்ப சம்மதித்து ஒரு சக்கர வணடியயும் அவன் இராணுவத்தில் . அவனுக்கு வாங்கிக் கொடுத்தது சேவை செய்த காலத்துக்கு ஏற்ப ஓய்வு ஊதியம் கொடுக்க .ஒழுங்கு செய்தது

ஆர்யாவின் தாய் மகனை வீட்டுக்கு கூட்டிப் போக வைத்தியசாலைக்கு வந்த போது டாக்டர் மெனண்டிஸ்

“அம்மே நீங்கள் இனி உங்கள் மகனை வீட்டுக்கு கூட்டிப் போகலாம். அவர் பூரண குணம் அடைந்து விட்டார் . .என்றார்“ கடுமையான வேலைகள் செய்ய விட வேண்டாம் ஆனந்தியை கூட்டிப் போக ஒருவரும் வரவில்லை டாக்டர் . மெனண்டிஸ் அவளை போரினால் பாதிக்கப் பட்டு அனாதையானவர்களுக்கு வவுனியாவில் இருந்த அனாதைகள் இல்லத்துக்கு அவளைத் திருப்பி அனுப்ப தீர்மானித்தார்

“அம்மே ஆனந்தி எனக்கு வேண்டும் எங்கள் வீட்டுக்கு கூட்டிப் போவோம்ஆர்யா தாயிடம் அடம்பி ”டித்தான்.

தாய் சோமாவதி மகனுக்கு மறுப்பு தெரிவிக்காமல் டாக்டர் மெண்டிசின் அனுமதி பெற்று அவளையும் தங்களோடு கூட்டிக்கொண்டு சென்றாள்.

ஆர்யாவும் ஆனந்தி கைகோத்து சிரித்து பேசியபடி போவதைப் பார்த்த டாக்டர் மெண்டிஸ்

நேர்ஸ்மாரை பார்த்து காதல் புனிதம் என்பதையும ”் அதுக்கு மதம், இனம், சாதி மொழி வித்தியாசம் கிடையாது .

*என் முப்பது .என்பதை இவர்கள் நிரூபித்து விட்டார்கள் வருட சேவையில் இதுவே நான் அறிந்த காதலினால் . என்றார் ''குணமான மனநோயளிகள்*

***(யாவும் புனைவு)***

## *கதை 16*
## *மங்கையம்மாள்*

*முகவுரை .*

*(தனிமை காதலுக்கு வித்திடுகிறதுதனிமையைப் போக்க . விதவை கூட சாதி, இனம் வயது, பாராது காதலிக்கலாம்.; அக்காதல் ஒரு பிராமணப் பெண்;ணின் காதலாகில் ஏற்றுக் கொள்ளச் ( சமுதாயம் தயங்குகிறது .*

*கனடா ஒன்றாரியோ மாகாணத்தில், பீல் பகுதியில் உள்ள மிசிசாகா நகரத்தில், அரசாங்கத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட பத்துமாடி அப்பார்ட்மென்ட் கட்டிடம் அதுஅதில் ., பிரதான வீதியை நோக்கியிருக்கும் 9ஆம் மாடியில் உள்ள ஒரு படுக்கையறை கொண்ட அப்பார்ட்மென்ட்டில் தனிமையில், விதவையாக வாழ்ந்து வந்தாள் மங்கை என்ற மங்கையர்க்கரசி அம்மாள். ''மங்கையம்மாவை அவள் வாழும்''; கட்டிடத்தில் மட்டுமல்ல பக்கத்தில் உள்ள அப்பார்ட்மெண்டுகளில் வாழும் தமிழ்க் குடும்பங்களில் தெரியாதவர்கள் இல்லை. அதற்கு முக்கிய காரணம் மங்கை அம்மாவின் சுவை மிக்க மல்லிகைப் பூ இட்டலி, மெது தோசை, வடை, உப்புமா போன்றவற்றோடு சேர்த்துக்கொள்ளும் சட்டினியும் ஆகும். சமையல் அவளது பொழுது போக்கு மட்டுமல்ல அவளது .தனிமையை ஓரளவுக்குப் போக்கும் ஒரு தொழிலும் கூட*

எல்லோருடைய ஓடர்களையும் அவள் ஏற்றுக் கொள்வது பிராமண வீட்டுச் சாப்பாடு என்றால் அதுக்கு ஒரு .கிடையாது தனி ருசி என நினைத்து வாங்குபவர்கள் பலர்இருந்தாலும் . மங்கை அம்மாள் தன்னால் முடிந்தளவு தனக்குப் பிடித்த .சிலருக்குத்தான் பலகாரம் செய்து கொடுப்பாள்

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில், தனது பெயருக்கேற்ப அரசி போன்ற வாழ்க்கை வாழ்ந்தவள் மங்கைஅவளது . பெயருடன் அம்மாளும் சேர்ந்தபடியால், யாழ்குடாநாட்டில் உயர் குலமாகக் கருதப்பட்ட பிராமணக் குலத்தைச் சேர்ந்தவள் என்பது, அவள் பெயரில் இருந்தே சொல்லித் தெரிய வேண்டியதில்லைதிருநெல்வேலி சிவன் கோயிலின் . பிரதம குருக்களான சுவாமிநாதக் குருக்களின் சிரேஷ்ட .புத்திரி என்ற கௌரவம் வேறு அவளுக்குஇரு சகோதரிகளுடன் பிறந்தவள் அவள்அரசாங்கத்தில் . கணக்காளராக இருந்த சொந்த அத்தை மகன் சுப்பிரமணிய சுப்பிரமணியும் .ஐயரை காதலித்து திருமணம் செய்தவள் மங்கையும் குழந்தைப்பிராயத்தில் எல்லாச் சிறுவர்களும் விளையாடியபோது, தங்களுக்குள் காதல் மலரும், வருங்காலத்தில் தம்பதிகளாகுவோம் என எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்சுப்பிரமணி படித்திருந்தாலும் திருவிழாக்கள் ., பிற விஷேட தினங்கள் வரும் போது கோவில் பூஜையில், மாமனுக்கு பக்கத்தில் நின்று தேவையான உதவிகள் செய்து,

அவரது நல்மதிப்புக்கு பாத்திரமானான்அதுவே அவருக்கு . .மருமகனாகவும் உதவியது

தனது தந்தையின் பூர்வீகத்தைப் பற்றி ஒரு காலத்தில் பெருமையாகப் பேசியவள் மங்கைதென்னிந்தியாவில் . உள்ள இராமேஸ்வரக் கோவிலின் பிரதம குருக்கள் பரம்பரையின் வழி வந்தவர் தன் தந்தை என்பது அவளது அதனால் அதி .விளக்கம்கமாக ஆச்சாரமான வாழ்க்கை வாழ்ந்தவள்மற்றைய இரு சகோதரிகளும் நல்ல இடத்தில் . திருமணம் செய்தாலும் கணவன்மார் கொழும்பில் வேலை அவர்கள் தங்கள் நான்கு பிள்ளைகளுடன் .செய்தபடியால் .சுவாமிநாத குருக்களின் நாற்சார் வீட்டிலேயே வாழ்ந்தார்கள் பத்துப் பரப்புக் காணியில் அமைந்த, பூர்வீகத்தை ஞாபகப்படுத்தும் ஆறு அறைகளைக் கொண்ட பழைய ஓட்டு வீடுமூன்று குடும்பங்களும் கூட்டுக் குடும்பமாக . வாழ்ந்ததினால் குழந்தைகள், பெரியவர்கள் என அந்தப் பெரிய வீடு எப்பொழுதும் நிறைந்திருக்கும்கலகலப்புக்குப் . !பஞ்சமில்லை

மங்கைக்கு திருமணமாகி பத்து வருடங்களாகியும் குழந்தைப் பாக்கியம் கிட்டவில்லைஆனால் அவள் . .அதைப்பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை காரணம் அவளது சகோதரிகளின் நான்கு பிள்ளைகளும்

காலையில் பள்ளிக்கூடம் போவது முதல் .பாசம் தான், இரவு படுக்கைக்கு போவது வரை மங்கைதான் அவர்களுக்கு வேண்டியதைக் கவனித்தாள்அவளது தங்கைமார் . இருவரும் கல்லூரி ஒன்றில் ஆசிரியைகளாகவேலை செய்த படியால் வீட்டுப் பொறுப்பை மங்கைமேல் தாயின் மறைவுக்கு பின்னர் அந்த .போட்டுவிட்டார்கள் வீட்டை நடத்தும் முழுப் பொறுப்பும் மங்கை மேல் விழுந்தது.பகல் நேரம் முழுதும் வீட்டு வேலை . மாலையில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் இரவு நேரத்தில் மட்டும் .கொடுப்பதும் அவள் பொறுப்பு தான் கணவனுடன் பேசும் சந்தர்ப்பம் அவளுக்குக் முன்னரே களைப்பு அவளைக் கண்ணயரச்செய்து விடும். அதிகாலையில் எழுந்து குளித்து, கோலம் போட்டு, பால் கறந்து, காலை உணவு தயாரிப்பது என்று அவள் கடமை தொடர்ந்து கொண்டே போகும்ஓய்வில்லாமல் . மெசினைப்போல் வேலை செய்த அவளுக்குத் தனிமை தந்தையும் .என்பது என்ன வென்று தெரியவில்லை கணவனும், சகோதரி குடும்பத்தினரும் அவள் மேல் வைத்திருந்த அன்பும் மரியாதையும் அவளுக்கு வேலைப்பளு என்றால் என்னவென்று தெரியாமல் வாழச்செய்துவிட்டதுதான் இல்லாவிட்டால் இந்த வீடு . . இயங்காது என்ற நினைவில் வாழ்ந்தாள் மங்கை நேரம் போவது தெரியாது வாழ்க்கை .உண்மையும் அது தான்

நடத்தினாள் மங்கையம்மாள்வீட்டில் இருந்தவர்களுக்கு . மட்டுமல்ல அவளது இனத்தவர்களுக்கும் அவளது சேவை சுப்பிரமணிக்கும் மங்கைக்கும் இடையே .தேவைப்பட்டது உள்ள பாசப்பிணைப்பைக் கண்டு சுவாமிநாதக் குருக்கள் தன் சகோதரியின் மகன் தனது மகள் மேல் .பூரிப்படைந்தார் காட்டும் பாசத்தைப் பற்றி பலருடன் பெருமையாக பேசிக் கொள்வார்ஆனால் அவர் மனதுக்குள் மட்டும் சுப்பிரமணி . மங்கையம்மாள் தம்பதிகளுக்கு இன்னமும் பிள்ளைப் பாக்கியம் இல்லையே என்ற மனக் குறை அவரை ஒரு நாள் மதிய பூஜை .அணுஅணுவாகச் சிதைத்தது முடித்துவிட்டு வீடு திரும்பிய சுவாமிநாதர் தலைசுத்துது தண்ணீர்கொஞ்சம் தா என்று மங்கையிடம் கேட்டு வாங்கி குடித்துவிட்டு கதிரையில் சாய்ந்தவர் தான், பிறகு கண்ணைத் திறக்கவேயில்லை .

தனது மகிழ்ச்சியான வாழ்க்கையில் தந்தையின் மறைவினால் அப்படி திடீரென்று மாற்றம் ஏற்படும் என்று மங்கை எதிர்பார்க்கவில்லைசுவாமிநாதரின் மறைவு . சுப்பிரமணியையும் பாதித்துவிட்டதுஊரில் இருக்க . யுத்த நிலையும் அவனுடைய .அவனுக்கு பிடிக்கவில்லை சுப்பிரமணி .முடிவுக்கு துணைபோயிற்று, தனது நண்பன் ஒருவனுடைய உதவியுடன் அரைமனதான மங்கையோடு கனடாவுக்கு புலம் பெயர்ந்தான்சகோதரிகளையும் . அவர்களது பிள்ளைகளையும் விட்டு பிரிந்து கனடா

போவதற்கு மங்கைக்கு விருப்பமில்லைஆனால் . கணவனையும் பிரிந்து வாழவும் மனம் இடம் .கொடுக்கவில்லை

“அக்கா நீயும் அத்தானும் கனடாவுக்கு போனால்தான் எங்களையும் ஸ்பொன்சர் செய்து அழைக்கலாம்என்று ” சகோதரிகள் அவளுக்குப் புத்திமதி சொல்லி அனுப்பி .வைத்தார்கள்

****

தினமும் வேலை செய்த களைப்பில் ஜன்னல் ஓரமாகப் போய் அமர்ந்தபடி வீதியில் போவோர் வருவோரையும், வாகனங்களையும் பார்த்தபடியே இருப்பது மங்கையின் பொழுதுபோக்குஏதோ மனிதர்களைப் பார்த்தாவது . அதுவும் .தனிமையில் இருந்து விடுபட முயற்ச்சி செய்தாள் பிள்ளைகளுடன் குடும்பமாகப் போவோரைக் கண்டதும் அவளுக்கு ஊரில் வாழ்ந்த கலகலப்பான வாழ்க்கை நினைவுக்கு வந்துவிடும்அவளையறியாமலே கண்களில் நீர் . தொடர்ந்து அவளிடம் இருந்து .வந்து முட்டிக்கொள்ளும் ஹால் சுவரில் மாலையுடன் .பெருமூச்சுக்கள் மாட்டப்பட்டிருக்கும் கணவனின் படத்தை பார்த்து த ிரும்பவும் பெருமூச்சுக்களோடு கண்ணீரும் வெளியாகும்நான்கு வருடங்களுக்கு முன்னர் வாகன . விபத்தொன்றில் சுப்பிரமணியின் உயிர் பிரிந்தபோது மங்கை

வாழ்க்கை வேறு, இப்போது நான் வாழும் தனிமையான வாழக்கை வேறுஒவ்வொரு நாள் இ .ரவும் இருவரும் உணவருந்திவிட்டு உலாவி விட்டு வந்து பின்னர் ஒன்றாக இருந்;து தமிழ்ச் சினிமாப்படங்கள் பார்த்து, கருத்துக்களைப் பரிமாறி, வாய்விட்டுச் சிரித்த நினைவுகள் அவள் மனதை விட்டுப் போகாமல் தேங்கி நின்றதுகுழந்தை ஒன்று தனக்கு . இருந்திருந்தால் தன் நிலமை வேறுதனக்கு . பிள்ளையில்லாத குறையினை அவளது தனிமை தீடிரென .அப்பொழுது தான் அவளுக்கு உணரவைத்தது தனக்குச் சுகயீனம் வந்தால் உதவிக்கு ஒருவரும் இல்லையே என நினைத்த போது அவள் மனதில் ஒருவித பீதி .உருவாகிற்று

தான் வசிக்கும் அப்பார்ட்மென்ட் கட்டிடத்தில் ஐந்தாம் மாடியில் கணவனை விவாகரத்துச் செய்துவிட்டு தனித்து வசித்த ஒரு வெள்ளைக்கார வயோதிபப் பெண் திடீரென்று மரணத்தை தழுவியது யாருக்கும் தெரியாதுஇரு . நாட்களுக்குப் பின்னர் அந்த மாடியில் வீசிய துர்நாற்றம், கட்டிட சுப்பிரீண்டன்டனை அப்பார்ட்மென்ட் கதவை உடைத்து உள்ளே செல்ல வைத்ததுஅந்த சம்பவம் மேலும் . எவருடனும் .மங்கைக்கு பயத்தைக் கொடுத்தது .தொலைபேசியில் தேவையில்லாமல் பேசமாட்டாள் நண்பர்கள் என்று சொல்லுமளவுக்கு எவரும் அவளுக்கு உணவு தயாரித்து கொடுப்பவர்களுடன் கூட .இல்லை

*அளவோடுதான் பேசுவாள், அதனால் அவர்களும் இவளுடன் அவ்வளவாகப் பேசுவது கிடையாதுவாசலில் வைத்தே . பணத்தை வாங்கிக்கொண்டு உணவைக் கொடுத்து .அனுப்பிவிடுவாள்*

*மங்கை ஆசாரம் பார்ப்பவள்அதுவும் சாதி ., மதம் என்ற கோட்பாட்டிற்குள் ஊரில் வாழந்தவள்அதுவும் அவளைத் . அந்தக் கட்டிடத்தில் உள்ள .தனிமைப் படுத்தியது எத்தனையோ தமிழ்க் குடும்பங்கள் தங்களது பிள்ளைகளுக்கு தமிழும் தேவாரமும் சொல்லிக் கொடுக்கும் படி எவ்வளவோ கேட்டும் அவள் மறுத்துவிட்டாள்அதற்கு . காரணம் பல சாதிமக்களை தனது வீட்டுக்குள் அனுமதிக்க தனிமை அவள் மனதில் பயத்தை .அவள் விரும்பியதில்லை எந்த நேரம .அறுபது வயதாகி விட்டது .உருவாக்கியதுும் ஏதும் நடக்கலாம்எவர்கள் இருக்கிறார்கள் தனக்கு . உதவிக்கு? தினமும் சிந்தித்தாள் மங்கைஆனால் தன் . .தனிமையைப் போக்க அவளுக்கு வழி தோன்றவில்லை அப்படி அவள் திண்டாடிக் கொண்டிருக்கும் போது தான் வாரப்பத்திரிகை ஒன்றில் வந்த தனிமையை பற்றிய கட்டுரை அவள் கண்களுக்குப் பட்டதுஅதில் குறிப்பிட்ட சில . .கருத்துக்கள் அவளை சிந்திக்க வைத்தது*

*“உங்கள் தனிமையை நீங்களே உருவாக்குகிறீர்கள்தனிமை ! மனதில் !உங்களை அணுவணுவாகச் சித்திரவதை செய்கிறது*

தேவையில்லாத பயத்தையும் கவலையையும் நேரத்தை எப்படிப் போக்குவது என்று !தோற்றுவிக்கிறது தெர ியாது திகைப்பீர்கள்பல காலம் ஒற்றுமையாக ! ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாது தம்பதிகளாக வாழ்ந்து பின்னர் கணவனையோ அல்லது மனைவியையோ !இழந்தால் நீங்கள் செய்வது அறியாது கலங்குகிறீர்கள் !தனிமை படிப்படியாக உங்களைத் தழுவிக் கொள்கிறது இதற்கு பரிகாரம் காண பல வழிகள் உண்ட ு ஒன்று . தன்னம்பிக்கை, இரண்டாவது தினமும் தியானம் செய்வது, மூன்றாவது நேரத்தைப் புத்தகங்கள் வாசிப்பதிலும் எழுத்துத்துறையிலும் தம்மை ஈடுபடுத்துவது, நான்காவது பலருடன் மனம் விட்டுப் பேசி நல்ல உறவுகளை வளர்த்துக்கொள்வது போன்ற வழிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் மனக் கவலைகளை நீக்குவதோடு தனிமைக்கும் இடமில்லாது செய்து விடலாம்என ” விரிவாகப் பல விடயங்கள் அந்தக் கட்டுரையில் .எழுதப்பட்டிருந்தது

மங்கை திரும்பத்திரும்ப அக்கட்டுரையை வாசித்தாள். அதில் எழுதப்பட்டவை தனக்கே பொருந்துவது போல் நல்ல ஒரு நட்பைத் தேடுவது என .உணர்ந்தாள் தீர்மானித்தாள்தனது கொள்கையையும் மாற்றிக் . அந்த நிமிடத்தில் தான் .கொள்வது என முடிவு செய்தாள்

******

அவள் வாழ்ந்த கட்டடத்தின் ஹாலில் ஒவ்வொரு கிழமையும் தியான வகுப்புகள் நடப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாள்ஒருநாளாவ .து அவ்வகுப்புகளுக்குச் செல்ல அவள் விரும்புவதில்லை. ஆனால் அன்று நடந்த வகுப்பிற்கு மங்கை அம்மாள் சமுகந்தந்திருந்தது அங்கு வந்திருந்தோருக்கு அதிசயமாக ஒரு ஓரமாக வெள்ளைச் சேலையில் இருந்தவள்.இருந்தது, பலரின் கவனத்தை ஈர்ந்தாள் அவள் முகத்தில் ஒரு . அமைதியின்மையும் தெளிவில்லாத நிலையும் பொதிந்து கிடப்பதை தியானம் நடத்துபவர் உணர்ந்து கொண்டார். .ஒவ்வொருவருடையப் பிரச்சனைகளையும் கேட்டறிந்தார் சிலருக்குத் தேகநலப்பாதிப்பு, ஒரு சிலருக்கு தாம் செய்யும் தொழிலில் பிரச்சனை, பலருக்கு குடும்ப பிரச்சனையால் கணவன் மனைவிக்குள் பிரிவுகோபத்தை கட்டுப்படுத்த . மங்கையின் முறை .முடியாதவர்கள் கூட அங்கிருந்தனர் வந்தவுடன் அவர் பேசத்தொடங்க முன்பே அவள் விம்மி தியான வகுப்பு நடத்தும் .விம்மி அழுதே விட்டாள் ஆன்மீகவாதி ஒருவர் அவளை வற்புறுத்திக் கேள்விகளைக் ஆனால் அவளை உற்ற .கேட்டகவில்லைு நோக்கிவிட்டு ஒரு கேள்விமட்டுமே கேட்டார்.

*“அம்மா நீங்கள் யாருடன் வந்தீர்கள்?”* அமைதியாக ஸ்வாமி கேட்டார்.

“தனியாகவே வந்தேன் ஸ்வாமி”, அடக்கமான குரலில் மங்கை பதில் சொன்னாள்.

அவள் நெற்றியில் குங்குமம் இல்லைகழுத்தில் ! நேற்றி !தாலிக்கொடியோ வேறு நகையோ இல்லையில் மெல்லிய கோடாய் இடப்பட்ட திருநீறு மட்டுமே பிரகாசித்ததுவெள்ளை பருத்திச் சேலை . பார்த்தாலே அவள் ஒரு விதவை .உடுத்தியிருந்தாள் என்பதும், பிராமணர் குலத்தைச்; சேர்ந்தவள் என்பதையும் கணிக்க ஸ்வாமிக்கு அதிக நேரம் எடுக்கவில்லைஅவளது . மனதை அவரது எண்ண அலைகள் தொட்டூ, அலசி ஆராய்ந்து விட்டு வந்தது

“அம்மாஉங்களுக்குப் பிரச்சனை தனிமை தானே !? நான் சொல்வது சரியா?”

ஆம் .என்று தலையாட்டினாள் மங்கை !

“உங்களுக்கு பிள்ளைகள் இல்லையா அம்மா?” என்று அவளது ஆழ்மனதை ஸ்வாமி கொஞ்சம் அசைத்துப் பார்த்தபோது, மங்கையம்மாள் திரும்பவும் அழத்தொடங்கினாள்.

“என்னைப்பற்றிச் சொல்ல என்ன இருக்கு ஸ்வாமி? நான் இப்போ யாருமில்லாத ஒரு தனி மரம்என்றாள் ”

மங்கையம்மாள் கண்களை தன் சேலை முந்தானையால் .துடைத்தவாறே

“சரிஅமைதியை நாடி நல்ல இடத்துக்குத்தான் அம்மா ...சரி ... என்று தொடங்கி அவருக்கே உரிய ”...வந்திருக்கிறீர்கள் பாணியல் கனிவான சொல்கோர்த்து மங்கையம்மாவிடம் .ஸ்வாமி பேசத் தொடங்கினார்

“உங்களைப் போன்றவர்களுக்குத் தன்னம்பிக்கை கட்டாயம் தேவை அம்மாபாசத்திலிருந்து விடுபட .ுங்கள் அம்மா! இந்த உலகத்திற்கு நாம் வரும்போது எதுவுமே எங்களுடன் அதே போலத்தான் நாங்கள் !வந்தது இல்லை இந்தப்பூவுலகை விட்டு போகும் போதும் எம்முடன் கூட வருவது நாம் செய்த பாவங்களும் புண்ணியங்களுமே தவிர பொன்னோ, பொருளோ அல்லது உறவுகளோ இல்லை. இவற்றைப் புரிந்து கொண்டு உங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளுங்கள்தனிமையைப் போக்குவதற்கும் . .மனம் தெளிவு கொள்வதற்கும் தியானமும் ஒரு சிறந்த வழி கடந்தகால .எப்போதும் உங்கள் கணவரின் இழப்பையும் வாழ்க்கையைப் பற்றியும் சிந்தித்து கொண்டே ”.நடப்பதை பற்றிச் சிந்தியுங்கள்என்று தியான வகுப்பு நடத்தும் ஸ்வாமி பேசிக்;கொண்டே போகப் போக

மங்கையம்மாளின் உள்ளம் தெளிவு கொள்வது போல் ஒரு மாற்றம் அவள் முகத்தில் தோன்றியது .

தனது வார்த்தைகளில் உள்ள உண்மைத் தன்மைகளை மங்கையம்மாளின் உள்ளம் உள்வாங்கிக் கொள்வதை உணர்ந்த அவர்.

''அம்மாஉங் ..!;களைப் போல் பலர் இவ்வுலகில் வாழ்கிறார்கள்மற்றவர்களுக்கு உதவி செய்வதைப் பற்றி . உங்களுக்காக வாழாமல் பிறருக்காக .சிந்தியுங்கள் பழைய சாதி .வாழுங்கள், சமய, மூட நம்பிக்கைக் கோட்பாடுகளில் இருந்து சற்று விலகி வாழுங்கள்வாசிப்பது . மூலம் அறியாமையைப் போக்கி, அறிவை விருத்தி செய்யுங்கள்உங்களுக்குள் .மனதில் பட்டதை எழுதுங்கள் . தனிமையால் துவண்டு கிடக்கும் சக்தியை தியானத்தின் இது ஒரு மந்திரமோ தந்திரமோ .மூலம் உசிப்பி விடுங்கள் தொடர்ந்து .ஒரு சில நாட்களில் பெறும் பயனுமல்ல .அல்ல தவறாது தியானம் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். .உங்களுக்குள் அமைதியையும் மாற்றத்தையும் காண்பீர்கள் எல்லோருடனும் சாதி .கவலைகள் போய்விடும், மதம் பாராது இனிமையாக பேசப் பழகுங்கள்தனிமை ஓடி . என்று புன்சிரிப்போடு ஒரு சிறு ''மறைந்துவிடும் அறிவுரையை எடுத்து சொன்னார் தியான வகுப்பு நடத்தும் ஆன்மீகவாதி .

அமைதியாய் கேட்டுக் கொண்டிருந்த மங்கை அம்மாளுக்குத் தான் பத்திரிகையில் வாசித்ததும் இவர் சொல்வதும் பொருத்தமாக இருந்தது .

''நிட்சயம் நான் ஒவ்வொரு தியான வகுப்பிற்கும் வருவேன் ஸ்வாமி ''என்னைப் படிப்படியாக மாற்றிக் கொள்கிறேன் .. .என்றாள் மங்கை

*****

மாதங்கள் மூன்று உருண்டோடியதுமங்கை தவறாது தியான . அவள் முகத்தில் பயம் .வகுப்புகளுக்குப் போய் வந்தாள் ஒரு வித சந்தோஷம் .பிரகாசம் தோன்றியது .மறைந்தது அவளுக்குள் துவண்டு கிடந்த சக்தி கொஞ்சம் .தெரிந்தது சந்தோஷத்தின் .கொஞ்சமாக வெளிவரத் தொடங்கியது, மெய்யறிவின் எல்லையைக் காணத் தனது பயணத்தை ஆரம்பித்தாள்.வந்திருப்பவர்களிடம் சிரித்துப் பேசினாள் . தான் ஒரு உயர் குலப் பெண் என்பதைப் படிப்படியாக அவளுக்குள் .கவிதைகள் இயற்றினாள் .மறந்தாள் மறைந்திருந்த திறமை படிப்படியாக வெளிவரத் தியான வகுப்பில் அவள் பாடு .தொடங்கியதும் தேவாரங்களில் ஒரு இனிமை தொனித்ததுதியானத்தின் . .மூலம் மங்கை புதுமனுசியானாள்

****

மாதங்கள் பல சென்றனஇயற்கையோடு உறவாடி தன் . வீட்டுக்கு .தனிமையை நீக்க நினைத்தாள் மங்கையம்மாள் அருகேயள்ள பூங்காவைத் தழுவியபடி ஒரு நீரோடைக்கு

அந்த பாலத்தி .மேல் ஒரு சிறிய பாலம்ன் மேல் நின்றபடி தினமும் தனிமையை போக்கியபடி செல்லும் வாத்துக்களும், அதன் குஞ்சுகளும் நீந்துவது அவளைக் கவர்ந்தது . அவளோடு சேர்ந்து கனேடிய வெள்ளையின முதியவர் தன்னைப்போல் பாலத்தில் .முதியவருக்கும் .கவனித்தாள் நின்ற பெண்ணுக்கும் பறவைகள் மீது ஆசை உள்ளது போல் தோன்றியது .

“அம்மா என்ன நீங்கள் வாத்துகளோடு தனிமையைப் போக்க உறவாடுகிறீர்கள் போல் எனக்குத் தெரிகிறதுஎன்றார் ” ஆங்கிலத்தில புன்னகையோடு அம்முதியவர்

“ ஆம் வாத்துக்கள் சுதந்திரமாய் தன் குஞ்சுகளளோடு நீந்துவதை பார்த்து இரசிக்கிறேன்தினமும் அவைக்கு . அந்த புதிருக்குள் முயல்கள் .உணவு கொண்டுவருவேன் ”குட்டிகளோடு ஓடி விளையாடுவதையும் பார்த்திருக்கிறேன் கனடா .என்று மங்கை பதில் அளித்தாள் ஆங்கிலத்தில் .வந்தபின் அவள் ஆங்கிலத்தில் பேசக் கற்றுக்கோண்டாள்

“அப்படியா? எனது பெயர் ஜோன்நான் ஒரு இளப்பாறிய . சோந்தத்தில் இரண்டு அறைகள் கொண்ட .பொலீஸ்காரன் என் மனைவி பல .பிள்ளைகள் இல்லை .வீடு உண்டு என் .வருடங்களுக்கு முன் புற்று நோயால் இறந்துவிட்டாள்

’’வாழ்கிறேன், என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் அவ்வெள்ளைக்கார முதியவர் .’’

‘‘என் பெயர் மங்கைஅம்மாள்மங்கை என்று என்னை . என்று பதிலுக்கு தன்னை ’’கூப்பிடுவார்கள் ஜோனின் அமைதியான .அறிமுகப்படுத்தினாள் மங்கை பேச்சும், சிரித்த முகமும் அவளுக்கு மிகவும் பிடித்துக்கொண்டது .

சுருக்கமான அறிமுகத்தோடு ஆரம்பித்த அவர்கள் இருவரும், தினமும் பாலத்தில சந்தித்து உறவாடத் தொடங்கினார்கள். மங்கையம்மாள் தான் ஒரு பிராமணப் பெண் என்பதையும், கட்டுப்பாடுகளொடும், தமிழ் கலாச்சாரத்தோடும் வாழ்ந்தவள் என்பதையும், இப்போது கணவனை இழந்து தனிமையாக வாழ்வதை ஜோனுக்கு எடுத்துச் சொன்னாள் .

‘‘ஏன் நீர் உமது தனிமையைப் போக்க என்வீட்டுக்கு வரலாமேபியானோ கூட .நான் நன்றாக சமைப்பேன் .

சற்று சிந்தித்துவிட்டு ஜோனின்அழைப்பினை ’ தனது தோட்டத்து .மங்கையம்மாள் ஏற்றுக்கொண்டாள் அவளும் .அப்பில் ஒன்றை அவளுக்கு ஜோன் கொடுத்தார் .’’தான் சுட்ட வடையைக் ஜோனுக்கு கொடுத்தாள்

வடையைப் பார்த்த ஜோன் இதன்ன கனேடியன் பேகல் "
.என்றார் "போலிருக்கிறதே

"ஆமாம் இது தமிழர்களுடைய பேகல்என்றாள் மங்கை "
.சிரித்தபடி

வடை, அப்பில் பரிமாற்றத் தோடு ஆரம்பித்து அவர்களது உறவு படிப்படியாக வளர்ந்ததுதான் கனடாவுக்கு . ) எல்.எஸ்.வந்தபின்னரே இESL) வகுப்புக்குப் போய்; ஆங்கிலம் கற்றதாக அவள் ஜோனுக்கு சொன்னாள்தான ஒரு . பிராமணத்தி என்றும்அதனால் பழமைவாதியாக வளந்ததாகவும் சொன்னாள்.

"பரவாயில்லை நல்லாகத்தான் ஆங்கிலம் பேசுகிறீர்எனக்கு . ."நீர் தமிழ் சொல்லித் தாரும்நான் ஒரு கத்தொலிக்கன், முன்பு அடிக்கடி சேர்ச்சுக்போவேன்ஆனால் என் மனைவி . "இறந்தபின் சேர்ச்சுக்குப் போவதை நிறுத்திவிட்டேன் என்றார்ஜோன்.

பலர் அவர்களது உறவைப்பற்றிப் பல விதமாகப் பேசிக்கொண்டார்கள்.

"இதென்ன விதவை பிராமணப் தமிழ் பெண்ணுக்கு வெள்ளைக்காரனோடு காதல் வேறாஇதுக்கே ஊரிலை . இருந்து கனடாவுக்கு வந்தவ?" என்று வதந்தி பேசியவர்கள் இருக்கத்தான் செய்தார்கள்.

''நான் தனிமையாக இருக்கும் போது என்னை கவனிக்காதவர்களுக்கு இப்போது அப்படி என்மேல் அச்கரை'', மங்கை சிலரிடம் சொல்லி முறைப்பட்டாள். மங்கையம்மாளும் ஜோனும், தங்கள் உறவைப்பற்றி வந்த விமர்சனங்களைக் கவனத்தில் எடுக்கவில்லை.

மங்கை தான் வாழ்ந்த அப்பாரட்மெணட்டில் வசித்த தமிழ் குடும்பங்களின் தனக்கும் ஜோனுக்குமிடையேலான நட்பைப் பற்றிய விமர்சனங்களையும், வதந்திகளையும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''இந்த வயதிலும் இந்த பிராமண விதவைக்குக் காதலா? அதுவும் ஒரு வெள்ளைக் காரனோடுஎன்று பல '' மங்கையிடம் ஓடருக்கு .குடும்பங்கள் பேசிக்கொண்டார்கள் உணவு வாங்க வரும் வாடிக்கையாளர்கள் கூட வருவதை நிறுத்திக்கொண்டார்கள்தன்னிலையை ஜோனுக்குச் . .சொல்லி மங்கை வருந்தினாள்

''நீர் ஏன் இதற்கு யோசிக்கிறீர்உமது இன மக்கள் எமது . நட்பைப் பற்றி இழிவாகப் பேசினால் பேசி விட்டுப் போகட்டும்;. அவர்களை நம்பியா வாழ்கிறீர்? உமக்கு அப்படி அப்பார்ட்மெண்ட் வாழ்க்கை பிடிக்காவிட்டால் என் வீட்டில் வந்து வாழலாம்.ஒரு தனி அறைவேறு இருக்கு . .எங்கள் இருவரதும் தனிமை போக அதுவே சரியான வழி ''என்ன சொல்லுகிறீர்? ஜோன் மங்கையைக் கேட்டார்.

மங்கைக்கு அது சரியான வழியாகப் பட்டதுமறுக்காமல் . ஜோனின் வேண்டுகோளை மங்கை ஏற்றுக்கொண்டாள்.

ஜோனும், மங்கையும் ஜோன் வீட்டில் புது வாழ்வைத், தனித்தனி அறைகளில் ஆரம்பித்தனர்ஒன்றாகவே சமைத்து . அவர்கள் .வெளியே போய் உலாவி வந்தார்கள்.உண்டார்கள் .அவர்கள் இருவரது தனிமை படிப்படியாக மறைந்தது கணவன் மனைவி என்ற உறவு இல்லாமல் நண்பர்ளாக ஜோனும் மங்கையும் தங்களின் புது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

***( யாவும் உண்மையும் புனைவும் கலந்தது )***

## *கதை 17*
## *சாந்தி*

*என் தங்கச்சி சாந்தி எங்கள் குடும்பத்தில் கடைக்குட்டி. நான் சாந்தன், என் பெற்றோருக்கு மூத்தவன். அடுத்தது எனக்கு இரு வயசு குறைந்த தம்பி காந்தன் அண்ணன்மார் நாங்கள் இருவரும் அவள் மேல் உயிர் . எனக்கும் அவளுக்கும் பதின்ரண்டு வருட வித்தியாசம். அவள் பிறந்த போது அப்பாவுக்கு வயசு ஐம்பத்தி மூன்று..வங்கி ஒன்றில் மனேஜராக வேலை செய்பவர் . அம்மாவுக்கு நாறப்பத்தி எட்டு. தேக நலம் சரி இல்லாததால் தமிழ் ஆசிரியையாக இருந்து ரிட்டயரானவள்*

*"இந்த வயசிலையும் உங்களுக்கு குழந்தை ஆசை விட்டுப் போகவில்லை" என்று எங்கள் அம்மம்மா அடிக்கடி சொல்லுவாள். என் அம்மாவின் அப்பா என் பெற்றோரை எப்பவும் ஆதரித்துப் பேசுவார்*

*"அதுகளிண்டை இளமை இன்னும் குறையவில்லை. ஆசைக்கு ஒரு பெண் குழந்தை , ஆஸ்திக்கு ஒரு ஆண் குழந்தை குடும்பத்தில் வேண்டும். அவர்களைக் கடைசி காலத்தில் கவனிக்கப்போவது எங்கடை கடைக்குட்டி சாந்தி தான் அவர்களுக்கு ஆதரவாக அவர் பேசுவார். முற்போக்குச் சிந்தனை உள்ளவர். அம்மம்மா சரியான பழமைவாதி. சாத்திரம், சம்பிரதாயம், கலாச்சாரம் பார்ப்பவள்.*

*சாந்தி எதைக் கேட்டாலும் நானும் காந்தனும் அவளுக்கு வாங்கிக் கொடுப்போம். சாந்தி படிப்பில் படு சுட்டி. அப்பாவின் செல்லம். தான் நினைத்ததையே செய்வாள் அவள் ஒரு புத்தகப் பிரியை அம்மாவுக்கு அவள் போக்குப் பிடியாது. அடுப்படியில் அம்மாவுக்கு உதவி செய்ய மாட்டாள். நானும் தம்பியும் கேட்டால் மட்டுமே எங்களுக்கு விரும்பியதை சமையல் அறைக்குப் போய் சமைத்துத் தருவாள்.*

*சாந்தி யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பௌதிகத்தில் இறுதி ஆண்டு. முதல் வகுப்பில் சித்தி பெற்று மேலும் படித்து முனைவராக வேண்டும் என்பது அவள் விருப்பம். லண்டன் பல்கலைக் கழகத்துக்கு சென்று வான் வெளி ஆராய்ச்சி (Astro Physics) செய்வது அவள் திட்டம்.*

*"அண்ணா என் விருப்பம் நிறை வேறுமா? நான் பௌதிக பேராசிரியையாக வேண்டும். ஸ்கோலர் ஷிப் கிடைச்சு கேம்ப்ரிட்ஜ் போகவேணும்"*

*"சாந்தி நீ படிப்பதுக்கு நானும் தம்பியும் என்ன உதவியும் செய்வோம். நீ படிப்பில் கவனம் செலுத்து அதுசரி உன்னை பற்றி நானும் என் தம்பியும் ஒரு விசயம் உன் சிநேகிதிகளிடம் இருந்து உன்னைப்பற்றி கேள்விப் பட்டோம் உண்மையா"?*

*"என்ன விசயம் அண்ணா?*

*“உனக்கு இப்ப எவ்வளவு வயசு தெரியும் தானே”?:”*

*” ஏன் அண்னா இப்ப என் வயசைக் கேட்குறீர்கள். விசயத்தை முதலிலை சொல்லுங்கோவன் ”*

*“முதலிலை உன் வயசை சொல்லன்”*

*“உங்களுக்கு தெரியாமலா. எனக்கு இப்ப இருபத்தியொன்று. இன்னும் ஒரு வருஷத்தில் பட்டதாரியாகி விடுவேன்”*

*“உன் பௌதிக பேராசிரியர் அன்டன் ஜெயரத்தினத்துக்கு இப்ப என்ன வயசு”?*

*“போன மாதம் கேக் வெட்டி அவரின் ஐம்பது வயதை எல்லோரும் கொண்டாடினார்கள்”*

*“நான் கேள்வி பட்டேன் அன்று நீ அவர் கன்னத்தில் முத்தம் கூட கொடுத்தாயாமே”?*

*“அதில் என்ன தவறு அண்ணா? அவரை எனக்கு பிடிக்கும் அதனால் கொடுத்தேன்.”?*

*“உன் வயசு என்ன, அவர் வயசு என்ன? அவர் தன் மனைவியை பல வருடங்களுக்கு முன் இழந்தவர். அதன் பின் திருமணமாகாதவர். அவருக்குப் பிள்ளைகள் கூட இல்லை. தனிமையாக தன் சொந்த வீட்டில் தாயோடு வாழ்கிறார் “*

*“அவரைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும் அண்ணா. அவர் வீட்டுக்கு நான் இரண்டு முறை என் படிப்பு விசயமாக போயிருக்கிறேன் அவரோடு இருக்கும் தாயுக்கு எண்பது வயசு. அவவும் ஒரு அறிவியல் பட்டதாரி. நல்ல மனுசி. இவர் அவவுக்கு அன்டன் ஒரே மகன். பத்து வருடங்களுக்கு முன் கணவனை அவ இழந்து விட்டா. பாவம் .இப்ப மகன் தான் எல்லாம் “. .*

*“முக்கியமாக நீ ஒரு உயர் வேளாள இந்து சாதிப் பெண். உன் பூட்டனர் முதலியாராக பிரிட்டிஷ் காலத்தில் இருந்தவர். கோவில் தர்மா கர்த்தா வேறு பேராசிரயர் அன்டன் ஜெயரத்தினம் எங்களைவிட குறைந்த சாதியைச் சேந்தவர் அதோடு கத்தோலிக்கர். வேறு. நீ ஒரு இந்து என்பதை மறக்காதே “*

*“அதுக்கு என்ன அண்ணா? இப்ப ஒரு வரும் சாதி பார்த்து காதலிப்பது குறைவு. இனம் மாறி கூட முடிக்கிறார்கள் அவர்*

ஒரு படித்த பேராசிரியர் . அன்புக்கு, சாதி, மதம், மொழி, வயசு வித்தியாசம், இனம் என்று இல்லை அண்ணா. இரு மனங்கள் ஒத்துப் போனால் எவரும் பிரிக்க முடியாது''

''நீ அவரை விரும்புறாயா சாந்தி ''? என் தம்பி கேட்டான்

''அப்படியும் வைத்துக் கொள்ளுங்கோவன்''.

''அப்பா, அம்மாவுக்கு இது தெரியுமா ''?

''அப்பாவுக்கு ஓரளவுக்குத் தெரியும் அம்மாவுக்கு தெரியாது தெரிந்தால் வீடு இரண்டாகும். அப்பா ஒரு முற்போக்கு வாதி::

''அவர் என்ன சொன்னார்''? நான் சாந்தியைக் கேட்டேன்.

''அப்பா உன் விருப்பம் என்றார் சுருக்கமாக''

''அவர் பேராசிரியர் என்பதற்காக நீ அவரை விரும்புகிறாயா ''
?

''அண்ணா அவரின் பணத்துக்காகவோ படிப்புக்காகவோ நான் அவரை நான் விரும்பவில்லை ''

''பின் எதற்காக அவரை விரும்புகிறாய்? அவருக்கு இப்ப ஒரு மகள் இருந்தால் அவளுக்கு உன் வயசு இருக்கும் . அவர் பல காலம் வாழப் போவதில்லை''

“அவர் என் அப்பாவைப் போல் சீர்திருத்தவாதி. என் அப்பாவை அவரில் காண்கிறேன். அவரின் போக்கு எனக்குப் பிடித்து விட்டது ”

“என்ன சாந்தி எதோ புதுக் கதை சொல்லுறாய்? உன்னில் நானும் அண்ணாவும் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறோம் என்று உனக்குத் தெரியும் தானே . நல்ல இடத்தில் படித்த ஒருவனாய் பார்த்து உனக்கு கலியாணம் செய்து வைக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம்.” என் தம்பி சொன்னான்

“பாவம் புரபெசர். அவருக்கு மனைவி பிள்ளையள் இல்லை. தனி மனிதன். படித்தவர். குடி. சிகரெட் போன்ற கெட்டப் பழக்கங்கள் அவருக்கு இல்லை அண்ணா. என் வருங்காலத்தில் அக்கறை உள்ளவர். அமைதியானவர். கோபம் அவருக்கு வருவதே இல்லை” சாந்தி சொன்னாள்

“இப்ப இளம் பெண்கள் வயசு வந்தவர்களை காதலிப்பது பணத்துக்கும் புகழுக்கும் தான், இது ஒரு பேஷனாக வந்துவிடடது ஏன் அமெரிக்க ஜனாதிபதி டானல்ட் டிரம்பை பற்றி தெரியும் தானே உனக்கு? அவருக்கு எவ்வளவு இளம் வயது வயது மனைவிகள் இருந்தார்கள் என்று . இப்போதைய மனைவியும் இளம் வயது மொடல் . ஆரம்பத்தில் இளம் வயது பெண்களை தொடர்புகொள்வது எளிது. இருபதுகளின் ஆரம்பத்தில், இளைய பெண்கள் தங்களுக்கென அடையாளங்களைக் கொண்டு வந்துள்ளனர்.

அவர்கள் இன்னும் தங்கள் உணர்வுகளை கையாளுவதில். அவர்கள் கவனமாக இருக்க வேண்டும், வெளி தோற்றத்ததை நம்பி ஏமாறக் கூடாது. வயது கூடிய மனிதன் இளம் பெண்களின் உணர்ச்சிகளை திருப்தி படுத்த முடியுமோ என்று எனக்குத் தெரியாது. அது மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாளோ தெரியாது" என் தம்பி சொன்னான்

"அண்ணா அப்பழுக்கில்லாத அன்பை மட்டுமே செலுத்துவதுதான் உண்மையான காதல் என்ற அன்பின் வடிவம். அதுதான் மனிதனை பல்வேறு இடங்களுக்கு உயர்த்திச் செல்கிறது. அந்தக் காதலை உணர்ந்து பாராட்டுகிறாரா, இல்லையா என்பது அப்பாற்பட்ட ஒருவித இதய உணர்வு . காதல் என்பது நிபந்தனைகள் அற்றது. காதலும் காமமும் மனிதனுக்கு இனப் பெருக்கத்திற்காக மட்டும் அல்ல அதையும் தாண்டி ஒரு இறுக்கமும், உண்மையும், புனிதமும் இருக்கிறது. இதைத் தான் சத் குருவும் சொன்னார் ", சாந்தி காதல் பற்றி தன் கருத்தைச் சொன்னாள்

"அப்போ அம்மா அப்பா ஜாதகப் பொருத்தம்., சாதி, மதம் பார்த்து செய்து வைக்கும் திருணத்தைப் பற்றி என்ன சாந்தி சொல்லுகிறாய் ." ? நான் அவளிடம் கேட்டேன்

"அண்ணா ஒன்று புரிந்து கொண்டு, வாழ்க்கையை ஆனந்தமாக்கிக் கொள்ள ஏற்பட்ட அமைப்பு. அதை மறந்து,

அடுத்தவரிடம் என்ன ஆதாயம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் கணவன் மனைவி உறவு அமைந்தால், வாழ்க்கை கொந்தளிப்புகள் நிறைந்ததாகிவிடும். . கோர்ட் வரை போகாவிட்டாலும், குடும்ப அளவிலேயே திருமணம் தோற்றுவிடும். ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, இருவருக்கும் இடையில் அன்பு மட்டும் தீவிரமாக மலர்ந்திருந்தால், வாழ்க்கையின் மேடு பள்ளங்களில் விழுந்தாலும் காயப்படாமல் அறுபது நாளென்ன, அறுபது வருடங்களானாலும் சுகமாக மிதந்து பயணம் செய்ய முடியும்.இப்படி சத்குரு ஈசா சொலியிக்கிறார்''

''அது சரி சாந்தி உங்களின். உறவை பார்த்து சமுகம் கேலி செய்யாதா?தம்பி கேட்டான்

''அது சரி தங்கச்சி உனக்கும் அவருக்கும் உள்ள பொருத்தமான விருப்பங்கள் எவை ''? நான் சாந்தியைக கேட்டேன்

''பல இருக்கு அண்ணா. இருவரும் மாமிசம் உண்பதில்லை . தியானம் செய்வோம், வாசிப்பதும் எழுதுவதும் பிடிக்கும். ஆடம்பரம் இல்லாத உடுப்புகள் என்னைப் போல் அவருக்கும் பிடிக்கும் . அவருக்கு கோபம் வருவதில்லை எதையும் பொறுத்துக் கொள்ளும் மனம் அவருக்கு. அவருக்குப் படித்த பெருமையில்லை. யாரோடும் வம்பு பேசமாட்டார், சைவ உணவு அவருக்கு என்னை போல்

*விருப்பம். உலாவச் செல்வது விருப்பம். ஓய்வு நேரத்தில் தோட்ட வேலை செய்வது அவர்பழக்கம் என்னைப் போல் அவருக்குப் பழங்கள் பிடிக்கும். சுருங்கச் சொன்னால் எங்கள் இருவரினதும் இயற்கை அதிர்வேண்கள் கிட்டத்தட்ட ஒன்று. அதனால் பௌதிகத்தில் சொல்வது போல் எங்களுக்குள் ஒத்த அதிர்வுகள் உண்டு . அதனால் இரு மனங்களும் ஒத்துப் போகிறது. இப்படி பெரிய லிஸ்ட்டே இருக்கு அண்ணா''*

*''அவர் முக்கியமாக பெண்கள் மத்தியில் பிரபலமானவர் என கேள்விப்பட்டேன்'' என்றேன் நான்*

*'' மாணவ மாணவிகளிடம் அவர் அன்பாக நடப்பார். அவ்வளவு தான் '' சிரித்தபடி சாந்தி பதில் சொன்னாள்*

*'' சாந்தி உனக்கு ஒரு அறிவுரை . காதலில் முழு நேரத்தையும் செலவு செய்யாமல் படிப்பில் கவனம் செலுத்தி. முதல் வகுப்பில் பாஸ் செய். என்ன''? நான் சொன்னேன்*

****

*நான் எதிர்பார்த்த மாதிரி சாந்தி முதல் வகுப்பில் பாஸ் செய்து பௌதிகத்தில் பட்டதாரியானாள். நான் எதிர்பார்க்காத விதமாக. அவளுக்குப் பல்கலை கழகத்தில் பௌதீகத்தில் விரிவுரையாளர் வேலை கிடைத்தது. ஆறு மாதத்துக்குள் பேராசிரியர் அன்டன் ஜெயரத்தினத்துக்கும் சாந்திக்கும் பதிவு திருமணம் ரெஜிஸ்றார் ஆபீசில் நடந்தது . நானும் தம்பியும்*

சாட்சிகளாக இருந்தோம். அப்பா வந்திருந்தார். அம்மா வரவில்லை. இனத்தவர்கள் வரவில்லை. சாந்தியோடு படித்தவர்கள் வந்திருந்தார்கள். பேராசிரியரின் தாய் கைகோல் பிடித்த படி தன் மகனின் இரண்டாம் திருமணத்துக்கு வந்திருந்தாள் அவள் சாந்தி கழுத்தில் சிலுவைப் பதக்கம் உள்ள தங்கச்சங்கிலியை தன் பரிசாகப் போட்டாள். அவளுக்காக என் அப்பா வங்கியில் சேமித்து. வைத்திருந்த ஒரு லட்சம.பணத்தை அவளிடம் கொடுத்தார். நானும் தம்பியும் எங்கள் திருமணப் பரிசாக ஆளுக்கு 50,000 ரூபாய் கொடுத்தோம்.. சாந்தி குடித்தனம் செய்ய பேராசிரியர் வீட்டுக்குப் போய் விட்டாள். இந்து,, கதோலிக்க கோவில் திருமணச் சடங்குகள். இடம்பெறவில்லை

*****

என் தங்கச்சிக்க அவள் விருபப்படி திருமணமாகி இரு வருடங்களுக்குள் எங்களுக்கு ஒரு மருமகனைப் பெற்றுக் கொடுத்தாள். எனக்கும் தம்பிக்கும் அப்பாவுக்கும் சந்தோசம்.அம்மா பேரனை பார்க்க அவள் வீட்டுக்குப் போகவில்லை . அவ்வளவு பிடிவாதம் அவளுக்கு. மகன் பிறந்த நேரமோ என்வோ அடுத்த வருடம் சாந்திக்கு லண்டன் போக மூன்று வருட ஸ்கொலர்ஷிப் கிடைத்தது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் படிப்பு . அவள் ஆசை பட்ட மாதிரி நடந்து விட்டது.

"நான் என் செல்ல மகன் செல்வரத்தினத்தை பார்த்துக் கொள்கிறேன். நீ சாந்தி ஒன்றுக்கும் யோசிக்காமல் போய் படித்து முடித்து, முனைவர் பட்டம் பெற்று வா" என்று சொல்லி சாந்தியை வழி அனுப்பி வைத்தார் பேராசிரியர் ஜெயரத்தினம்.

"செல்வமும் ஜெயமும் இனி சாந்தியின் வீட்டை ஆட்சி செய்ய போகினம்" என்றார் அப்பா சிரித்தபடி அம்மா ஒன்றும் பேசவில்லை. முகத்தை நீட்டிக் கொண்டு இருந்தாள்.

:" என்ன' அப்பா அம்மா இப்படி நடக்குறா: நான் அப்பாவைப் பார்த்துக் கேட்டேன்.

" காலம் பதில் சொல்லும் : என்றார் அவரின் வழக்கமான சிரிப்போடு

# *கதை 18*
# *செல்வராணி*

*அரியாலை )Ariyalai) யாழ்ப்பாணத்தில் இருந்து A9 கண்டிவீதியில் ஏறத்தாழ 4 கிமீ தூரத்திலுள்ள இடமாகும். இப்பகுதியில் முன்னொருகாலத்தில் மரஅரிவு ஆலைகள் இப்பகுதி அரியாலை .பல காணப்பட்டதினாலேயே இப்பகுதியில் கல்வி மற்றும் சமூக .என்றழைக்கப்பட்டது யாழ் .வளர்சிகளில் மிகவும் முன்னேறியுள்ளதுப்பாணக் குடாக்கடலை நோக்கித் தவழ்ந்து செல்லும் கடலேரியும் அமைந்திருக்க, மேலும் தென் திசையில் பாண்டியன் தாழ்வு – கொழும்புத்துறையைச் சென்றடையும் வீதியும், மேற்கே கச்சேரி நல்லூர் வீதியும் –, வடக்கே செம்மணிவீதியையும் - எல்லைகளாகக் கொண்டு அழகு மிளிரக் காட்சி தரும ் கிராமம் ஒன்றினைக் காணலாம்*

*அந்தக் கிராமத்தில் பிரபல்யமான வேளாளர் குடியைச் சேர்ந்த செல்வராணி பாட்டிக்கு வயது தொன்னுற்று ஒன்பது என்று சொன்னால் ஒருவரும் நம்பப் போவதில்லை. அவள் பல் .இன்னும் அவளுக்கு ஒரு பல்லும் விழவில்லை தேய்க்க பாவிப்பது வெப்பம் தடி அல்லது ஆலம் விழுது . அவள் இருந்த பூர்வீக வீட்டில் இருந்து இருநூறு யார் .தூரத்தில் கடலேரிக் கரைக்கு அருகே ஒரு பெரிய ஆலமரம் .அம் மரத்துக்கு குறைந்தது நூறு வயதுக்கு மேல் இருக்கும்*

ராணி பாட்டி அந்த தள்ளாத வயதில் அவ்வளவு தூரம் நடந்து சென்று ஆலமரத்தில் உள்ள விழுதை பிடுங்கி பல் தேய்த்து , குளத்தில் குளித்து வருவது அவள் செய்யும் செயல்களில் ஒன்று .ராணி நீச்சல் தெரிந்தவள்.

அவள் வாழும் மூன்று அறைகள் உள்ள வீடு அவளின் தந்தை சங்கரலிங்கம் அவளுக்கு கொடுத்த சீதனம வீடு . செல்வராணியின் புருஷன் ராஜலிங்கம் தெனியாயாவில் உள்ள ஒருதேயிலை தொட்டத்தில் சகல வசதிகளோடு பெரியதுரை என அழைக்கப்படும் சுப்பிரீண்டேண்டனாக வேலை செய்தார் .கால் பந்தாட் வீரர் கூட.அமைதியானவர். அவர் படித்தது பிரபலமான சுண்டுக்குளியில் உள்ள . ..பரியோவான் கல்லூரியில்

செல்வராணி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் படித்து. பத்தாம் வகுப்பு பரீட்சையில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களில் ஏ)A) க்கள் பெற்று, மேலும் படிப்பைத் தொடராது பதினறு வயதான போதே தூரத்து உறவினரான ராஜலிங்கத்தை திருமணம் செய்தவர். சாதிப் பிரச்சனைஅவர்களின் திருமணத்தில் இருக்கவில்லை, காரணம் ராஜலிங்கம் சங்கரலிங்கத்துக்கு தூரத்துச் சொந்தம் . திருமணமாகி பதினைந்து வருடங்களுக்குள் அவள் மூன்று மகன்களையும் இரு மகள்களையும் ராஜாவுக்கு பெற்றுக்கு கொடுத்தாள் அவர்களை வளர்த்து படிப்பித்து நல்ல . இடத்தில திருமணம் செய்து கொடுத்த பெருமை செல்வராணிக்கு சேரும்படிக்கும் போதே தமிழிலும் .

ஆங்கிலத்திலும் சிறுகதைகள் கட்டுரைகள் கவிதைகள் .எழுதுவதில் ஆர்வம் காட்டினாள்

அரியாலை கிராமத்தில் பல பெண்களுக்க பிள்ளைப் பேறு பார்த்த மருத்துவிச்சி ராணி பாட்டியை தெரியாதவர் அவ்வூரில் இல்லைராணி கைராசிக்காரி அவள் கை பட . .பிள்ளை பிறந்தால் ஒரு பிரச்சனையும் தாயுக்கு இருக்காது அதோடு போரினால் பாதிக்கப் பட்ட பெண்களுக்கு ) உளவளத் துணையும்*Counselling)* செய்தாள்போர் . காரணமாக கனடாவுக்கு புலம் பெயரந்தும் அவளின் சேவை .தொடர்ந்தது

தன் ஊரில் ஒரு காலத்தில் செய்த சேவைக்கு அவள் பணம் வாங்கியதில்லை அப்படி இருந்தும் பிரசவம் பார்த்த . குடும்பம் அவளின் மருத்துவிச்சி கூலியையும் ஒரு அவள் நச்சுக் கொடி . சேலையும் கொடுக்கத் தவறுவதில்லை அறுத்த குழந்தையின் காது குத்து விழாவுக்கு அவளை அழைக்கவும் தவற மாட்டார்கள்.

செல்வரராணி கால் சுளுக்கு பார்பதிலும் கெட்டிக்காரி அவள் காலால் பிறந்ததால் அவள் சுளுக்கு பார்த்தால் மூன்று நாட்களில் சுளுக்கு போய் விடும் என்பது ஊர் மக்கள நம்பிக்கை.

தெய்வ நம்பிக்கையும் ஆவி நம்பிக்கையும் வேரூன்றியுள்ள நாட்டுப்புறச் சமூகத்தில் நம்பிக்கை மந்திர மருத்துவமும் தொடர்ந்து இருந்து வருகின்றனஅதனால் சில சமயம் . ராணி பாட்டி பார்வையும் பார்த்து மந்திரித்து தலையில் திருநீறு போட்டால் தேகத்தில் இருக்கும் நோய் ஓடி ஒளிந்து அவளுக்குள் எதோ ஒரு சக்தி இருகிறது இருகிறது .விடும் என்பது ஊர்பேச்சு

இரு காதுகளிலும் பிரகாசமாக மின்னும் பெரிய தோடுகள் . முகத்தில் ஒரு . சுருக்கு விழாத தோல் .மூக்கில் ஒரு மூக்குத்தி . இது தான செல்வராணி பாட்டியின் தோற்றம் .புன்சிரிப்பு

ராணி பாட்டியின் பேரன் ரமணன் ஒரு டாக்டர்மரபணு . பொறியியல் துறையில் மரபணுவால்தோன்றும் நீரழிவு, நீரக வியாதி, புற்று நோய், இருதய நோய் போன்றவற்றின் அடிப்படை காரணத்தைக் காண சில வைத்தியர்களோடு ஆராய்ச்சி செய்து வந்தான்தன் பாட்டியும் அவளின் . தந்தை .பாட்டன் .கொப்பாட்டன் .மூதாதையரான, நீண்ட ஆயுளைக் கொண்டவர்களும்,வியாதிகள் இல்லாது வாழ்ந்தவர்கள் என்பது அவனுக்குத் தெரியும்ஒரு நாள் தன் . பாட்டியோடு அவன் உரையாடும் போது,

“ பாட்டி உங்கள் மூதாதையர் நீண்ட காலம் வாழ்ந்து மரணித்தவர்கள்அவர்கள் இந்துகளான படியால் .

அரியாலையில் உள்ள செம்மணிச் சுடலையில் தகனம் செய்ததாக பாட்டா சொல்லி அறிந்தேன் ”அது உண்மையா .? “உண்மைதான ரமணா நான் படித்த கல்லூரியில் படித்த 19 வயது கிருஷாந்தி என்ற மாணவியை 1996 இல் கூட்டாக இராணுவத்தினர் கற்பளித்து அந்த செம்மணி சுடலையில் அவளையும்அவளின் தாய் ., தம்பிஇன்னுமொரு . உறவினரையும் கொலைகாரர்கள் புதைத்த சம்பவம் எனக்கு இன்றும் என் நினைவில் இருக்கிறதுஅந்த . கற்பளித்து கொலை .மாணவியின் தாயை எனக்குத் தெரியும் செய்த ஆறு பேருக்கு1998 யில் மூன்று நீதிபதிகள் மரணதண்டனை விதித்தார்கள் 19 வருடங்களுக்கு மேலாகியும் அவர்கள் இன்னும் உயிரோடு ஜெயிலில் இருகிறார்கள், காரணம் அவர்கள் இராணுவத்தினர் என்பதால் .

“இது தான் தர்மம் இல்லாத சுய நலம் கலந்த அரசியல்அது . நீங்கள் மக்களுக்கு .சரி பாட்டி இந்த வயதிலும் பாட்டி உங்கள் மரணத்துக்கு பின் .சேவைகள் செய்து வருகுறீர்கள் தொடர்ந்து மக்களின் நீண்ட வாழ்வுக்கு சேவை செய்யலாம் ”அல்லவா?

“நீர் சொல்வது எனக்கு புரியவிலை ராசா, சொஞ்சம் விளங்கத் தான் சொல்லுமேன்.ராணி பாட்டி பேரனுக்கு சொன்னாள் ”

''பாட்டி உங்கள் மூதாதையர் உங்களைப் போல் நீண்ட ஆயுள் உள்ளவர்களாக வாழந்தார்கள்இது என் கருத்துப்படி நீண்ட . .வியாதி இல்லாத வாழ்வு மரபணுவோடு தொடர்புள்ளது இது பற்றிய ஆராய்ச்சியில் மூன்று வைத்தியர்கள் சேர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்உங்கள் மரணத்தின் பின் . உங்கள் உடலை மரபணு போறியியல் மருத்துவ ஆராய்ச்சிக்கு பயன் படுத்த தானம் செய்வதைப் பற்றி நீங்கள் ''ஏன் இன்னும் சிந்திக்கவில்லை?

''நல்ல விஷயம் ஒன்றை பற்றி நீ சொல்லியிருகிறாய் ரமணாஎன் உடல் எரிந்து ஒருவருக்கும் பிரயோசனம் . இல்லாது சாம்பலாக முன் மருத்துவ ஆராய்சிக்கு பயன்படுத்தி வருங்காலத்தில் மானிடர்களுக்கு நீண்ட இதை பற்றி நான் . ஆயுளைக் கொடுக்க உதவட்டும் என்றாள் டாக்டர் ''விரைவில் முடிவெடுக்கிறேன் ரமணனின் ராணி பாட்டி .

****

ஏப்ரல் மாதத்தில் அவளின் நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாட 5 பிள்ளைகள், 10 பெரப்பிள்ளைகள், 4 பூட்டப் பிள்ளைகள் .2 கொப்பாட்டப் பிள்ளைகள், இனத்தவர்கள், ஊர் சனங்கள், ஆக மொத்தம் 51 பேர் கொண்டாட ஆயித்தங்கள் செய்தார்கள்அவள் பிறந்தது முதலாம் உலக . யுத்தம் முடிவுபெற்ற 1918 ஆம் ஆண்டு.

. ராணி பாட்டி ,ஊரில் பல பெண்களுக்கு மருத்துவிச்சி வேலை செய்து குழந்தையின் தொப்புள் கொடி அறுத்த பலர்

இப்போ வைத்தியர்கள், பொறியிலாளர்கள், அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள் ஆசிரியர்கள் . .வணிகர்களாக இருக்குறார்கள்பிரசவம் பார்த்து ஆண் பெண் குழந்தைகளை தாயின் வயற்றில் இருந்து சிசேரியன் ஒப்பரேசன் இல்லாமல் உலகுக்கு கொண்டு வந்தவள் ராணி பாட்டி

****

அனறு 2018 ஏப்ரல் 14 ஆம் திகதி நூறாவது பிறந்த தின விழா கொண்டாட்டம்அவள் பிறந்தது தமிழ் புத்தாண்டு . அவள் வீட .தினத்தில்்டில் ஒரே கூட்டம்கணவனை மூன்று . வருடங்களுக்கு முன்பே அவள் இழந்தும், அவள் விதவை கோலத்தில் சமூகத்தில் தோன்ற அவள் விரும்பவில்லை. முற்போக்கு கொள்கைகள் உள்ளவள். நெற்றியில் உள்ள .வெள்ளை சேலை அணியவில்லை பார்த்தவர்கள் அவளை . நீக்கவில்லை . குங்குமத்தை

அன்று ஜூலை மாதம் வழமை போல் புனர் வாழ்வு என்ற தலைப்பில் சிறு கதை ஒன்றை எழுதி வைத்து, விட்டு இரவு தூங்கப் போனவள், காலையில் கண் விளிக்கவில்லை . நித்திரையில் அவள் விரும்பியது போல் அவளின் உயிர் ராணி பாட்டியின் கட்டிலுக்கு .பிரிந்ததுஅருகில் உள்ள மேசையில் ஒரு கடித உறை இருந்தது அதை மூத்த மகன் . .எடுத்து பிரித்தபோது அதற்குள் ஒரு கடிதம் இருந்தது

அக்கடிதம் ராணி பாட்டி தன் முத்து முத்தான எழுத்தில் எழுதிய ஒரு பக்கக் கடிதம்மகன் அதை எல்லோருக்குமதை . வாசித்துக் காட்டினான்

" இந்தக் கடிதம் நானாகவே தீர்மானித்த பின் எழுதிய கடிதம்நான் என் மரணத்தின் பின் என் உடலை மரபணு . பொறியியல மருத்துவ ஆராய்ச்சிக்குப் பயன் படுத்த தானம் இதற்கான சட்ட ஒழுங்குகளை .செய்து விட்டேன் .ஏற்கனவே என் பேரன் டாக்டர் ரமணன் செய்து விட்டான நான் தேவையான பத்திரங்களில் கையெழுத்து வைத்து விட்டேன்டாக்டர் ரமணனும் அவனின் மனைவியும் . அதற்கு சாட்சிகளாக கையெழுத்து ஏற்கனவே போட்டு என் கணவர் இருந்திருந்தால் அவரும் . விட்டார்கள் அவர் மரணிக்க . சாட்சியாக கையெழுத்து போட்டிருப்பார் முன் அவரோடு பேசி அவரின் சம்மதத்தையும் பெற்று .விட்டேன்

இனி நீங்கள் என் மரண வீட்டுக்கு ஆடம்பரமாக விலை உயர்ந்த சந்தனப் பெட்டி எடுத்துஅதில் என் உடலை மலர் . வலையங்கள் ஓடு பார்வைக்கு வைத்து, வீண் செலவு செய்யவேண்டாம்அந்தப் பணத்தை நான் உளவளத்துணை . செய்த போரினால் பாதிக்கப் பட்ட பெண்கள் வாழும் நிலயத்துக்கு கொடுங்கள்வேண்டும் மென்றால் உங்கள் . விருப்பப்படி எனக்கு நினிவாஞ்சலி வைப்பதில் எனக்கு .ஆட்சேபணை இல்லை

*இப்படிக்கு*

*செல்வராணி ராஜலிங்கம்*

*ராணி பவனம், சுண்டுக்குளி வீதி, அரியாலை*

*யாழ்ப்பாணம்*

## கதை 19

# சின்னத்தங்கம்

மீன்காரி பொன்னி மகள் சினத்தங்கத்துக்கு வயது இருபது. ஊரில் நடக்கும் அழகு ராணி போட்டியில் தங்கம் . பங்கேற்றிருந்தால் அவளுக்குத்தான் தங்கப் பதக்கம் சினிமாக்காரனின் பார்வையில் அவள் பட்டிருந்தால் .பொன்னிக்கு அவள் ஒரே ஒரு மகள்.அவள் வாழ்க்கை வேறு வயது வந்த காலத்தில் மூட்டையைச் சுமந்து கொண்டு யாழ்ப்பாணம் பெ◌ரிய கடைக்குப் போய் மீன் விற்கமுடியாத நிலை பொன்னிக்குபொன்னியின் கணவன் . சின்னையன், பத்துவயது மகளையும், மனைவியையும் நிர்க்கதியாக விட்டு விட்டு, கொழும்புக்கு வியாபாரம் செய்யப் போனவன், போனவன் தான் வீடு திரும்பவே இல்லை.

சின்னையனை கொழும்பில் கண்ட பொன்னியின் தூரத்துச் சொந்தக்காரன் சண்முகம்; சொன்னான் பொன்னி“, உண்டைப் புருஷன் சின்னையன் கொழும்பலை சீலாவதி என்ற பணக்கார சிங்களத்தியோடை குடும்பம் நடத்துவதை நான் கண்டனான்இனி அவன் திரும்பி உன்னிடம் வருவான் . . ”என்று எதிர்பாராதே

“சண்முகா நீ சொல்வது உண்மையாக இருக்கலாம் .நான் எப்பவோ அவனைத் தலை முழுகி விட்டிட்ன்.;,அவன் கட்டிய தாலியைக் கூட கழட்டி எறிந்து விட்டேனேஇப்ப . எனக்கு உறவு எண்டு இருப்பது என் மகள் தங்கம் ஒருத்தி இந்த தள்ளாத வயசிலை நான் பெரியகடைக்கு .மட்டும் தான் கூடையைச் சுமந்து கொண்டு போய் மீன் விற்கமுடியாத இவள .நிலைி தங்கம் தான், மீன் கொண்டு போய்; விற்கிறாள்என்னைவிட அவளிடம் மீன் வாங்க வரும் . அதாலை எதோ .வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகம் வரும் வருமானத்திலை தங்கத்தின்டை கலியாணத்துக்குக் என்று பொன்னி ”காசு மிச்சம் பிடித்துக் கொண்டு வாறன் .சண்முகத்துக்குச் சொன்னாள்

பொன்னி மகள் சின்னத்தங்கம் நளினச் சிரிப்புக்காரி. ஆடவர் கைவீச்சுக்கு அலட்சியப் .நறுக்கென்ற பேச்சுக்காரி காளையரைக் கவரும் கட்டுடலும் .பார்வைக்காரி, திரண்டு புடைத்த பின்னழகும்முத்துபோல் பல்வரிசையும .,; கொவ்வைச் சொண்டுகளும்கிள்ளத் தோன்றும் . தலைமேல் .கன்னங்களும்மீன் கூடையோடு, தாளம் தவறாத நடை யோடு; கைவீச்சும், அதற்கேற்ப அசைபோட்டு ஒடிந்துவிடும் இடை தெரிய, பெரிய கடையை நாடி ஒயிலாகப் தங்கம் போய்ச் சேர்வாள்.

மீன் கடையில் வியாபாரம் செய்த பல பெண்களில் தங்கத்துக்கு; மீன் வாங்க வருபவர்களிடையே ஒரு தனி இடம் இருந்ததுக்கு முக்கிய காரணம் சிரித்து மீனைப் பேரம் பேசும் அவள் அழகுதான்அவள் சிரிப்பிலும்., பார்வையிலும் அவளின் கைப்பட வாங்கும் மீனைச் சமைத்தாலே தனிச்சுவை எனக் கருதி அவளிடம் மீன் வாங்குவதற்காகவே நான் முந்தி நீ முந்தி என்று மல்லுக் கட்டிக் கொண்டு நிற்பார்கள் அவள் அழகை இரசித்தபடி வாடிக்கையாளர்கள். .அதைப் பார்த்து மற்ற மீன்காரிகளுக்குப் பொறாமை வேறு ஆனால் அவள் அருகே இருந்து மீன் வியாபாரம் செய்யும் மீனாட்சிக்கும் மட்டும்; தங்கத்தின் மேல் ஒரு தனிப்பற்று. பஸ்டிரைவராக .காரணம் அவள் உள் நோக்கம் வேறு இருக்கும் ஆண் அழகனான தன் அண்ணன் சுந்தரத்துக்கு தங்கம்தான் பொருத்தமானவள் என்று எப்பவோ மீனாட்சி தன் மனதுக்குள் தீர்மானித்துவிட்டாள்அதனால் அடிக்கடி . தன் தமையன் சுந்தரம் தன் மேல் எவ்வளவுக்குப் பற்றுதல் வைத்திருக்கிறான் என்றும், சிகரட், பீடி ,குடி என்று கெட்ட பழக்கங்கள் அவனுக்கு இல்லை என்றும், சிக்கனக்காரன் என்றும் தமையனை அடிக்கடி தங்கத்துக்கு புகழ்பாடுவாள் மீனாட்சிதங்கம் அதைக் கேட்டும் கேளாதவள் போல் .; தன் வியாபாரத்தில் கவனமாக இருப்பாள்.

மைனர் மாணிக்கம் கழுத்தில் தங்கச் சங்கிலி மின்ன, தன் தங்கப் பல்லைச் சிரித்துக் காட்டியபடி , தினமும் தங்கத்திடம் மீன் வாங்க வரும் முக்கியமான பிரமுகர்களில் ஒருவன் .

“என்ன தங்கம் நீ உடுத்திருக்கிறது புதுச் சீலை போலத் தெரியுது .அதக்கு ஏற்ற பிளவுசு வேறை போட்டிருக்கிறாய் . சீலை .உண்டை நிறத்துக்குப் பொருத்தமான சீலைதான் விலை அதிகமோ? நான் தரட்டே சீலையின்றை காசை”, இளித்தபடி கேட்டான் மைனர் மாணிக்கம் .

“அய்யோ வெண்டாம் மைனர் உம்முடைய காசுநான் . உழைத்து; மிச்சம் பிடித்து வாங்கின சேலை இது ” .நறுக்கென்று தங்கம் மைனருக்கு பதில் சொன்னாள் .முகத்தை சுழித்துக்கோண்டு பேசாமல் போனார் மாணிக்கம்

மாணிக்கம் போன பின், மீன் வாங்க வந்தார் வட்டிக் கடை வடிவேலு“ .என்ன தங்கம் எப்படி இண்டைக்கு வியாபாரம்? அதிக மீன் வாங்கி விற்கக் கடனாய் பணம் வட்டியில்லாமல் நான் தரட்டே ”நீ நினைத்த நேரம் திருப்பித்தாவேன் . .சிரித்தபடி கேட்டார் வடிவெலு

“ஐயோ வேண்டாம் உம்முடைய காசு வடிவேலு ஐயா . அதைச்சாட்டி அடிக்கடி என்னோடை பேச நீர் வருவீர் ”. தங்கம் குனிந்தபடி பதில் சொன்னாள்தங்கம் பார்வை தன் .

மேல் விழாததைக் கண்ட வடிவேலு ஏமாற்றத்தோடு மீன் .வாங்காமல் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்

அடுத்து வந்தார் மீன் வாங்கக் கையில் உமலோடு விதானையார் வினாசித்தம்பிஇரு தடவை திருமணம் . சிெய்து விவாகரத்து செய்தவர்பெண்களைக் கண்டாலே . .சபலப் புத்தி அவருக்கு

"என்ன தங்கம் உண்டை முகத்தில் இண்டைக்கு வாட்டம். வேலை என்ன உனக்கு கனத்துப் போச்சோ? நான் வரட்டே உனக்கு உதவி செய்ய"?. கரிசனையொடு கேட்டார் விதானையார் வினாசித்தம்பி .

" ஐயோ வேண்டாம் விதானையார் எனக்கு உம் உதவிநீர் . நறுக் என்று பதில் சொன்னாள் .கேட்டதுக்கு மிகவும் நன்றி .தங்கம் தன் முகத்தை உம்மென்று வைத்தபடி

"என்ன குஞ்சுவை கனகாலாம் காணோம்காய்ச்சல் ஏதும் . வந்ததோ உனக்கு? டாக்டரிடம் மருந்து வாங்கக் கொண்டு வந்து நான் தரட்டே உனக்குஇது அடுத்து வந்த " .கவலையுடன் கலியாணமாகாத கந்தையர் கேட்டார்

"மருந்தும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம்தினமும் நான் . உமக்கு .மீன் கூடை சுமந்து மீன் விறகக் கடைக்கு வருகிறேன்

*கோபத்தோடு பதில் ''நான் இருப்பது தெரியவில்லையோ .சொன்னாள் தங்கம்*

*அடுத்து மீன் வாங்க வந்தவர் போஸ்ட் மாஸ்டர் சின்னையர். என்ன தங்கம் " அவர் கேட்டார் தங்கத்தைப் பார்த்து கையிலை கிளிட்டு வளையல்? தங்கத்துக்கு இரண்டு பவுனிலை நல்ல தங்க வளையல் நான்உனக்கு வாங்கித்தரட்டே''?.*

*"நீர் முதலிலை உம்முடைய மனுசிக்கு வளையல் வாங்கிக் குடும்நான் அவவுக்கு சொ .ல்லுகிறன நீர் எனக்கு வளையல் வாங்கித்தரவோ என்று கேட்டதாகஎன்றாள் சிரித்தபடி " .தங்கம்*

*ஒன்றும் பேசாமல் முகத்தை நீட்டிக் கொண்டு மீன் வாங்காமல் போனார் சின்னையர்.*

*அடுத்து அவளிடம் வந்தார் நடராசர்.*
*"என்ன விலை கயல்மீன் தங்கம்? மீனின் கண்கள் உன் விழிகள் போல இருக்கிறதேநக்கல் நடராசர் கேட்டார் " .தங்கத்தைப் பார்த்து*

*மீனின் விலையைக் கூட்டிச் சொன்னாள் தங்கம்.*

“உனக்கும் சேர்த்தோ மீனின் விலைஅப்படி என்றால் நீ . என்றார் நடராசர் ”சொன்ன விலைக்கு நான் வாங்கத் தயார்;

.

“நான சொன்ன விலைக்கு நீர் காசு தந்தாலும் மீன் உமக்கு நான் தரப்போவது இல்லை ”.திரும்பிப் போம் வந்த வழியே . கோபத்தோடு பதில் சொன்னாள் தங்கம் .

,

வாடிக்கையாளர்களின் வேடிக்கைக் கேள்விகள் அம்பு போல் அவளைத் தைத்து நின்றனஎன்ன கரிசனம் அவள் மேல் . .அவர்கள் பேச்சில் தான் எத்தனை வம்பு .அவர்களுக்கு

தங்கம் தன் பிளவுசுக்குள்; கையை வைத்தாள்அதைப் . பார்த்த அவள் வாடிக்கையாளர்கள் எல்லோரும் .மார்பகத்தை மறைத்து வைத்திருந்த தாலிக்கொடியை

சத்தம் போட்டு எல்லோரும் கேட்கத் தங்கம் சொன்னாள் அவ .என் புருஷன் தந்த பாதுகாப்பு இது“ர் கையால் கட்டிய தாலியிதுகொஞ்ச .இப்ப நான் ஒருவனுக்குச் சொந்தம் . .நேரத்தில் என் அத்தான் வருவான் என்னைக் கூட்டிப் போக .அப்போ கேளுங்கள் கேள்விகளை அவரிடம் மறக்காமல் .”சரியான பதில்களை அவர் தக்கபடி தருவார்

*கேள்வி கேட்டவர்கள் அனைவரையும் அடுத்த வினாடி அந்த இடத்தில் காணோம்வேறு தங்கத்தை தேடிப்போயினரோ .? தங்கத்தின் மச்சான் வருமுன் விரைந்து ஓடினர்?*

*மீனாட்சிக்கோ தங்கம் சொன்னதைக் கேட்டு ஒரே அதிர்ச்சி . "என்னடி தங்கம்.,உனக்குத் திருமணம் எப்பவடி நடந்தது? உண்மையை எனக்குச் சொல்லடி ."*

*கேள்வி கேட்ட மீனாட்சியைப் பார்த்து கெக்கட்டம் விட்டுச் சிரித்தாள் சின்னத்தங்கம் .*

*"என்ன அக்கா உனக்குத் தெரியாமலா எனக்குத் திருமணம்? விரலி மஞ்சளில் கயிற்றால் கட்டிய தாலியும், ஒரு கொஞ்சம் குங்குமமும் பலர் பார்வையிலும் கொஞ்சலிலுமிருந்து என்னைக் காக்கத்தான் இந்தத் போலித் தாலிஇந்தத் தாலி . ."எனக்குஒருவேலி*

## கதை 20
## கிறிஸ்ரினா

வேலி என்பது சோழர் காலத்தில் நில அளவைக்குப் பாவிக்கப்பட்ட வார்த்தையாகும். யாழ்ப்பாண குடா நாட்டில் சங்குவேலி, நீர்வேலி. திருநெல்வேலி என்று வேலியில் முடிவடையும் கிராமங்களில் பிரசித்தம் பெற்ற ஊர் அச்சுவேலி. அச்சன்வேலி அச்சு வேலியாக மருவி இருக்கலாம். அத்திமரம் அதிகம் காணப்பட்ட ஊர் ஆகையால்இடப்பெயர் வந்திருக்கலாம் என்பதும் பல இடப்பெயர் ஆய்வாளர்கள் கருத்து. யாழ். குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என்ற மூன்று பெரும் பிரிவுகளுக்கும் ' அச்சுப்போல் மைய இடத்தில் அமைந்துள்ள கிராமமாகையால் அச்சுவேலி என்ற பெயர் வந்திருக்கலாம் என்பது இன்னொரு சாராரின் விளக்கம் உண்டு அச்சுவேலி கிராமத்துக்கு அருகே இடைக்காடு, வளலாய், பத்துமேனி ஆகிய கிராமங்களாலும் சூழப்பட்டது. அச்சு என்பது போரத்துகேய சொல். அதனால் அக்கிராமத்தில் போரத்துக்கேயர் ஆட்சியின் போது கத்தோலிக்க மதம் செழித்து இருந்ததற்கு ஆதாரம் இன்றுமுண்டு.

அச்சுவேலிப் பகுதியில் அமைந்துள்ள மூன்று கத்தோலிக்க தேவாலயங்களில் இரண்டாவது பெரிய தேவாலயமாக

விளங்குவது அச்சு வேலி வடக்கு புனித அந்தோனியார் ஆலயம், இந்த ஆலயம் அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் 750 மீற்றர் தூரத்தில் வீதிக்கு வடக்குப் புறத்தில் கம்பீரமாக றோமன் கத்தோலிக்க கட்டிடக் கலை அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

புனித சூசையப்பர் ஆலயம், நவக்கிரி அன்னம்மாள் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம் என்பன அமைந்துள்ளன இக்கிராமத்தில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் மதமாற்றம் நடந்ததுக்கு ஆதாரமுண்டு. இலங்கைக்கு 1505இல் போர்த்துக்கேயரின் வருகை, அதன் பின் 1618இல் ஒல்லாந்தரின் வருகை என்பனவற்றை அடுத்தே ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயங்களின் வியாபகமும் அந்தச் சமயங்கள் சார்ந்த நிலையில் ஆலயங்களும் அமைக்கப்பட்டுக் குறித்த காலகட்ட ஆட்சியாளர்களின் தனித்துவமான செல்வாக்கோடு சுதேசிகள் மத்தியில் பரப்பப்பட்டன. அதற்கு முந்திய காலப்பகுதியில் வடபகுதியில் பெருமளவில் இந்து மதமும், குறிப்பிட்ட நகர்க குடியிருப்புக்களை அண்டிய நிலையில் இஸ்லாம் மதமும் வழிபாட்டுக்குரியனவாக இருந்து வந்தன.

அச்சுவேலிப் பகுதியில் முதன்முதலாக 1800ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரோமன் கத்தோலிக்க சமயம் அச்சுவேலி மேற்கில்

சிற்றம்பலமுதலியரின் மகள் திருமதி மரியம்செட்டியார் காக்கைப்பிள்ளை (டொன்மரியா) குடும்பத்தினர் சார்நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தவகையில் புனித சூசையப்பர் ஆலயமும் அச்சுவேலி மேற்கில் (அச்சுநகர்) நிறுவப்பட்டது. 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் அச்சுவேலிப் பகுதியில் 400 குடும்பங்கள் வரையில் கத்தோலிக்க குடும்பங்களாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

ஊர்ப் பெயர் எப்படி வந்ததாக இருப்பினும் சுற்றி வளைக்காமல் நாம் கதைக்கு வருவோம். அச்சுவேலி ஊருக்கு முதற் தடவையாக வருவோருக்கு நிலக் குறியாக ‘‘அன்னவாசா’’ வீடு பாவிக்கப்பட்டது. ;கிரமத்தில் வாழ்ந்த மக்கள் பலர் பிறாடுகளுக்கு புலம் பெயர்ந்தவர்களின் உழைப்பால் செல்வம் கொழிக்கும் ஊராக வளர்ந்து, பல புது வீடுகள் புதிய பாணியில் தோன்றினாலும் அன்னவாசாவின் தோற்றத்தில் மட்டும்; பழமை பிரதிபலித்து, கம்பீரமாக நின்றது. அன்னவாசா சுமார் நூறு வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட வீடு. குறிப்பாகச் சொல்லப்போனால் 1916 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் ஆட்சியின் போது கச்சேரியில் உயரப் பதவியில் இருந்து முதலியார் பட்டம் பெற்ற முதலியார் இமானுவேல் தேவநேசனால் கட்டப்பட்ட வீடு. வீட்டு வாசலில் ஒன்ற இரு தூண்களின் மேல் இரு அன்னங்கள். அதுவே அவ்வீட்டுக்குப் பெயர் வரக்காரணம்.

அதுவுமில்லாமல் இமானுவேல் அந்த வீட்டை தன் மனைவி மரியாள் அன்னலட்சுமியின் சீதனத்தில் கட்டிய வீடு. மாமனார் அவ்வீட்டுக்குத் தன் மகள் பெயர் நிலைத்து நிற்க பெயர் வைக்கவேண்டும் நிர்ப்பந்தம் செய்ததால் அவ்வீட்டுக்கு அப்பெயரை இமானுவேல் வைக்க வேண்டி வந்தது.

இமானுவேல் தேவநேசன் தம்பதிகளுக்கு அநதோனியார தேவாலயத்தோடு நெருங்கிய தொடர்புண்டு. இமானுவேலுக்கு இரு மகள்கள்;. முத்தவள் பெயர் கிறிஸ்டினா அன்னம்மா. இரண்டாவது மகள் பெயர் லட்டீசா ஜெயமணி. மூத்தமகள் பிறந்தபின்னரே இமானுவேலுக்குச் செல்வம் சேரத் தொடங்கியது. அதனால் தானோ என்னவோ கத்தோலிக்க இந்து மதப் பெயர்களைக் கலந்து மகளுக்கு அந்தப்பெயரைச் சூட்டினார்.

கிரிஸ்டினாவுக்கு அழகுக்குக் குறைவில்லை. தினமும் விதம் விதமான ஆடை அணிவாள். இமானுவேலுக்கு சொந்தத்தில் பச்சை நிறத்தில் ஒஸ்டீன் ஏ40 டெவொன் மொடல் கார இருந்தது, அச்சுவேலியில் சொந்தமாக வாகனம் வைத்திருந்தவர் அவர் ஒருவரே. முதலில் ரிக்சோ, அதன்பின் குதிரை வண்டி வைத்திருந்தார். நாளடைவில் போக்குவரத்துக்குக் காரை வாங்கினார். .அவருக்கு வாகனம் ஓட்டத் தெரியாததால் இடைக்காட்டு ஊரைச் சேர்ந்த

சொந்தக்காரப் பையன் சுப்பிரமணியன் என்ற இந்து இளைஞனை டிரைவராக வைத்திருந்தார். அவனே தினமும் வாகனத்தில் கிறிஸ்டினாவை கல்லூரிக்கு அழைத்துப் போய்வருவான்.

ஆரம்பத்தில் வாகனத்தில் போகும் போது சுப்பிரமணியன் தேவையில்லாமல் கிறிஸ்டினாவோடு உரையாடுவதில்லை காரணம் அவள் எஜமானின் அன்பு மகள்; அல்லவா. வாகனத்துக்குப் பின் சீட்டில் இருந்தபடியே அன்று நடக்க விருக்கும் விஞ்ஞான பாடத்துக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தாள் கிரிஸ்டி

''அடக்கடவுளே. ஏன் தலை விதி. இந்த மூன்று நியூட்டனின் விதிகளும் எனக்குப் புரியுதில்லையே. டீச்சர் கூட வகுப்பில் சரிவர விளஙகப் படுத்தவில்லை'' கிறிஸ்டினா முணுமுணத்தாள் .

அவள் முணுமுணுத்தது கார ஓட்டிக்கொண்டிருந்த சுப்பிரமணியன் காதுகளுக்கு எட்டியது. அவன் சிரித்ததை கிறிஸ்டினா கவனித்துவிட்டாள்.

''ஏன் சிரிக்கிறாய் சுப்பிரமணி ''? கிறிஸ்டினா கேட்டாள்.;.

''ஏன் தங்கச்சி. இண்டைக்கு பிசிக்ஸ் பாடத்தில் உங்களுக்கு டெஸ்டா?

*“ஓம். அது எப்படி உனக்குத் தெரியும்”?*

*“அதில்லை, நியூட்டன் விதிகளைப் பற்றி சொன்னீர்கள் அதுதான்”*

*“ஏன் உனக்கு அந்த விதிகளைப் பற்றி தெரியுமா”?*

*“ஏன் தெரியாமல்? பௌதிக பாடத்தில், வகுப்பில் அதிக மாரக்ஸ் நான் வாங்கினவனாச்சே”*

*“அப்படியா? அதுசரி எது வரை படித்திருக்கிறாய்.“?*

*“ஏ லெவல் வரை”.*

*“அது எனக்கு தெரியாதே. அப்ப ஏன் நீ மேலும் படிக்கவில்லை”?*

*“என் தந்தையார் இறந்த பின் என் தாயாருக்கு என்னைப் படிப்பிக்க பணவசதியில்லை. அப்பா இரண்டு வருஷத்துக்கு முன்பே இறந்துட்டார். அம்மா வீடுகளில் வேலை செய்து என்னையும் என் தங்கச்சியையயம் வளர்க்கிறாள். முதலிலை கார் கராஜ் ஒன்றில் மெக்கானிக்காக வேலை செய்தனான். உங்கள் அப்பாவின் ஏ40 காரை நான் தான் ரிப்பேயர் சேயது கொடுப்பேன். பிறகு உங்கள் அப்பாவிடம் கார் டிரைவராக*

*சம்பளத்துக்கு சேர்ந்தனான்'' விபரம்; சொன்னான் சுப்பிரமணி*

*''உனக்கு நீயூட்டன் மூன்று இயக்க விதிகள் பற்றி நல்லாக தெரியுமென்றால் அந்த விதிகளோடு சம்பந்தப்பட்ட இந்த பௌதிக கணக்கை எனக்கு உன்னால் விளக்கப் படுத்த முடியமா? இந்தக் கணக்கு டெஸ்டுக்கு வரும் எண்டு நினைக்கிறன.''*

*''கணக்கை நான் பார்த்தால் விளங்கப்படுத்த முடியும். ''*

*''அப்ப காரை ஓரமாகக் கோயில் மடத்தடியிலை நிறுத்தி இக்கணக்கை விளங்கப்படுத்து'' கிறிஸ்டினா சுப்பிரமணியிடம் வேண்டினாள்.*

*சுப்பிரமணியனுக்கு கிறிஸ்ரினா கேட்டது ஒரு சவாலாக அமைந்தது.*

*''அதுக்கென்ன தங்கச்சி'' என்று கூறியவாறே காரை கோவில் மடத்தடியில் நிறுத்தினான். கிறிஸ்;ரினா கொடுத்த பௌதிக கணக்கைப் பார்த்ததும் அவனுக்கு வினாவுக்குப் பதில் தெரிந்து விட்டது. உடனே கணக்கு;றக்கான விடையை தெளிவாக கிறிஸ்ரினா விளங்கப்படுத்தினான். கிறிஸ்;ரினா*

சுப்பிரமணிக்கு அவ்வளவுக்கு விஞ்ஞான அறிவு இருக்குமேன ஏதிர்பார்த்திருக்க வில்லை.

பௌதிக கணக்கில் ஆரம்பித்த அவர்களிடேயேலான தொடர்பு, கல்லூரிக்குப் போகும் வழியில் தினமும் சில நிமிடங்கள் கோவில் மடத்தடியில் விஞ்ஞான பாடங்களில் உள்ள சந்தேகங்களை நிவிர்த்தி செய்யும் சந்தர்ப்பமாக அமைந்தது. காலப்; போக்கில் மடத்தடி டியூசன் படிப்படியாகச் சிரித்து பேசித் தொட்டு உரையாடும் அளவுக்கு அவர்களிடையே காதலாக மலர்ந்தது.

நாளடைவில் கிறிஸ்ரினா வகுப்பில் அதிக புள்ளிகள் எடுக்கத்; தொடங்கினாள். விஞ்ஞான பாடம் படிப்பிக்கும் டீச்சருக்கு ஒரே ஆச்சரியம்.

“ என்ன கிறிஸ்றினா முன்பு ஐம்பதுக்குக் குறைவாக மார்க்ஸ எடுத்த நீ இப்போ எண்பது மேலே எடுக்கிறாயே அது எப்படி? டீச்சர் கேட்டார்..

“எனக்குத் தெரிந்த ஆண்டி ஒருத்தி டியூசன் சொல்லி தருகிறா” என்று சொல்லி மலுப்பிவிட்டாள்.

கோவில் மடத்தடியில் கிறிஸ்ரினாவும் சுப்பிரமணியனும் அடிக்கடி சந்தித்து பேசுவதைக் கோயில் ஐயர் சிவசர்மா

கண்டுவிட்டார். அவருக்கு இரு குடும்பங்களையும் தெரியும். இமானுவேல ஒரு திவீர கத்தோலிக்கர் என்பதை அவர் அறிவார்.

பிரச்சனை பெரிதாக முன் ஒரு நாள் அவர் சுப்பிரமணியனை அழைத்து

''இங்கைபார் சுப்பிரமணி நீ இமானுவேல்; முதலியாரிடம் டிரைவராக வேலை செய்வது எனக்குத் தெரியும். அவர் ஒரு தீவர கத்தோலிக்கர். நீயோ ஒரு இந்து மதத்தவன்;. நீயும் முதலியாரின் மகளும் சிரித்துப் பேசி பழகுவது எனக்குச் சரியாக படயில்லை. அதனாலை வீண் வில்லங்கம் தான் வரும். உங்களிடையே இந்தக் காதல் தொடர்ந்தால் முதலியாருக்கு நான் உங்கள் காதலைப் பற்றி முறையிட வேண்டிவரும். அதனாலை வரும் விளைவை உனக்குத் தெரியும் தானே. ஊரிலை மதக் கலவரம் கூடத் தோன்றலாம்''என்று எச்சரிக்கை செய்தார்; ஐயர்.

ஐயரின் அந்த எச்சரிக்கையால் அவர் சந்தித்து பேசும் இ;டம் மடத்தடியில், இருந்து குளத்தடியில் உள்ள ஆலமரத்தடிக்கு மாறியதே தவிர அவர்களின் காதல் தொடர்ந்தது.

ஒரு நாள் வெகு நேரமாகியும் கிறிஸ்ரினா வீடு திரும்பவில்லை. அன்னம்மா கணவனுக்கு முறையிட்டாள்

“என்னங்க பள்ளிக் கூடம் மூன்று மணிக்கு முடிந்து விடும். மூன்றரைக்குள் வீடு வந்து விடுவாள் . இப்ப நேரம் ஐந்தரை. சுப்பிரமணி கிறிஸ்ரினாவை இன்னும் ஸ்கூலாலை கூட்டி வரவில்லை. இவர்களுக்கு என்ன நடந்தது என்று யாரையாவது ஸ்கூலுக்கு அனுப்பி கிரிஸ்ரினாவுக்கு என்ன நடந்தது என்று கேளுங்;கோவன்” பதட்டத்தோடு அன்னம்மா கணவனிடம் முறையிட்டாள்.

கிறிஸ்ரினாவை தேடி இமானுவேல் ஸ்கூலுக்குப் புறப்படும்; போது கிறிஸ்ரினாவின் சினேகிதி வத்சலா ஒரு கடிதத்தை கொண்டு வந்து அவரிடம் கொடுத்தாள்.

“வத்சலா யார் கொடுத்த கடிதம்”? இமானுவல் கேட்டார்.

“உங்கள் மகள் கிறிஸ்ரினா தான் இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொல்லி என்னிடம் தந்தவ” எனறு வத்சலா பதில் சொல்லிவிட்டு அவ்விடத்தில் நின்றால் தனக்கு பிரச்சனை எனக் கருதி நிற்காமல் போய்விட்டாள்.

இமானுவேல் கடிதத்தை கவரில இருந்து எடுத்து வாசித்தார்.

“அன்பான அப்பா, அம்மா சகோதரிக்கு.

என்னை நீங்கள் இனி தேட வேண்டாம். நான் சுப்பிரமணியோடு கொழும்புக்குப் போய் எங்களுக்கு என

*வாழ்க்கையை அமைத்து வாழப்போகிறோம். நூன சுப்பிரமணியை கன காலம் காதலிக்கிறேன். அவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்ற படியால் எங்கள் காதலை நீங்கள் ஏற்கமாட்டீர்கள். கார் கொடிகாமம் ஸ்டேசனில் நிற்கிறது. சாவியை ஸ்டேசனுக்கு முன்னால் உள்ள முருகன் கபே முதலாளியிடம் கொடுத்திருக்கிறோம் வாங்கிக கொள்ளுஙகள். ஏங்களுககுக தெரியும் நாங்கள் இருவரும் வெவ்வேறு மதமாகையால் அச்சுவேலி கத்தோலிக்க மக்கள் நானும் சுப்பிரமணியம் கணவன் மனைவியாக வாழ ஏற்கமாட்டார்கள். அப்பா எங்கள் செலவுக்க அலுமாரியில் இருந்து கொஞ்ச பணம் எடுத்துச் செல்கிறேன். அவர் வேலை எடுத்ததும், அந்தப் பணத்தை உங்களுக்கு அனப்புவார்.*

**இப்படிக்கு**
***கிறிஸ்ரினா – சுப்பிரமணியன்***

*கடிதத்தை வாசித்ததும் அதிர்ச்சியில் நெஞ்சை பிடித்துக்கோண்டு இமானுவல் கதிரையில் அமர்ந்தார். அவர் கையில் இருந்து கீழே விழுந்த கடிதத்தை எடுத்து வாசித்து அன்னம்மாள் ஓ வென்று அழுதாள்.*

*“படு பாவி. செல்லம் கொடுத்து வளர்த்தியளே மோசம் செய்து போட்டு ஓடிப்போயிட்டாளே. எங்கடை மனம் நோக வைத்துப் போட்டு போன உவள் நல்லாய் உவள்*

வாழமாட்டாள்'' என்று திட்டத் தொடங்கினாள் அன்னம்மா. இனத்தவர்கள் கூடி நடந்ததை விசாரித்து எரிகிற நெருப்பிலை எண்ணெய்யை வார்த்தது போல் பேசத் தொடங்கினார்கள். அந்தக் கூட்டத்தில் ஒருத்தி பொலீசுக்கு போய் முறையிடும் படி ஆலோசனை சொன்னாள்

''முறையிட்டால் ஒன்றும் நடக்கப் போவதில்லை. இருவரும் மைனர்கள் இல்லை என்று பொலீஸ் சொல்லிப்போடும்'' என்றார் இமானுவேல. வீட்டு ஹாலில் தொங்கிக் கொண்டிருந்த இருந்த கிறிஸ்ரினாவின் படம் இருந்த இடம் nதிரியாமல் மறைந்தது.

''இனி எப்படி இமானுவேல் ஊரிலை கத்தோலிக்க மக்களிடையே மரியாதையோடு வாழ முடியும்? இனி எப்படி இவள் லட்டீசியாவுக்கு கலியாணம் பேசமுடியும்?. அக்கா டிரைவரோடை ஓடிப்போனவள் என்ற கெட்ட பெயர் இவள் திருமணத்துக்கு தடையாக இருக்குமே''இ அன்னலட்சுமி கண்ணீர் விட்டு கவலைப் பட்டாள்.

****

வருடங்கள் ஐந்து உருண்டோடின. இமானுவேலின் செல்வம் குறையத் தொடங்கியது. வயல் காணியையும், காரையும் விற்றார். பயத்தில் லட்டீசாவை மேலே படிக்க விடவில்லை. சில்லாலை, இளவாலை போன்ற கத்தோலிக்க ஊர்களில் இருந்து லட்டீசாவுக்கு பேசி வந்த திருமணங்கள் தமக்கை

ஒரு இந்து மத டிரைவரோடு ஓடிப்போனவள் என்று கேள்விப்பட்டு

தடைப்பட்டன. தனக்குத் திருமணம் வெண்டாம். தான் கன்னியாஸ்திரீயாகப் போகப் போரன் என்று பெற்றோரை வற்புறுத்தினாள் லட்டீசா. அந்த நேரம்; அந்தோனியார் கோவில் பாதிரியாரின் தூரத்து உறவுப்பையனான சூசைப்பிள்ளை லட்டீசாவை மணமுடிக்க பாதிரியார் மூலம் விருப்பம் தெரிவித்தான்.

ஒரு நாள் ஜோசப் பாதிரியார் இமானுவேலை சேர்ச்சிக்கு அழைத்து

“இமானுவேல் உன் மகளுக்கு அந்தோனியார் வழிகாட்டி விட்டார். எனது தாரத்துச் சொந்தக்காரப் பையனான சூசைப்பிள்ளை நல்ல பிள்ளை. துயிலை மெக்கானிக்காக வேலை செய்கிறான் அவனுக்கு கிறிஸரினாவையும் சுப்பிரமணிக்குக் காதல் பற்று தெரியும். அவர்கள் தான் அவனுக்கு தூபாயிலை மெக்கானிக் வேலை எடுத்துக் கொடுத்து, நல்ல சம்பளத்தில் வேலை செய்கிறான்” என்றார் ஜோசப் பாதிரியார்.

“என்ன பாதர் சொல்லுறியள். லட்டீசீயாவுக்கு மாப்பிள்ளை தானாகவே கேட்டு உங்களிடம் வந்து சொன்னான் என்கிறியளா”?

*“ஓம். சுப்பிரமணி தனக்கு செய்த பெரிய உதவிக்கு இது பிரதி உபகாரமாகத் தான் செய்ய வேண்டும் என்கிறான் சூசைப்பிள்ளை”*

*“அப்ப கிறிஸரினா துபாயிலையா இருக்கிறாள்.”?*

*“ஓம் ஒரு டிரான்ஸ்போர்ட் கம்பனியில் சுப்பிரமணி மனேஜராக இருக்கிறான்.*
*வடமராட்சியில் இருந்து மத வேற்றுமை பாராமல் பத்து பேருக்கு துபாயிலை தன் கொம்பனியிலை டிரைவர் வேலை எடுத்துக் கொடுத்திருக்கிறான்”*

*“அப்ப கிறிஸ்ரினா”?*

*“அவளும் துபாயிலை ஸ்கூல் ஒன்றில் டீச்சராக வேலை செய்கிறாள். சுப்பிரமணி தம்பதிகளுக்கு இரண்டு பிள்ளைகள் என்று சூசைப்பிள்ளை எனக்கு சொன்னான். நீர் என்ன சொல்லுகிறீர்.? லட்டீசாவை சூசைப்பிள்ளைக்கு திருமணம்; செய்து வைக்க உமக்கும் அன்னலட்சுமிக்கும் சம்மதமா? சீதனம் ஒன்றும் கொடுக்கத் தேவையில்லை. ஆனால்...”.*

*“ஆனால் என்ன பாதர்”?*

*“திருமணம் முடிந்த பிறகு துபாயுக்கு லட்டீசாவை, சூசைப்பிள்ளை கூட்டிக் கொண்டு போய் விடுவான். சம்மதம் தானே“?, பாதர் இமானுவலைக் கேட்டார்.*

*சற்று, வினாடி மூக்கில் கை வைத்து யோசித்து விட்டு “ இந்தத் திருமணத்துக்கு எனக்கும் அன்னம்மாவுக்கும் பூரண சம்மதம் பாதர். இந்த சேரச்சிலை திருமணம் உங்கள் ஆசியோடு நடக்க வேண்டும்” என்றார் இமானுவேல்;*

*சேர்ச்சில் இருந்து வீடு திரும்பிய இமானுவேல் செய்த முதற் காரியம் ஸ்டோர் அறைக்குள் தூசி படர்ந்து கிடந்த கிறிஸ்ரினாவின் படத்தைத் தூசித் தட்டி அறை சுவரில் மாட்டியது.*

# *கதை 21*
# *திலகவதி*

*முன்னுரை*

*காதலில் நம்பிக் கெட்ட ஆண்களும் பெண்களும் பலருண்டு . சில பெண்களுக்கு ஏமாற்றங்கள் சவாலாக அமைகிறது அதோடு ஒரு படிப்பினையாகவும் அமைகிறது .அந்தக் கருவில் இது சற்று யதார்த்தமான கதை*

*சங்கீதாவின் அம்மா திலகவதி வாழ்க்கையில் சந்தித்த ஏமாற்றங்கள் பல. அவைற்றில் திலகவதியோடு படித்த சினேகிதி மாலா பணம் இல்லாமல் படிக்கக் கஷ்டப் படும்பொது திலகவதி கொடுத்த பெரும் தொகையான பணத்தோடு ஊரை விட்டு டெல்லிக்குப் போனவள் போனவள்தான்.. அதோடு அவளோடு திலகவதிக்குத் தொடர்பு அறுந்தது அது அவள் வாழ்வில் சந்தித்த முதல் ஏமாற்றம். அதன், பின் பி கொம் இறுதிப் பரீட்சசையில் முதலாம் தரத்தில் சித்தி கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து . இரண்டாம் தரத்தில் சித்தியடைந்தாள் . அதைச் சவாலாக ஏற்றுத் தொடர்ந்து படித்து எம் பி ஏ ( MBA) பட்டம் பெற்றாள். மூன்றாவது ஏமாற்றம் தான் ஆசைப்பட்ட வேலை பிரபல தனியார் நிறுவனத்தில் அதிகாரியாக வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தாள். தன்னை நேர்காணலில் முதலாவதாக தேர்வு செய்த*

நிறுவனத்தின் அதிகாரிகள் இறுதியில் அரசியல்வாதி ஒருவரின் அழுத்தத்தால் அவரின் மகளுக்கு, அதுவும் திலகவதியின் சினேகிதி வனிதாவுக்கு வேலையைக் கொடுப்பார்கள் என அவள் எதிர்பார்க்கவில்லை இவைகளில் இறுதியில் அவள் வாழ்வில் ஏற்பட்ட மிகப் பெரிய ஏமாற்றம் அவளை வெகுவாகப் பாதித்து விட்டது .

தன் பெற்றோர் சுந்தரமும் பார்வதியும் வெளி நாட்டில் பொறியிலாளனாக வேலை செய்யும் மாதவன் என்பவனுக்குப் பேசி வந்த திருமணத்துக்கு உடன் படாது தான் உயிருக்கும் மேலாக இரு வருடங்கள் காதலித்து , தன்னோடு ஒன்றாகப் பல்கலைக்கழகத்தில் படித்த தன் காதலன் ராம்குமார் தன்னை ஏமாற்றி தனக்குச் சொல்லாமல் பிற நாட்டுக்குப் போனது அவளுக்கு மிகப் பெரும் ஏமாற்றம் எந்த நாட்டுக்கு அவன் சென்றான் என்ற என்ற விபரம் கூட அவலாள் கண்டுபிடிக்க முடியவில்லை . அவன் அப்படிச் சொல்லாமல் போனாலும் பரவாயில்லை அவன் தன்னை விட்டுப் பிரிந்து போகும்போது தன் வயிற்றில் மூன்று மாத சிசுவைச் சுமையாக விட்டு அவன் செல்வான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. இரு வருட நட்பின் பரிசு அது. தன் வயற்றில் ஒரு சிசு வளர்வது அவன் புலம் பெயர்ந்து போன பின்பே அவளுக்குத் தெரியவந்தது.

ராம்குமார் திலகவதியை ஏமாற்றி விட்டுப் போக இரு மாதங்களுக்கு முன் . அந்த சம்பவம் நடந்தது அன்று ஒருநாள் ''அரங்கேற்றம்'' என்ற படம் பார்த்து விட்டு இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி, நடந்து வீடு திரும்பும் போது திடீர் என்று இடி மின்னலுடன் மழை கொட்டத் தொடங்கியது. இருவரும் மழையில் நனைந்த படியே ஆள் நடமாற்ற, கட்டி முடியாத ஒரு கட்டிடத்தின் கீழ் ஒதுங்கி நின்றார்கள். மழையில் நனைந்த திலகவதியின் உடலோடு ஒட்டிய வொயில் சாரி அவளின் உடல் அழகை ராம்குமாருக்கு கவரச்சியாகக் காட்டியது . அதே மாதிரி மழையில் தோய்ந்த சேரட்டோடு நின்ற ராம்குமாரின் தேகத்தின் அழகு திலகவதியின் மனதில் ஒரு வித மனக் கிளர்ச்சியைக் கொடுத்தது. இருவரும் தங்களை மறந்தார்கள். அந்த இடி மின்னலில் இருவரும் தங்களை அணைத்துக் கொண்டு முத்தமிட்டார்கள். திலகவதி சில நிமிட சிற்றின்பத்துக்காக தன் கற்பை இழந்தாள். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் மனிதனைத் தவறு செய்ய வைக்கிறது. அதன் பின்னரே தன் தவற்றை மனிதன் உணருகிறான் அன்று தான் அந்த கட்டிடத்தில் திலகவதி தன் கற்பை ராம்குமாருக்குப் பறிகொடுத்தாள் . அந்த சம்பவம் நடந்து சில வாரங்களுக்குள் ராம் குமார் திலகவதிக்குச் சொல்லாமல் வேறு தேசத்துக்கு புலம் பெயர்ந்தான் . அவன் போகும்போது திலகவதிக்கு அவள் வயிற்றில் சிசுவைத் துணைக்கு விட்டுச்செல்கிறான் என்று தெரியாது . அந்த மிகப் பெரிய தவறை தன் நிலை

மறந்து செய்த தவறுக்கு திலகவதி மிகவும் மனம் வருந்தினாள். இரு வருடங்களாகத் தான் காதலித்த காதலன் ராம்குமார் தன்னை இப்படி ஏமாற்றி விட்டு தன்னில் ஒரு களங்கத்தை ஏற்படுத்திவிட்டு சொல்லாமல் போவான் என்று அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை

***

முற்போக்கு கொள்கை உள்ள பிரபல எழுத்தாளினியான அவளின் தாய் பார்வதியும், தந்தை பார்த்திபனும் அவளைத் தேற்றி " திலகா நடந்தது நடந்து விட்டது . இருவரிலும் தவறுண்டு. இனி இதை சவாலாக எடுத்து உன் குழந்தையை வளர்க்கப் பார். இனியாவது ஒருவரையும் நம்பாதே" என்றார்கள்.

திலகவதி திருமணமாகாமல் தன குழந்தை சங்கீதாவோடு வாழத் தீர்மானித்தாள். பெற்றோரும் அவளை திருமணத்துக்கு வற்புருத்தவில்லை சமூகத்தில் பல வித விமர்சனங்களை அவள் எதிர்நோக்க நேர்ந்தது. அவை அவளுக்கு ஒரு சவாலாக அமைந்தது . கீறும் கேளாத மாதிரி நடந்தாள் இனி தான் திருமணம் செய்யப் போவதில்லை என்றும் சங்கீதாவை நாள் ஒழுக்கம் உள்ள பெண்ணாக வளர்க்க வேண்டும் என்று முடிவு எடுத்து., அவளைக் கட்டுப்பாட்டுடன் வளர்த்தாள். .

****

தந்தை பார்த்திபனின் மறைவுக்குப் அவர் நடத்திய ஆடைகள் தைத்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் "திலகாஸ் ஆடைகள்: *(Thilaga's Garments)* என்ற தன் பெயரில் தந்தை உருவாக்கிய ஆடைகள் ஏற்றுமதி நிறுவனத்தின் உரிமைக்காரியானாள் திலகவதி . அந்த நிறுவனத்தில் சுமார் நூறு பேர் வேலை செய்தனர். பல மேற்கத்திய நாடுகளில் அவளின் நிறுவனத்தில் தயாரிக்கும் ஆடைகளுக்கு நல்ல மதிப்புண்டு. அவளின் நிறுவனத்தில் ஆடைகள் தைக்கும் பெண்கள் சிலர் அவளைப் போல் ஆண்களால் ஏமாற்றப்பட்டவர்கள் திருமணமாகாத அவர்களுக்குப் பிள்ளைகளுண்டு . வாழ்கையில் . ஏமாற்றப்பட்ட அவர்களுக்குத் தனிச் சலுகைகள் திலகவதி வழங்கினாள் . அவர்களின் பிள்ளைகளின் படிப்பு, ,வைத்திய செலவு, ஆடை ஆகியவற்றை அவளின் நிறுவனம் ஏற்றது.

தனக்கு பின் தன்னைப் போல் எம் பி ஏ படித்து சந்தை படுத்தும் புதிய முறைகளைக் கற்ற அவளின் மகள் சங்கீதா திலகாஸ் நிறுவனத்தின் மார்க்கடிங் டிரெக்டரானாள் ஆண்களால் ஏமாற்றப் பட்ட பெண்களுக்குத் தொடர்ந்து உதவ வேண்டும் என்பதே திலகவதியின் குறிக்கோள். வியாபார விசயமாகப் பலதடவை கனடா , இங்கிலாந்து அவுஸ்திரேலியா , அமெரிக்கா ஆகிய தேசங்களுக்கு சங்கீதா போய் வந்தாள்

தன் நிறுவனத்தின் ஆடைகளை விற்பனை செய்ய கனடா

டொராண்டோ நகரில் உள்ள பெனிங்டன்,. பே, வோல்மார்ட், லோரா, மதிப்பெண், மார்ஷல்ஸ் ( *Pennington, Bay, Wall Mart, Laura . Marks, Marshals).* போன்ற ஆடைகள் விற்பனை செய்யும் நிறுவனங்களோடு பேச்சு வார்த்தை நடத்தி, பல ஒப்பந்தங்களில் கைச்சாத்து பெற்று வந்தது திலகவதிக்கு பெருமையாக இருந்தது. அதே நேரம் கனடாவுக்குப் போய் திரும்பிவந்த சங்கீதாவின் பேச்சில் ஒரு மாற்றத்தையும் கண்டாள். திலகா தன் மகளைக் கண்டிப்பாக வளர்த்தாள் சந்கீதாவோடு அதிகம் பேசுவதில்லை காரணம் எந்த ஒரு வாலிபனோடு சங்கீதா சினேகிதமாக இருப்பதைத் திலகவதி விரும்பவில்லை. தனக்கு நடந்தது போல் தன் மகளுக்கும் நடந்து விடக் கூடாது என்ற பயம் திலகாவுக்கு . சங்கீதா தன தந்தை பற்றி விசாரிக்கும் போது: உன் அப்பா இராணுவத்தில் மேஜராக இருந்தவர். பாகிஸ்தானோடு நடந்த போரில் இறந்து விட்டார் என்று முழு பொய் சொல்லி நடந்த உண்மையை மறைத்து விட்டாள். வீட்டில் ராம்குமாரின் படம் ஒன்றும் சங்கீதாவின் கண்களுக்கு தெரியாதவாறு திலகவதி செய்துவிட்டாள் அதனால் சங்கீதாவுக்குத் தெரியாத அவளின் தந்தை பற்றிய இரகசியத்தையும், திலகாவின் வாழ்வில் நடந்த சம்பவத்தைப் பாட்டி பார்வதி சங்கீதாவுக்குச் சொல்லி, அதை எக்காரணம் கொண்டும் தாயுக்குத தான் சொன்னதாக அதைச் சொல்லக் கூடாது என்று வாக்குறுதி பெற்றாள்.

கனடாவில் பலரை சங்கீதா சந்தித்தவர்களில் வோல் மார்ட் கொடும்பனியின் ஜெனரல் மனேஜரான வில்லியமும் ஆசிரியையாக இருக்கும் அவனின் தாய் ஜேனும் இருவர் . ஒரு நாள் சங்கீதாவை தன் வீட்டுக்கு இரவு போசனத்துக்கு வில்லியம் அழைத்துச் சென்று தாய் ஜேனை சங்கீதாவுக்கு அறிமுகம் செய்து வைத்தான். ஜேன் சங்கீதாவின் பெற்றோரைப் பற்றி விசாரித்த பொது அவளுக்கு தன் பாட்டி தனக்குச் சொன்னதைச் சொன்னாள். அதற்கு ஜேன் "சங்கீதா நானும் உன் அம்மாவும் ஒரே படகில் பயணம் செய்கிறோம் *(Myself and your mum both are Travelling in the same boat)* என்றாள் ஆங்கிலத்தில் இரட்டைப்பட அர்த்தத்தோடு சங்கீதாவுக்கு. . ஜேனும் தானும் ஒருவனால் ஏமாற்றப்பட்டவள் என்றும் . அவளுக்குப் பிறந்த ஒரே மகன் தான் வில்லியம்ஸ் என்ற விபரம்சொன்னாள். மேலும் விபரம் சொல்ல ஜேன் விரும்பவில்லை . சங்கீதாவும் கேட்க விருப்பப்படவில்லை

கனடாவில் சங்கீதா இருந்த இரு மாதங்களில் சந்கீதாவும் வில்லியம்சும் நெருங்கிய நண்பர்களானார்கள் . அந்த சில வாரங்களில் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காதலிக்கத் தொடங்கினார்கள். ஜேனுக்கும் தன் மகன் சங்கீதாவை காதலித்ததில் ஆட்சேபனை இருக்கவில்லை. ஆனால் அவளொரு நிபந்தனை மகனுக்கு விதித்தாள். :"வில்லியம் நீ எந்தக் காரணத்தைக் கொண்டும் சங்கீதாவை விட்டுப் பிரிந்து போகக் கூடாது " என்பதே அந்த நிபந்தனை . வில்லியம்சும் தாயுக்கு சத்தியம் செய்து கொடுத்தான்.

****

*சங்கீதா ஊர் திரும்பியதும் நடந்த விசயத்தைப் பாட்டி மூலம் தாயுக்கு சொல்லி வில்லியம்சை தான் திருமணம் செய்யச் சம்மதிக்க வைத்தாள். சங்கீதாவின் திருமணத்துக்குத் திலகா சம்மதித்ததுக்கு முக்கிய காரணம் ஜேன் தன்னைப் போல் ஏமாற்றப்பட்டவள் என்பதே.*

****

*சங்கீதாவின் திருமணத்துக்கு ஒரு கிழமை இருக்கும் போது திலகாவுக்கு ஒரு அவசரத் தந்தி சிங்கப்பூரிலிருந்து ராஜா அண்ட் கொலின் (Rajah & Colins Partners) சட்டத்தரணிகளிடம் இருந்து ஒரு அவசர கேபில் வந்தது அதில்*

*"ராம்குமார் சீரியஸ் விரைவில் வரவும். தொடர்புக்கு ( தொலைப் பேசி எண் ராஜா (65) 6868 3030 என்று கேபிலில்இருந்தது . தாமதிக்காமல் திலகா சட்டத்தரணி ராஜாவோடு பேசினாள். அவர் சொன்னபடி ராம்குமாருக்கு இன்னும் சில நாட்களே வாழ்வு என்று சொல்லி, ராம்குமார் இரத்தப்புற்று நோயினால் அவர் கடந்த ஒரு வருடமாக பாதிக்கப்பட்டிருந்தார் என்று ராஜ் திலகாவுக்கு சொன்னார்.*

*தாமதிக்காமல் அடுத்த நாளே திலகாவும், சங்கீதாவும் சிங்கப்பூருக்குப் புறப்பட்டு சென்றனர்.*

*அவர்கள் இருவரையும் விமான நிலையத்தில் ராஜ் சந்தித்து மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்றார்.*

நகுல் வைத்தியசாலையின் புற்றுநோயாளிகளின் வார்டில் ஒரு அறையில் ராம்குமார் அடையாளம் காணமுடியாத வாரை உடல் மெலிந்து, கன்னங்கள் குழி விழுந்திருந்தது அவரின் மூச்சுக்குழாயில் துளையிட்டு செயற்கை சுவாசக் குழாய் பொருத்தப்பட்டு இருந்தது அவர் அசையாது கண்களை மூடியபடி கிடந்தார்.

டாக்டருக்கு திலகவதியும் சங்கீதாவும் வந்த செய்தி போனதும், டாக்டர் சில நிமடங்களில் வார்டுக்கு வந்தார்.

‘"டாக்டர் எவ்வளவு காலம் இவரின் உயிர் நிற்கும்’’ திலகா கேட்டாள் :

" எங்கள் கணிப்புப் படி இன்னும் சில மணி நேரம் மட்டுமே இவர் இருப்பார் இவருக்கு வந்திருக்கும் இரத்தபுற்று நோயுக்கு வைத்தியம் கிடையாது . உங்கள் இருவரையும் அடையாளம் காண்பாரோ தெரியாது: என்ற டாக்டர்.

ராஜா ராம்குமாரின் காதுக்கே பொய் ‘‘ராம் உமது திலகாவும் மகளும் இந்தியாவிலிருந்து . வந்திருகிறார்க்கள் உம்மை பார்க்க". ராஜ சொன்னதைக் கேட்டோ என்னவோ ராம்குமார் சற்று கண் திறந்து பார்த்தார்.

அவரின் உதடுகள் பேசத் துடித்தன ஆனால் அவரால் பேச முடியவில்லை . கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது . தன இரு கரங்களையும் கஷ்டப்பட்டுத் தூக்கிக் கூப்பி இருவரையும் வணங்கிய பின் அருகில் மேசையில் இருந்த

*கடித உறையைச் சுட்டிக் காட்டினர். ராஜாவுக்கு புரிந்து விட்டது அவர் . கவரில் உள்ள உயிலை எடுத்து வாசித்தார். : என் அன்பின் இரு காதலிகள் திலகாவுக்கும் ஜேனுக்கும் ராம்குமார் சுய நினைவோடு எழுதும் உயில் இது: உங்கள் இருவரையும் நான் என் இளமைக் காலத்தில் ஏமாற்றி விட்டேன். நான் மன்னிக்க முடியாத பாவி. என் இளமைத் துடிப்பில் நான் செய்த மாபெரும் குற்றங்கள் இவை . கடவுள் கூட என்னை மன்னிக்க மாட்டார் எனது சொத்துகள் முழுவதும் உங்கள் இருவருக்கும் உங்களுக்கு இருவருக்கும் நான் தந்த பிள்ளைகளுக்கும் போய்ச் சேரும். என்னை நீங்கள் இருவரும் நான் செய்த பிழைகளுக்கு மன்னித்து விடுங்கள்:" உயிலை ராஜா வாசித்து முடித்த பின் திலகவதியால் பேச முடிவில்லை. சங்கீதா உறைந்து போய் நின்றாள். ." அப்போ என் தம்பியையா நான் காதலித்தேன் "?, என்று வாயுக்குள் முணுமுணுத்தாள். அவளால் அதை நம்ப முடியவில்லை. ராம்குமாரின் உயிர் பிரிந்தது. டாக்டர் வந்து பரிசோதித்து விட்டு ராம்குமாரின் மூச்சு நின்று விட்டதாக அறிவித்தார் .. திலகவதியும் சங்கீதாவும் இறந்த ராம்குமாரின் இரு பக்கத்திலும் அசையாது கிடந்த இரு கைகளையும் பிடித்த படியே சுப்பிரபாதம் சொன்னார்கள்*

****